

# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

வைகாசி

2013





வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள்வழி

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

**பொருள் :** நெருப்பினாற் சுட்டபுண் உடம்பில் தழும்பு ஏற்படினும் மனத்தில் ஆறும்; நாக்கினால் கொடிய சொல் சொல்லி சுட்ட தழும்பு மனதிலே புண்ணை உண்டாக்குவதால் ஆறாது. (129)

**கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றி னுழைந்து.**

**பொருள் :** மனத்தில் கோபம் எழாமல் தடுத்துக் கற்கவேண்டிய வைகளைக் கற்று அடக்கம் அடைந்தவனுடைய வழியிலே அறக்கடவுள் சென்று அவனை அடையும் சமயத்தைப் பார்த்திருக்கும். (130)

---

# நற்சிந்தனை




## மறப்பேனோ குருநாதன் தன்னை

### இனியபொருள்

அங்கிங் கெனாம லெங்கு மானபொருள்
அறிவுடை யோர்தேடி யறியும் பொருள்
கங்குல் பகலில் லாமற் காணும்பொருள்
கைகுவிப்பார்க் குய்யவழி காட்டும் பொருள்
பங்கிலே பாதிபெண்ணாய்த் தோன்றும் பொருள்
படர்சடைமேற் கங்கைதிங்கள் வைத்த பொருள்
எங்கும்நாம் சென்றின்னுந் தேடும் பொருள்
இலங்கையிலே பொலிந்திருக்கு மினிய பொருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





| | | |
|---|---|---|
| வைகாசி விசாகம் | திருமதி சி. சரோஜினிதேவி | 01 -03 |
| அறத்தால் வருவதே இன்பம் | குமாரசாமி சோமசுந்தரம் | 04 -05 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 06 -08 |
| சைவ சமயம் என்ன சொல்... | செல்வி பா. வேலுப்பிள்ளை | 09 -12 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 13 -15 |
| சமையல் அறையில் சைவம் | இரா. செல்வவடிவேல் | 16 -19 |
| காளமேகம் பாடல்கள் | – | 20 -23 |
| ஸ்ரீ குருவாயூரப்பன் என்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 24 -26 |
| சிந்தனைக்கு விருந்து | திருமதி ந. பரமேஸ்வரி | 27 -28 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | – | 29 -31 |
| பசுக்களைப் பாதுகாப்போம்... | இராசையா ஸ்ரீதரன் | 32 -33 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 34 -35 |
| வருடாந்த வைகாசிப்..... | – | 36 -37 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 38 -39 |
| நித்திய அன்னப்பணி | – | 40 -41 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 42 -43 |
| சிறுவர் கதைகள் | – | 44 -45 |
| சொன்னால் விரோதமிது... | முருகவே பரமநாதன் | 46 -49 |
| நானேயோ தவஞ் செய்தேன் | சிவ சண்முகவடிவேல் | 50 -52 |
| ஈசா வாஸ்ய உபநிஷதம் | பூ. சோதிநாதன் | 53 -54 |
| கதிர்காம யாத்திரை | – | -55 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 56 -64 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

சித்திரைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை Dr V. பாலகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், சித்திரைமாத ஞானச்சுடர் மலரை வெளியிட்டு வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஞானச்சுடர் மலரானது சைவமக்களது ஞான பொக்கிஷமாக அகில உலகம் முழுவதும் திகழ்கின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

அடுத்து தனது உரையில் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் செய்து வருகின்றது. அந்த வகையில், தினந்தோறும் பசித்து வரும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கிவருகின்றது. மேலும் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" மூலம் மக்கள் பயன்பெற்று வந்ததைப்போல இனிவரும் காலங்களிலும் பயன்பெற வேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

184ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திருமதி தவமலர் சுரேந்திரநாதன் (இளை. அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் மலரானது அழகான அட்டைப் படத்துடனும், உள்ளே கவிதைகள், கட்டுரைகள், பொன்மொழிகள், சிறுவர் கதைகள் எனப் பல்வேறு விடயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்று கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில் இச்சுடரை சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் நிறைவான கருத்துக்களையும், எளிமையான சொற்பிரயோகங்களையும் கொண்டு ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமையிலும் கிரமம் தவறாது வெளியிடப்பட்டு வருகின்றது ஓர் ஆச்சரியமான செயற்பாடு என்று சபையோருக்குக் கூறினார்.

தொடர்ந்து கூறுகையில் பசிப்பிணியைப் போக்குவதற்கென தினமும் அன்னப்பணியை வழங்கி வருவதோடு அறிவுப் பசியைப் போக்குவதற்காக ஞானச்சுடர் எனும் மலரை வெளியிட்டு வருகின்றது. அத்தோடு நோய்பிணியைப் போக்குவதற்காக மருத்துவ சேவையினை நடாத்தி வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள்மூலம் ஒரு மனிதனுக்கு தேவையான சகல விடயங்களையும் ஆச்சிரமமானது செயற்படுத்துகின்றது. இனிவருங் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நாம் வாழ்க்கையில் எதைத் தேடிக்கொண்டு போனாலும் அது மனதுக்கு அமைதியையும், சந்தோஷத்தையும் தரவேண்டும் என்பதற்காகவே தேடுகின்றோம். இப்படி நமக்குக் கிடைக்கும் அமைதியும், சந்தோஷமும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்றோம். பதவி, பணம், அதிகாரம் இவற்றினால் தற்காலிகமான சந்தோஷம் கிடைக்கின்றது. ஆனால் துன்பமும் கூடவே வந்து சேருகின்றது. இப்படிக் கிடைக்கும் சந்தோஷமும், அமைதியும் நிரந்தரமாக இருப்பது இல்லை. வாழ்க்கையில் நாம் எப்போதும் வசதியுடன் இருக்க முடியாது. அதில் உயர்வு – தாழ்வு இருக்கும். உயர்வின் சௌகரியங்களில் மூழ்கி இருப்பவன் தாழ்வு நேர்ந்தால் அதையும் ஏற்கத் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.


மனதுக்கு அமைதி கிடைத்தால் மகிழ்ச்சியும் கூடவே வரும். இப்படி ஓர் அமைதி கிடைக்கத்தான் நாம் மனத்தைக் கட்டுப்படுத்துகின்றோம். இந்த முயற்சிக்கு கடவுள் பக்தி மிகவும் அவசியம். உலகத்தில் நமக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதுபோலத் தோன்றுபவை எல்லாமே பின்னால் துன்பத்தையும் கொடுக்கக் கூடியவை. நம்மை அலைக்கழித்து மன அமைதியைக் கெடுக்கக்கூடியவை. ஆனால் மனதைக் கட்டுப்படுத்தி, ஒருமுகப்படுத்தும்போது அமைதி கிடைக்கின்றது. நாம் நிலையாக நிற்க வேண்டுமானால் அசையாத ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கின்றோம். அதேபோல மனம் தியானத்தில் நிலைக்க வேண்டுமானால் அசையாத பரம்பொருளை நினைத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

எதை நினைத்து நாம் ஆசைப்படுகிறோமோ அதன் சுபாவம் நமக்கும் வந்து சேருகிறது. கடவுளை நினைத்து நாம் தியானம் செய்யும்போது, அந்தப் பரம்பொருளின் பெருமை மிகுந்த குணங்கள் நம்மையும் ஆட்கொள்ளுகின்றன. இதையே நாம் பக்தி என்று சொல்கின்றோம். பற்றுக்களைக் கடந்து நாம் அமைதி பெறவேண்டுமானால் இவற்றுக் கெல்லாம் அப்பாற்பட்ட கடவுளிடம் நாம் பற்றுவைக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் வாக்கு. அப்படி நாம் நன்மைபெற பக்தி அவசியமாகிறது. முக்கியமாகிறது.

இவ்வகைச் செயற்பாடானது தெய்வ அருளுக்கு மிகமிக அவசியமான ஒன்றாகும். தெய்வ நம்பிக்கையுடன் முழுமையாக ஒரு காரியத்தில் ஈடுபடும்பொழுது எம்மால் மேற்கொள்ளப்படும் சகல காரியங்களும் சித்தி பெறும். சீர்பெருகும். முயற்சிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகமெல்லாம் போற்றும் சந்நிதியிற் சண்முகனே



ஆற்றங் கரையுறையும் ஆறுமுகப் பேரழகா
ஏற்றம் புரிந்தெம்மை ஈடேற்றி வைப்பவனே
சாற்றும்பா மாலையினால் சார்ந்ததனைக் கேட்டிடு நீ
போற்றுமென்தன் புந்தியுறை பொருமலையுங் கேட்பாயோ!

செல்வச்சந் நிதியுறையும் சேயேசிவசுப்ர மணியா
நல்லமுதே என்துணையே நற்கடம்பா நல்வேளே
தொல்லைதரும் நாரிப் பிடிப்பொன் றெனைவாட்ட
பொல்லாவதைத் தீராமல் புத்தியா யெங்கொழித்தாய்

சொந்தம்போ லுன்னையான் தோய்ந்தன்பால் வாழ்த்திடவும்
கந்தா கற்பகமே கார்த்திகேயா எங்குற்றாய்
தந்தையாய்த் தாயாகி தமியேனைக் காப்பவனே
எந்தனைப் பிடித்தவிந்நோய் ஏகிடவு மெண்ணாயோ

மார்க்கமே யொன்றின் றி வாட்டுநோயைத் தீர்க்காமல்
கார்த்திகேயர் மேற்கொண்ட கற்பகச்சந் நிதியானே
தேட்டமா யுனைநானே தேடிப்பாடி வைத்திருக்க
நாடாமல் விட்டதேனோ கலந்தெனுடன் நிற்பவனே

சொல்வேறாய் நினைப்புடனே செயல்வேறாய் நிற்பேனோ
எல்லாமா யுலகெல்லாம் எண்ணடியார் துயர் தீர்ப்பாய்
நல்லாய் எனைவருத்தும் நாடகத்தைப் பார்த்துப் பார்த்து
வல்லாய் நீ நிற்பதென்ன வளர்செல்வச் சந்நிதியாய்

வயதோ தொண்ணூற்றொன்பது வாய்த்தவுடல் தாங்காது
அயர்வேனை நீவந்து அபயஞ்செய்தால் ஆகாதோ
நயமாக எத்தனையோ நடுங்கியவர் துயர்துடைப்பாய்
சுயமாய் நோய்நீக்கி சுகந்தருவாய் சுவாமிநாதா.

- முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

P.T. பாலச்சந்திரன்
(அவுஸ்திரேலியா)
Dr T. ஸ்ரீஸ்கந்தராசா
(லண்டன்)
சி. சிவகுமார்
(நாக்கணாவத்தை, அளவெட்டி)
ச. கந்தசாமி
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
மா. நாகலிங்கம்
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)
க. அரியரத்தினம்
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)
ஸ்ரீ கணேஸ்வரன்
(சச்சி மோட்டோர்ஸ் வேக்ஸ், திருநெல்வேலி)
கா. அருந்தவராசா
(பிரதான வீதி, தொண்டைமானாறு)
சி. தங்கவேல்
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)
க. கிருபாகரன்
(சந்தை வீதி, உடுப்பிட்டி)
நா. சுந்தரம்
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர்)
P. சாந்தரூபன் G.S
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)
திருமதி இ. லோகநாதன்
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)
Dr V. பாலகிருஷ்ணன்
(முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)
இ. கணேசலிங்கம்
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. தெட்சணாமூர்த்தி
(மூர்த்தி கட்டுமாணப் பணிப்பாளர், கோண்டாவில்)
S. இராசரத்தினம்
(இளை. பிரதேச அஞ்சல் அத்தியட்சகர், நல்லூர்)
சி.மு. தம்பிராசா
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
த. விக்னேஸ்வரன்
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
அ. தனேஸ்வரன்
(இரசாயனவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
செயலாளர்
(கலையரசி படிப்பகம், 3ஆம் சந்தி, தொண்டைமானாறு)
உரிமையாளர்
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
K. அருள்வேல்
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
ஆ. குலேந்திரநாயகம்
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
கு. ரவீந்திரன்
(அதிபர், பஞ்சசீலம்)
ஐ. கோ. சந்திரசேகரம்
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
செல்வி T. பெரியதம்பி
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
D.M. வேதாரணியம்
(ரதி மஹால், கரணவாய்)
செல்வி ரதிவதனி
(மாயக்கை, தம்பசெட்டி)
திருமதி S. சரஸ்வதி
(குட்டகம்புரை, புலோலி)
சி. குமரகுருநாதன்
(தில்லையம்பலப் பிள்ளையார் வீதி, அல்வாய்)
மாணிக்கம் குட்டித்தம்பி
(வல்லியாவத்தை, கரணவாய்)
திருமதி சீ ஆதவன்
(வல்லிபுரக்கோயில் வீதி, புலோலி)
சாவித்திரி அருணாசலம்
(தும்பளை, பருத்தித்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொன்னுச்சாமி
(அம்மன் கோயிலடி, கரணவாய்)
பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
V. சந்திரராஜா
(நிற்சாமம், சங்கானை)
கு. சிவகுமார்
(மயிலணி, சுண்ணாகம்)
இ. சற்குணராசா
(மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)
வே. கிருஷ்ணராஜா
(C.T.B. மீசாலை)
நி. ஜெயந்தன்
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
வ. இராசையா
(கேணியடி, திருநெல்வேலி)
சு. சந்திரலிங்கம்
(ஆனைக்கோட்டை)
செல்வி அ. வள்ளிநாயகி
(உடுவில் தெற்கு, சுண்ணாகம்)
உரிமையாளர்
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம்வீதி, திருநெல்வேலி)
பொ. கந்தையா
(புருடிலேன், அரியாலை)
செ. கிருஷ்ணராஜா
(கலட்டிவீதி, கோண்டாவில்)
வை. சிற்றம்பலம்
(தேவி வாசம், கொக்குவில்)
செல்வி P. சயிலஜா
(மயிலங்காடு, ஏழாலை)
வரதலிங்கம் செல்வமோகன்
(மோகன் கடை, ஆவரங்கால்)
திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
(பத்தமேனி, அச்சுவேலி)
சுப்பிரமணியம் கந்தையா
(சிவன்வீதி, ஆவரங்கால்)
R. பிரணவன்
(கிளுவானை லேன், கோப்பாய்)
ச. செல்வநாயகம்
(ஜெயபதி வாசா, உரும்பராய் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ. புவிநாதன்
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)
சி. மணிவண்ணன் ஆசிரியர்
(செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு)
ம. செ. சபாநாயகம்
(மாலிசந்தி, கரவெட்டி)
K. வேணுகோபாலு
(வேணி இல்லம், புலோலி)
க. செல்வராசா
(கட்டைவேலி கரவெட்டி)
S. சின்னராஜா
(வல்வெட்டி)
திருமதி S. உமாரதி
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
ஆ. வேலாயுதம்
(உலக்கைஓடை, கம்பர்மலை)
க. சின்னராசா
(சித்தாலயம், அல்வாய்)
செ. ஸ்ரீதரன்
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
சி. மதியழகன்
(திக்கம் அல்வாய்)
பாஸ்கரன் சசிகரன்
(குட்டியப்புலம், வசாவிளான்)
கி. சரஸ்வதி
(போதராமடம், துன்னாலை)
ஐ. சிவஞானம்
(கமலவதி, கரவெட்டி)
அ. சின்னத்தம்பி
(மாய்க்கிராயன், துன்னாலை)
கதிரவேலு சதாசிவம்
(அந்திரான் கரவெட்டி)
ச. ஜெகசோதிராசா
(ஆனைக்கோட்டை மேற்கு)
Dr N. பாலசுப்பிரமணியம்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
த. உருத்திரா
(ஆதவன் மில், புலோலி)
த. முருகானந்தா
(பிரம்படிலேன், கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி விசாகம்

திருமதி சறோஜினிதேவி சிவஞானம் அவர்கள்



சீவவழிபாடு துலங்கு நமது சைவ சமயத்தில் ஒவ்வொரு மாதம் தோறும் வரும் விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள் என்பன இறைவழிபாட்டோடு ஒன்றியதாகும். இவ்வகை வழிபாடு களால் மக்கள் அந்தக்கரண சுத்திபெறுவதோடு தத்துவார்த்த மானதும் பக்திபூர்வமானதுமான ஒருபக்குவத்தை அடைகின் றார்கள் என்பது அனுபவார்த்தமான பேருண்மை யாகும். இவ்வகையில் "வைகாசி மாதமும்" "வைகாசி விசாகமும்" திருமுருக வழிபாட்டிற்கும், திருமுருக வழிபாட்டால் வீடுபேறடைவதற்கும் ஒரு விஷேட விடிவைத் தரும் புண்ணிய மாத விரத மாகும். இது தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் சிறப்புறவே கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதனை யும், இக் காலத்தின் பெண் தெய்வவழிபாட்டினையும் புண்ணியஸ்நானம், புண்ணிய தானதருமம் இவற் றிற்கு வைகாசி சிறந்ததொருமாதம் என்பதனையும், மணிமேகலை காப்பியத்திலும் வைகாசி விசாகத் தின் மாண்பினையும், போதிமாதவன் அடைந்த சிறப்பினையும், செல்வச்சந்நிதியானின் அற்புதத்தையும், அருளும் அற்புதமும் நிறைந்த வைகாசிப் பொங்கலின் சிறப்பின் மாண்பினையும் பார்ப்பதற்கு வாருங்கள் இக்கட்டுரைக்குள் நுழைவோம்.

வைகாசி மாதமானது விசாக நட்சத்திரத்தில் பூரணை சேர்ந்து வரும் மாதமானதால் சிறப்புப் பெறுகின்றது. அத்தோடு சூரியன் இடப ராசியில் வரும் இம்மாசத்தின் "விசாக நட்சத்திரநன்நாள்" முருகப்பெருமானுக்கு மிகவும் உகந்த நன்நாளா கும். சித்திரையும், வைகாசியும் இளவேனிற்கால மாகும். இளவேனிற்காலம் ஆலய விழாக்களுக்கும் இயைந்தவொரு மிகவும் சிறப்புடைய காலமாகும். இந்த இளவேனிற்காலத்திலே இலங்கையில் மாத்திரமல்ல தமிழகத்திலும் விழாக்கள் நடைபெறும் சிறப்பினைப் பெறுவது வைகாசி மாதமேயாகும். மேலும் பழமரங்களெல்லாம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காய்த்துக் கனிந்து தித்திக்கும் சுவையைக் கொடுக்கும் மாதமும் வைகாசியேயாகும்.

முருகப்பெருமானுடைய ஜனன நட்சத்திரம் விசாக நட்சத்திரமாகும். இதனால் முருகப்பெருமான் "விசாகன்" என்றழைக்கப் படுகின்றான். அஷ்டோத்திரத்திலும் விசாகன் என்று போற்றப்படுகின்றான். வைகாசி விசாகத் திலன்று திருச்செந்தூர் முருகனுக்கு பன்னீர் அபிஷேகம் செய்வது வழக்கமான ஒன்றாக இருந்து வருகின்றது. அத்தோடு பெரும்பாலான முருகன் ஆலயங்களில் வைகாசி விசாக நாள் சிறப்பானதொரு அபிடேக நாளாக அமைந் துள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்நாளில் மண்டல பூசை செய்து வில்வ சமித்தினால் ஓமம் செய்து ஸ்நபன கும்பபூசை செய்து கஸ்தூரி பச்சைக் கற்பூரம் முதலிய பரிமளத்திரவியங்களுடன் பன்னீரும் சேர்க் கப்பட்ட நறுமணப் பொருட்களால் மூலமூர்த்தி யாயிருக்கும் முருகப்பெருமானிற்கு திருமஞ் சனம் செய்விக்கும் மெய்யன்பர்கள் அடையும் பயன் "சாயுச்சியமாம்" இந்த வகையிலேதான் அதிகமான முருகன் ஆலயங்களில் தீர்த்த உற்சவம் வைகாசி விசாகத்திலேயே நடை பெறுவது கண்கூடாயுள்ளது. அதுமட்டுமல்ல சிவபெருமான் இளையோனாய் (முருகனாய், விசாகனாய்) வந்துதித்த நன்னாளும் "வைகாசி விசாக" நட்சத்திர நன்னாளேயாம். ஆகவே "வைகாசி விசாக" நன்னாள் முருகனைப் போற்றி வணங்க அருள்கடாட்சத்தினை நிறைவுறப் பெற சிறந்த நாளுமாகும். முருகப்பெருமான் "தந்தைக்குச்சற்குரு" உலகோர்க்கும் சற்குருவு மேயாம் என்பதே உண்மையுமாகும். விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கட்கு குருதிசையே தொடக்கத் திசையாகும்.

யாழ்ப்பாணம் கந்தப்புராண கலாச் சாரத்திலே ஊறித்திளைக்கின்றது. அங்கே கந்தன் பெருமை மிளிர்கின்றது. காங்கேயன் துறையிலிருந்து கதிர்காமம் வரையிலும் பிர பல்யம் வாய்ந்த சாந்தியம் நிறைந்த முருகன் கோயில்கள் உண்டு. அதிலே தொண்டை மானாறு செல்வச்சந்நிதியும் ஒன்று. செல்வச் சந்நிதி என்பதன் பொருள் ஸ்ரீ முருகப்பெரு மானுடைய திருவருள் செல்வம் நிறைந்த இடம் என்பதாகும். (செல்வச்சந்நிதி) அன்ன தானக் கந்தனருள் பொங்கி வழியும் செல்வச் சந்நிதியிலே "வைகாசி விசாகப்" பெருவிழா சிறப்புடையதாகும்.

இதேபோல் இன்னுமொரு வைகாசி விசாக சிறப்பினைப் பார்ப்போம். "அமுதசுரபி" என்னும் அட்சய பாத்திரம் எத்தனை பேரு டைய பசிப்பிணியைத் தணிப்பதற்கும் உணவு சுரக்கும் வல்லமையுடையது. இந்த "அமுத சுரபி" சிந்தாதேவியினால் ஆபுத்திரனிற்குக் கிடைக்கப்பெற்றது. ஆபுத்திரன் தான் இறக் கும் தறுவாயில் இந்த அட்சய பாத்திரமான அமுதசுரபியை ஆற்றில் வீசி எறிந்தான். எப்படி எண்ணி வீசி எறிந்தானென்றால்........ "தன்னலம் கருதாத ஒருவர் கையில் இது சென்று சேரவேண்டும்" என்பதே அவன் வேண்டுதலாகும். இந்தப் பாத்திரம் ஆற்றில் மிதந்து வந்து மணிபல்லவத்தில் மணிமே கலையின் கையில் கிடைக்கப்பெற்ற நாளும் வைகாசிவிசாக நன்நாளேயாம். இந்த "விசாக நட்சத்திரமும் நிறைமதியும் கூடிய நன்னாள்" சிறப்பினையும், "அமுதசுரபியின்" சிறப்பினை யும் மணிமேகலைக் காவியம் பாடிய சீத்தலைச் சாத்தனார் மிகவும் சிறப்புறப் பாடியுள்ளார்.

பெண் தெய்வங்களான காளி, துர்க்கை, கண்ணகை, அம்மன் போன்ற தெய் வங்களைக் குளிர்விப்பதும் பெருவிழாக்கள் (மகோற்சவம்) செய்வதும் பொங்கல், கூழ் ஊற்றல், கஞ்சி ஊற்றல் முதலிய உற்சவங் கள் நடைபெறும் மாதமும் வைகாசியேயாம். மேலும் இளவேனிற்காலமான இந்த வைகாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில் வேடுவரும் பெரும்பாலான விழாக் களை மகிழ்ச்சியுடனும் அருள் உணர்வோடும் கொண்டாடுவர். "கங்கை அம்மன்" கூத்து என்ற ஒருவகைக் கூத்தினை கூத்தாடிகள் பெண்வேடம் தரித்து ஆடுவர். இப்படிப் பெண் வேடம் தரித்து ஆடும் கூத்து பக்தர்களின் உள்ளத்தைப் பரவசப்படுத்தும். இப்படிக் கூத் தாடும்போது வீடுகள்தோறும் கிடைக்கும் தானியங்களை மாவாக்கி "வைகாசி விசாகத் தினன்று பூரணை நன்னாளில் கூழ்காய்ச்சி ஊற்றுவது வழக்கம். இதன் உள்நோக்கம் என்னவெனில் பசிப்பிணியைப் போக்குவதும் மற்றையோர் வாழத் தாம் வாழ்தலுமாகும். நல்லவர்கள் இந்நாளில் நாடெங்கும் தண்ணீர்ப் பந்தல் அமைப்பர்.

பெண்தெய்வமான மதுரை மனோன் மணியை வைகாசி மாதத்தில் அகத்தியர் தொழுவதை நோக்குவோம். "வைகாசியில் வா" என்றழைக்கின்றார், மதுரை மனோன்மணி அம்மனை மிகவும் உருக்கமாக.

**பாடல்:**

"கைகால் நுடங்கியும் கண்பஞ்சடைந்தும் ஈகாக்கை கொத்தியும்
மெய்தான் அழுகியும் மாள்வோரைக் கண்டு மிகவும் நொந்தேன்
உய்வேனோ ஓவென்று உழலுகின்றேன் நீ உளமிரங்கி
வைகாசி எல்லாம் வருவாய் மதுரை மனோன் மணியே"

கேதாரநாத், பத்ரிநாத் என்ற இரு தலங்களும் ஐப்பசி மாதம் தொடக்கம் பனியால் மூடப்பட்டிருக்கும். கோயில்களும் பூட்டப்பட்டிருக்கும். அதன்பின்பு இளவேனிற் காலத்திலேதான் யாத்திரிகர்கள் செல்லத் தொடங்குவார்கள். அக்காலத்திலேதான் திறந்து பூசையும் நடைபெறுவது வழக்கமான ஒன்றாகும். மேலும் வைகாசிச் சிறப்பு சைவ சமய மக்களிற்கோர் சிறந்த சிறப்பம்சமாக அமைவதனையும் சிந்திப்போம். அதாவது வைகாசி மாதத்து விசாக ஸ்நானம் செய் வதும், தர்ப்பணம், செய்வதும் சிறந்த பயனைத்தரும். எப்படி எனின் வைகாசி முத லாம் நாள் தொடக்கம் "சங்கல்ப்பம்" செய்து எந்தத் தீர்த்தத்தில் காலை 8 நாளிகைக்குள் ஸ்நானம் செய்தாலும் அங்கே இலட்சுமியுடன் நாராயணன் எழுந்தருளிவந்து சகல சௌபாக் கியங்களும் அருளுவார் எனப் பல கதைகள் கூறப்படுகின்றன. பெயரிடப்படாத தீர்த்தங்கள் கூட வைகாசி மாதத்தில் "விஷ்ணு தீர்த்தம்" என்றே பெயர் பெறும். சங்கல்பம் செய்வோ ரும் விஷ்ணுவையும் இலட்சுமியையும் மன தில் எண்ணியே சங்கல்பம் செய்து நீராட வேண்டும்.

மேலும் இம்மாசத்தில் பூமி, சுவர்ணம், பசு, செருப்பு, குடை, பழரசங்கள், நீர்மோர், வஸ்திரம் முதலியன தானம் செய்வோர் சிறந்த பயனடைவர். அறமுரைத்த புத்தபிரா னின் ஜனன விழாவும் பரிநிர்வாண விழாவும் பிறர் வாழ்வே தம்வாழ்வாகக் கொண்ட தியா கச்செம்மலின் விழாவும் இளவேனில் விழா வாக வைகாசி விசாக விழாவாகக் கொண்டா டப்படுவதும் மற்றொரு சிறப்பம்சமாகும்.

வைகாசிமாத விசாகப் பௌர்ணமி நிலவு பட்டொளி பரப்பும் இயற்கை எழிலோடு எல்லோரையும் குளிர்விக்கும், மகிழ்விக்கும் தண்ணொளி வீசும் வெண்மதி நிலவில் தளிர் விலும், குளிர்விலும் அன்றையதினம் தெய்வ மணம் கமழும் செல்வச்சந்நிதியானைப் போற்றி விசாகனருள்பெற்று வீடுபேறடை வோமாக.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்தால் வருவதே இன்பம்

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சிந்திப்பவன் மனிதன். சிந்தனை தோன்றும் இடம் மனம். சிந்திப்பதன் மூலம் மனிதன், நன்மை தீமை இவையெனப் பிரித்துணருகின்றான். இவ்வாறு சிந்தித்து நன்மையானவை என உணர்ந்தவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றான். தீமையானவை எனத் தெளிந்தவற்றை நீக்கிவிடுகிறான். இதுவே மனிதத்தன்மை. எனவே, மனம் உள்ளவன் மனிதன் எனப்படுகிறான். இந்த அருமையான மனத்தை அழுக்கேறாத வண்ணம் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். மனத்தைத் தூய்மையாக வைத்திருத்தலே மிகச் சிறந்த அறம் என்கிறார் வள்ளுவர்பெருமான்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற" என்பது தமிழ்மறை.

மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படி? இது மிகக் கடினம் என நாம் கருதிக்கொள்ளுகிறோமே தவிர, உண்மையில் மிக இலகுவானது. நமது உடலில் உள்ள அழுக்குகளை நீர், சவர்க்காரம் கொண்டு கழுவி, அகற்றி, உடலைச் சுத்தப்படுத்துவதற்குக் கூடச் சிறிது பணச்செலவு ஏற்படும். அந்தச் செலவுகூட மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்குத் தேவைப்படாது. நல்ல சிந்தனை, உண்மை பேசுதல், நல்ல கருமங்களை ஆற்றுதல், நல்லவர்களோடு சேர்தல் என்பன மனம் தூய்மையாக இருப்பதால் ஏற்படுபவை. நம் மனத்தில் குடிகொண்டுள்ள பேராசை, கடும்பற்று, பொய், கோபம், செருக்கு, பொறாமை, உயர்வு- தாழ்வுச் சிக்கல், முறையற்ற பாலகவர்ச்சி, பகைமை, வஞ்சம் போன்ற அழுக்குகளை அகற்றிவிட்டால் மனம் தூய்மையாகிவிடும்.

"அறஞ் செய விரும்பு" என்பது ஔவையார் வாக்கு. அறம் செய்வதற்கும் மனம்தான் முக்கியம். மனம் விரும்பினாலேயே அறம் செய்ய முடியும். மனம் களங்கமற்றுத் தூய்மையாக இருந்தாலேயே அங்கு தோன்றுகின்ற எண்ணங்கள், விருப்புக்கள் என்பன நல்லனவாக அமையும்.

எமது மனத்தில் படிந்துவிடக்கூடிய அழுக்குகளை வள்ளுவர் வகைப்படுத்தித் தந்துள்ளார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவையே அந்த நான்கும். இந்த நான்கிற்கும், ஒரு கடுகளவேனும் எம் மனதில் இடம் பெறுவதற்கு இடமளிக்காது ஒழுகிவருதல் மேலான அறம் ஆகும். "மனமது செவ்வையானால் மந்திரம் தேவையில்லை" என்றும், "மனம் போல வாழ்வு" என்றும் எம்மத்தியில் நிலவிவரும் முதுமொழிகள் பொருள் நிறைந்தவை. மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே, அவற்றின் மயம் ஆகின்றான். எனவேதான் நாம் நல்லவற்றையே எப்பொழுதும் நினைக்க வேண்டும்; அப்பொழுதுதான் நல்லவர்களாக வாழலாம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். உண்மையில், ஒழுக்கம் என்பது ஒருவனது நினைப்புக்களின் கூட்டுமொத்தமே.

எம்மனத்தில் படிகின்ற அசுத்தங்களில் அழுக்காறு என்பது பொறாமை ஆகும். மனத்தில் பொறாமை ஏற்படாது இருத்தல் சிறந்த அறம். பொறாமையின் தீய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமை மிகக்கொடியது. மனித நேயத்தையே அழித்து இறுதியில் பொறாமை கொண்டவனையும் அழித்துவிடும் சக்தி வாய்ந்தது. பொறாமை இடம்பெறும் உள்ளத்தில் அன்பினை இடம்பெறச் செய்தால் நாமும் செம்மையாக வாழ்ந்து, ஏனையோரையும் மகிழ்ச்சியாக வாழ வைக்கலாம்.

மற்றொரு அசுத்தம் அவா என்னும் பேராசையாகும்.

"ஆசை மிக மிக ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தமாமே" என்பது திருமூலர் வாக்கு. ஆசையின் காரணமாகவே பிறர் பொருளைக் கவரும் எண்ணம் தோன்றுகிறது. நிலையான இன்பம் பெறவேண்டுமாகில் ஆசையை அறவே ஒழிக்க வேண்டும். அறத்தால் வருவதே உண்மையான இன்பம் என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

வெகுளி என்பது கோபம், சினம் ஆகும். "சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்று, அதன் கொடுமையான இயல்பு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான் "ஆறுவது சினம்" என்கிறார் ஔவைப்பிராட்டியார். தணிக்கப்படவேண்டியது கோபம் எனும் தீயையே. கோபம் பாவமாக முடியும் என்பர். எல்லாப் பாவங்களுக்கும் கோபமே அடிப்படைக் காரணம். பாவத்தை விலக்குவதானால் கோபத்தை விலக்க வேண்டும். பிறர் சீண்டினாலும் கோபத்தை வரவழையாத ஆற்றலைத் தரவேண்டும் என்று இறைவனை வேண்டுதல் செய்தல் மேலான பிரார்த்தனை ஆகும். கோபம் செல்லாத இடத்தில் அது தானாகவே அடங்கிவிடும். தன் கோபம் செலுத்தக்கூடிய இடத்தில் கோபம் வராமல் தடுப்பவனே கோபத்தை அடக்கியவன் என்ற அறத்தைச் செய்தவனாகின்றான். கோபம் தீ; அன்பு மலர் போன்றது. எனவே கோபம் தோன்றுமிடத்தில் அன்பு மலரமாட்டாது; முகத்தில் புன்னகை தோன்ற மாட்டாது. சாந்தியையும், சமாதானத்தையும் தூரத்தள்ளிவிடும். சினம் தன்னை மட்டுமல்ல, தன்னைச் சார்ந்தவர்களையும் அல்லற்படுத்த வல்லது. இப்படிப்பட்ட கொடுமையான கோபத்தை நாம் ஏன் ஆராதிக்க வேண்டும். சிந்தித்துப் பாருங்கள். எவருக்குமே நன்மையைத் தராத, மாறாகக் கெடுதலைத் தரும் கோபத்தை முற்றிலாக நீக்கி விடுதல் மேலான அறம் என்பது சைவநெறி கூறும் உண்மை.

இறைவன் , நமக்கு மொழியைத் தந்தது; பேசும் ஆற்றலைத் தந்தது. எல்லோருடனும் இன்சொல் பேசி மகிழ்வதற்காகவே. இன்சொல் பேசுவதனால் அறம் பெருகும், அல்லவை தேயும். நல்ல இனிய கனிகள் இருக்கும்போது காய்களை விரும்பி உண்போர் இருப்பார்களா? இருக்கமாட்டார்கள். இனிய சொற்கள் இருக்கக் கூடியதாக இன்னாத சொற்களைப் பேசித் துன்பத்தை அழைப்பது பேதமையாகும். பொறாமை, கோபம், ஆசை, இன்னாச்சொல் என்பன மனித குலத்திற்கு உரித்தானவை அல்ல என்பதை உணர்ந்து, அவற்றை விலக்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து சால்புகளையும் ஆராதித்து உய்வுபெறுவோமாக.

---

## அடக்கம்


அறிவு உயர உயர அடக்கம் மிகுதியாக வேண்டும். அடக்கம் அறிவின் மிகுதியைத் தெரிவிக்கின்ற ஓர் அடையாளம். சாரமும் ஈரமும் இல்லாத உலர்ந்த ஓலை சலசல என்று ஒலிக்கின்றது. பச்சோலை ஒலிப்பதில்லை. அன்றியும் வெண்கல மணி அதிகமாக ஒலிக்கும். தங்கமணி ஒலிப்பதில்லை. அதனால் பச்சோலைக்கும் தங்கமணிக்கும் பெருமைதானே.

-கோபுர தரிசனம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...



# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)



உருவ அருள்நீர்- அழகிய அருள்நீர். உருவ என்பது அழகிய என்னும் பொருட்டாதல் "உருவக்குதிரை மழவரோட்டிய" (அக 1:2) என்புழிக் காண்க. இன்னருள். வெள்ளத்தினின்றும் செல்லும் நீர் அருளாகிய நீராதலின் "அருள் நீர்" என்றார். அருள்நீர் ஓட்டா என்பது இறைவன் உயிர்களுக்கு அருளினைச் செலுத்துதல் அறிவித்தபடியாம். "அருள் நனி சுரக்கு மமுதே காண்க" (அண்ட 59) "அருள் செய்யும் சித்தன்" (அருட்8) என அடிகள் அருளியவாறுங் காண்க. ஓட்டா (88) தந்த (94) என முடிக்க.

அருவரைச் சந்தின் வான்சிறை கட்டி என்பது வெள்ளம் அரிய மலையினின்றும் ஈர்த்துக் கொணர்ந்த சந்தன மரங்களைக் கரைகளில் ஒதுக்கி அணையாக்கிக்கொண்டு அவ்வணையினூடே செல்லுதல்போல இறைவனது இன்னருள் வெள்ளமும் மெய்யடியார்களின் தூய உள்ளங்களை அணையாகக் கொண்டு அவற்றினூடு செல்லுமென்பது கூறினார்.

அருவரை- ஏறுதற்கரிய மலை. இறைவனிடத்துச் செலுத்தும் அன்பு நிலையினின்றும் திரியாத மெய்யடியார் இயல்பு, இயற்கை நிலையிற்றிரியா மலையின் இயல்பை ஒப்பதாயிற்று. சந்து- சந்தனமரம். "கமலங் கலந்த, வேரியுஞ்சந்தும் வியறந்தென" எனத் திருக்கோவையாரில் (301) வருதலுங் காண்க. வரைச் சந்தின் என்றார் வரையின்கண் சந்தனமரமன்றிப் பிறமர மின்மையின் சந்தின் என்றதனால் சந்தன மரம்போல மெய்யடியார் உள்ளமும் தூயவாதல் கூறினார். வான்சிறை- பெரிய அணை.

மட்டவிழ் மலர்- தேன்பரக்கின்ற மலர். வெறிமலர்- நறு நாற்றத்தையுடைய மலர். மலர்க்குளம் என்றது இருதயகமலமாகிய குளத்தை. வாய்கோலி என்றது அருள்வெள்ளம் பாய்ந்து செல்லுதலாற் பின்னரும் பாய்ந்து செல்லுதற்கு வழியமைத்து என்றவாறு. வாய்- வழி. "பெரியார் நூல் காலற்கு வாய் காப்புக் கோடல் வனப்பு" (ஏலாதி 23) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கோலுதல் உண்டாக்குதல்.

நிறையகின் மாப்புகை- நிறையாகிய அகிலின் கரிய புகை. நிறை- நிறுத்துதல். "நிறையாற்றா நெஞ்சமுடையேம்" கலி 90:29 நிறையென்றது புலனடக்கத்தை. "நிறை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பொறிகளையுமடக்குதல். கோவை 31 பேர் உரை. நிறையகில் மாப்புகை கரைசேர் குளம் என்றது நீராடிய மகளிர் தமது கூந்தலைப் புலர்த்துதற்கு இட்ட அகிலின் கரிய புகை யாகிய வண்டுகளையுடைய குளம்போலப் பொறியடக்கமாகிய அகிற் புகையையுடைய இருதயகமலமாகிய குளம் என்றவாறு. குளத் தின் மீக்கொள என்றது அருள்வெள்ளமானது உள்ளமாகிய குளத்தில் மேற்கொண்டு வர வருதலான் மகிழ்ச்சியடைதலின் அதனை நோக்கி. நோக்குதற்கு வினைமுதல் தொண்ட உழவர் என்க. வர என்றவாறு. மகிழ்தலின் நோக்கி அங்ஙனம் மேற்கொண்டு.

பழங்கடலதுவே (66) முகிலிற் றோன்றி (67) வரையிலேறி (68) ஒளி விரிய (69) அரவு இரியக் (70) கோடை கரப்ப (71) தோன்றி மிளிர (72) கோபமிகுத்து (73) கருணையின் முழங்கி (74) இன்னருள் துளிகொள்ள (76) வெள்ளம் தெவிட்ட (77) குட்டம் கையறவோங்கி (78) யாற்று அகவயின் (83) பாய்ந்தெழுந்து சுழித்துப் (84) பந்தமா கரைபொருது (85) இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து (87) அருள் நீர் ஓட்டா (88) சந்தின் சிறைகட்டி (89) குளவாய் கோலி (90) குளத்தின் (91) மீக்கொள (92) என வினைமுடிபு செய்க.

அர்ச்சனை வயலுள் அன்பு வித்து இட்டு என்றது தமது வழிபாடாகிய வயலினுள் அங்ஙனம் மேற்கொண்டு வந்த இன்னருள் வெள்ளத்தினைப் பாய்ச்சி அன்பாகிய வித் தினை விதைத்து என்றவாறு. தொண்டர் உழவர் ஆரத்தந்த என்றது தொண்டர்களாகிய உழவர்கள் சிவபோகமாகிய பயனை நுகரு மாறு தந்தருளிய என்றவாறு. தொண்ட உழவர் (94) நோக்கி (92) இட்டு (93) ஆரத் தந்த (94) மேகன் (95) என இயையும். அண் டம்- வெளி. ஈண்டு அருள் வெளியினை உணர்த்தியது. மேகன் என்றார் அருட்கொடை யின் மிகுதிபற்றி.

இறைவனை அண்டத்தரும்பெறன் மேகன் என உருவகஞ் செய்தமைக்கு அமை யப், பரமானந்தத்தைப் பெருங்கடலாகவும் அதனையுடைய இறைவனைக் கருமாமுகிலா கவும், அவன் வந்து தங்கிய திருப்பெருந் துறையை அம்முகில்படியும் வரையாகவும், அவ்விறைவனது அருள் ஒளியினை மின் னொளியாகவும், அவ்வருள் ஒளி பரத்தலான் அழிவெய்தும் ஐம்புலக்கட்டுக்களை மின் னொளியால் அழிவெய்தும் பாம்புகளாகவும், இறைவன் அருளால் நீங்கும் துன்பங்களை மழைவீழ்ச்சியால் நீங்கும் கோடையாகவும், இறைவனருளால் விளக்கமுறும் பக்குவான் மாக்களை மழையினாற் பூத்து விளங்கும் தோன்றிச் செடிகளாகவும், அவன் அருள் பக்குவான்மாக்களின் பிறவிகளில் கோபம் மிகுவதனை மழை வீழ்ச்சியால் இந்திரகோபங் கள் மிகுவதாகவும், இறைவனருளால் நிகழும் நாதப்பறை ஒலியினை முகிலின் முழக்க மாகவும், இறைவன் அருள்பெற்றுக் கைகூப்பி வணங்கி நிற்கும் அடியார்களின் கைகளை மழைக்காலத்துத் தோன்றும் காந்தண் மலராகவும், இறைவனது குறைவற்ற அருள் வீழ்ச்சியை நுண்ணிய மழைத்துளி வீழ்ச்சி யாகவும், ஆங்காங்குள்ள பக்குவான்மாக் களின் உள்ளங்களில் இறைவன் அருள் நிறைதலை மழைவீழ்ச்சியால் ஆங்காங்குள்ள பள்ளங்களில் வெள்ளம் நிறைதலாகவும், பக்கு வான்மாக்களின் துன்பங்கள் செயலறும்படி அருள்மிகுந்து பரத்தலை நீர் நிலைகள் செயலறும்படி மழை வெள்ளம் உயர்ந்து பரத்தலாகவும், அறுவகைச் சமயத்தின் பெறுபேற்றினைக் கானல் நீராகவும், அப்பேற்றி னைப் பெறவிரும்பிவரும் அறிவினையுடைய மக்கட் கூட்டத்தினை அக்கானல் நீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பி அருந்த வரும் மான் கூட்டமாகவும், அச்சமயநெறிகளில் நின்று அந்நெறிகளுக்கியைய அறங்களை மிகுதியாக மேற்கொண்டு நின்றும் தம்பிறவித் துன்பம் நீங்கப்பெறாது வருந்துதலை அக்கானல் நீரைப் பருகித் தாபம் நீங்கப்பெறாது மான் கூட்டங்கள் வருந்துவனவாகவும், அருள் வெளியைப் பெரியயாறாகவும், அவ்வருள்வெளியின் கண் அருள் மிகுதலை யாற்றின் கண் வெள்ளம் வீழ்வதாகவும், அருள் மிகுதலால் உண்டாகும் இன்பத்தினை யாற்றின்கண் உண்டாகும் சுழியாகவும், அருள் இன்பத்தினால் மலபந்தம் நீங்குதலை ஆற்று நீர்ப்பெருக்கால் கரை தாக்கப்படுதலாகவும், மலபந்தம் நீங்கப் பெற்ற பக்குவான்மாக்களின் இருவினைகள் நீங்குதலை யாறு செல்லும் வழியின் கணுள்ள பெருமரங்களின் வீழ்ச்சியாகவும், அருளினைச் செலுத்தலை நீரினைப் பாய்ச்சுதலாகவும், உலக வாதனைகளாற் கெடுக்கப்படாத திடபத்தியையுடைய அடியார்களை வரையாகவும், அவர்களின் பக்குவப்பட்ட தூய உள்ளத்தினைச் சந்தனமர அணையாகவும், இருதய கமலத்தைக் குளமாகவும், சத்தியத்தினை அருள்நீர் பாயும் வாயிலாகவும், நிலையிற்றிரியாமையை அகிலாகவும், நிலையிற்றிரியாமையின் பயனை அகிற்புகையாகிய வண்டாகவும், இருதய கமலத்தில் அருள்மிகுதலை குளத்தின் கண் நீர்மிகுதலாகவும் தொண்டர்கள் அருள் மிகுதலால் மகிழ்ந்து அதனைப் பயன்படுத்த நோக்குதலை உழவர் குளத்தில் நீர் மிகுதலால் மகிழ்ந்து அந்நீரைப் பயன்படுத்த நோக்குதலாகவும் வழிபாட்டினை வயலாகவும், அன்பினை நெல்விதைப்பதாகவும், தொண்டரை உழவராகவும், அத் தொண்டர் பெறும் சிவபோக அநுபவத்தினை உழவர் பெறும் விளைந்த நெல்லுணவாகவும் உருவகஞ் செய்யப்பட்டவாறு காண்க.

(தொடரும்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயம் என்ன சொல்கிறது?

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

சமயம் என்றால் என்ன என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்வோம். ஆறு அறிவு கொண்டவன் மனிதன். இந்த ஆறாம் அறிவு மனிதனுக்கு மட்டுமே விஷேசமாக அமைந்தது. அந்த அறிவைக் கொண்டு தீர்க்கமாகச் சிந்தித்து அழிவில்லா ஆனந்தத்தை நல்வாழ்விற்கு இட்டுச் செல்லும் பாதையானது மதம், சமயம், மார்க்கம், நெறி எனப் பல பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது.

இந்து நதிக்கரையில் வாழ்ந்த மக்கள் இந்து சமயத்தை அனுஷ்டித்தமையால் ஹிந்துக்கள் எனப்பட்டனர். ஹிந்து என்ற சொல்லுக்கு துயர் களைதல் என்பதே பொருள். எவன் ஒருவன் பிறர் துன்பங்கண்டு இரங்குகின்றானோ; அவன் துயர் தனதே என்று எண்ணுகிறானோ அவன்தான் ஹிந்து. அவன் மறந்தும் பிறன்கேடு நினையான்.

"தன்னைத் தான் காதலன் ஆயின் எனைத் தொன்றும்
துன்னற்க தீவினைப்பால்" இது வள்ளுவர் வாய்மொழி.

இந்துசமயம், சிவனை வழிபடும் சைவம், சக்தியை வழிபடும் சாக்தம், கணபதியை வழிபடும் காணபத்தியம், விஷ்ணுவை வழிபடும் வைஷ்ணவம், முருகனை வழிபடும் கௌமாரம், சூரியனை வழிபடும் சௌரம் என ஆறு பிரிவுகளை உடையது. எனினும் ஆறு சமயங்களுக்கும் முழுமுதற் கடவுளாயிருப்பர் சிவபெருமான் ஒருவரே.

"அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும் வீடு பேறாய்
நிற்பவர் ஒருவரே" அவரே முழுமுதற் பொருளாகிய சிவம்.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கு
மாதொரு பாகனார் வருவார்"

ஒரு பதியை அடைய பலவழிகள் உண்டு; மலையில் ஊற்று எடுத்துப் பாயும் ஆறுகள் பலவாகப் பிரிந்து பாய்ந்தாலும் முடிவில் கடலில்தான் சங்கமிக்கின்றன. ஆறுவகைச் சமயத்தவரும் தத்தம் கடவுளை வழிபடினும் அ∴து முழுமுதற் கடவுளாகிய சிவத்தையே சாரும். சிவனை வழிபடும் சமயம் சிவசமயம். அதுவே சைவசமயம். இனி இந்துக்கள், இந்து சமயம் என்பதை விடுத்து சைவர்கள் சைவசமயம் என்றே பேசுவோம்.

சைவசமயம் பற்றி அறிய வேண்டுமாயின் பல சைவ சமய நூல்களைப் படிக்க வேண்டும். சமய நூல்கள் எவை? "வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் தந்தவை" இவை முதல் நூல்.

வேத சாரமாக விளங்கும் உபநிஷதங்கள்.
சித்தாந்த சாத்திரங்கள்
நாயன்மார்கள் அருளிய திருமுறைகள்
சேக்கிழார் பாடிய பெரிய புராணம்.
திருமூலர் அருளிய திருமந்திரம்,
திருவள்ளுவரின் திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் நாம் படிப்பதற்குரியவை அல்ல. அவை மந்திரங்கள். மந்திரம் என்பது மறை பொருள். வித்திலிருந்து வந்ததே வேதம். வித்தின் அடியையோ முடியையோ நாம் காண முடியாது. வேதமுடிபு. வேதாந்தம் அதுவே வேத சிரசு.

ஆகமம் படிக்கப் படிக்க ஆர்வம் மேலிடும். ஆகமத்தில் சொல்லப்படுவன யாவும் ஆன்ம ஈடேற்றத்திற்குரியன.

"ஆகமமாகி நின்று அண்ணிப்பவன்" இறைவன்.

திருமுறைகள், இறைவனுடைய ஆற்றல்கள், பெருமை, உண்மை இறைவனுடைய திருவிளையாடல்கள், ஆன்மாக்கள்மீது கொண்ட கருணை, இறைவன் மீதுள்ள நம்பிக்கையால் நாயன்மார்கள் நிகழ்த்திய அற்புதங்களைப் பற்றிக் கூறுகின்றன. திருமந்திரத்தில் பல தத்துவங்களை அறியலாம்.

ஆகமத்தில் சொல்லப்படுவன யாவை? ஆலய அமைப்பு, ஆலய வழிபாடு, உற்சவங்கள், விழாக்கள் இறைவனை அடையும் நான்கு மார்க்கங்கள் (நாற்பாதம்) ஆன்மாக்கள் கர்மவினைகள் நீங்கி பிறப்பு இறப்பில்லா பேரின்பநிலை அடைவதற்கான வழிகளான ஆலயத் தொண்டுகள், விரதம், ஜெபம், தியானம், தவம், பஞ்சாட்சரம், விபூதி, உருத்திராக்கம் பற்றிய விளக்கங்கள்.

ஆன்மாக்கள் வீடுபேறு அடைவதற்குரிய விளக்கங்கள். சித்தாந்த சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. முப்பொருள்களான பதி, பசு, பாசம், மும்மலங்களாய ஆணவம், கன்மம், மாயை, பதியின் இயல்பு, ஆன்மாவின் இயல்பு, மலநீக்கம், திருவருள், திருவருளே ஆன்மாவை முத்திநிலையடையச் செய்வது பற்றிக் கூறுவதுடன், அவன், அவள், அது அவன்- இறைவன், அவள்- சக்தி, அது- பிரபஞ்சம் பற்றியும் சித்தாந்தம் பேசுகிறது. சிவனைப் பற்றிக் கூறுவது சைவ சித்தாந்தம்.

ஆறுமுக நாவலர் ஐயா வேத ஆகமங்கள் சித்தாந்த சாஸ்திரங்கள் கற்றவர்; அதன்படி ஒழுகியவர் மக்கள் கடவுள் வழிபாடு, சமய ஆசாரங்கள், ஆகம விதிகளை அறிய வேண்டும்; ஆசார சீலர்களாக வாழவேண்டும்; சமய பரம்பரையை வளர்க்க எண்ணி, உலகத்துக்கு கர்த்தா யார் எனப் பாடம் தொடங்கி முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் சைவ வினாவிடைகள் எழுதி அச்சிட்டவர்; திண்ணைப் பள்ளிக்கூடங்கள் அமைத்து சைவாசிரியர்களை வைத்து சமயம் வளர்த்தவர். சமயம் வளர்ந்தது தமிழும் வளர்ந்தது. சைவம் தழைத்தோங்கியது.

மக்கள் தங்கள் வாழ்க்கையில், பஞ்சமா பாதகங்களை தவிர்த்தல், ஏழைகட்கு இரங்கல், குரு லிங்க சங்கம வழிபாடு, ஆலய தரிசனம், ஆலயத் தொண்டுகள், சிவனடியார்களைச் சேவித்தல், பெற்றோர், முதியவர்களைப் பேணல், அநாதைகளை ஆதரித்தல், உயிர்கட்கு ஊறு செய்யாமை, விருந்தோம்பல், பெண்களைத் தாயாகப் போற்றுதல், சிவசின்னங்களைப் போற்றுதல் சமய சம்பிரதாயங்கள், சடங்குகளை அநுசரித்தல் போன்ற நல்ல செயல்களை எங்கள் சைவசமயம் வலியுறுத்துகின்றது. ஆனால்,

இன்றைய காலப்போக்கு அவசர உலகம், "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" எதையும் சிந்திப்பதில்லை. முன்னோர் சொல்லைக் கருத்தில் எடுப்பதில்லை. சமய சடங்குகள், சம்பிரதாயங்கள் முறையான அணுகுமுறையின்றி மறைகின்றன. அதனால் இளந்தலை முறையினர் அதன் உட்கருத்தை அறியாது சடங்குகள், சம்பிரதாயங்கள் அர்த்தமற்றவை தேவையற்றவை என்ற கணிப்புக்கு வருகிறார்கள். தற்போது நடைபெறும் திருமணச் சடங்குகள், பூப்பு நீராட்டு விழாக்கள்

ஒருவருடைய பேச்சிலிருந்து உள்ளன்பை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் அர்த்தமற்ற கேளிக்கைகள், விளம்பரங்களாகவே நடக்கின்றன.

எங்கள் சமயத்தில் கோலாகலமான பல திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இதனால் மக்களிடையே ஆனந்தம், மகிழ்ச்சியுடன் பக்தியை உண்டாக்குவதோடு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வழிவகுக்கின்றன. மேலும் திருவிழாக்கள் இறைவனின் ஐந்தொழிலையும் உலகோர்க்கு உணர்த்துகின்றது. மண் எடுத்தல் கொடியேற்றம் படைத்தற் தொழிலையும், வாகன உத்ஸவங்கள். யாகம் காத்தற் தொழிலையும் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலையும், மௌன உத்ஸவம் மறைத்தல் தொழிலையும், நடராஜர் உத்ஸவம் (தீர்த்தம்) அருளல் தொழிலையும் குறிக்கின்றது.

சிவசின்னங்கள் ஒவ்வொன்றும் ஒரு தத்துவத்தையும், பெருமையையும் உணர்த்துகின்றன. விபூதி முடிசார்ந்த மன்னரும் மற்று முளோரும் முடிவில் ஒரு பிடிசாம்பலாவர் என்பதை உணர்த்துகிறது. அல்லாமலும் உடலில் உள்ள துர்நாற்றத்தை அகற்றுவதுடன் சிரசில் உள்ள நீர்த்தோஷத்தையும் தலைவலியையும் போக்குகிறது. உருத்திராஷம் சிவபெருமானின் மூன்று கண்களிலிருந்து பொழிந்த நீரிலிருந்து தோன்றியதாகவும் கூறப்படுகிறது. இதன் மேல் பட்டு உடம்பில் வழியும் நீர் புனிதமானது. பஞ்சாஷரம் சிவனைக் குறிக்கும். சி வ ய ந ம என்னும் ஐந்தெழுத்து மந்திரமாகும். விபூதி, உருத்திராஷம், பஞ்சாஷரம் இம்மூன்றும் ஒரு சைவ சமயியின் அணிகலன்களாகும். நெற்றிப் பொட்டில் ஒன்று சேர்கின்ற நரம்புகளுக்குக் குளிர்ச்சி தரும் குணம் சந்தனத்திற்குண்டு.

இந்துமதம் புண்ணிய தலங்களைத் தரிசித்தல், தீர்த்த யாத்திரையையும் வலியுறுத்துகிறது. இதன்மூலம் இறைவன் கருணையை உணர்வதோடு பலவிதமான மக்களுடனும் பழகுவதால் மனிதநேயம், பரிவு, பாசம், அன்பு, பக்தி, கல்வி போன்றவை அனைத்தும் செம்மையுறுவதால் சமூகம் சிறப்படைகிறது.

இப்பூவுலகில் சிவபெருமானிடமிருந்தே நாதம் தோன்றியது. மனித மனம் தறிகெட்டு ஓடும்போது நாத கீதங்கள் அதைத் தடுத்து நிறுத்துகின்றன. “செவிக்கு உணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்” என்பதற்கேற்ப செவிக்கு நல்ல உணவுகளான நாத கீதங்கள், பஜனைகள், சங்கீத உபந்நியாசங்கள் கேட்கும்போது மனித மனம் லயிப்படைந்து இறையுணர்வு உண்டாகி பேரின்பத்தை அடையலாம் என இந்துமதம் வலியுறுத்துகிறது.

நம் கண்ணாற் காணமுடியாத காற்றை ஒரு மரத்தின் இலைகளின் அசைவால் உணர்கிறோமோ, அவ்வாறே உலகில் பரவியிருக்கும் இறைவனின் அருளை ஆலயங்களில் பெறமுடியும். இயற்கையை ரசிக்கும் மனிதன் கற்பனை உலகில் வாழ்கிறான். அவனுடைய உணர்வின் வெளிப்பாடுதான் சிற்பம், சித்திரம், ஓவியம், இசை, நாட்டியம் போன்ற கலைகள். இக்கலை அம்சங்களை ஆலயத்திற் கண்டு மெய்மறந்து நிற்கின்றோம். நடராஜ தாண்டவத்தையும் ஒரு கலைஞன் வடித்தானே. நடராஜனை கலைஞன் கண்டதில்லை. தேவாரப் பாடலை ரசித்து கற்பனையில் நடனத் தோற்றத்தை வடித்துள்ளான்.

அடுத்து ஒரு ஆலய அமைப்பை எடுப்போம். ஒரு மனிதனின் உடலின் வடிவிலே அமைந்துள்ளது. மனிதனுடைய உடலில் உள்ள பாதங்கள் கோபுரம், முழந்தாள் ஆஸ்தான மண்டபம், தொடை நிருத்த மண்டபம், தொப்புள் பலிபீடம், மார்பு மகாமண்டபம், கழுத்து அர்த்த மண்டபம், சிரசு கர்ப்பக்கிரகம், சிரசிலுள்ள வலது செவி தஷிணாமூர்த்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது செவி சண்டேஷ்வரர், புருவ மத்தி லிங்கம், சிரசின் உச்சி விமானம்.

எப்படி ஒரு மனிதன் தந்தையாய், நல்ல மைந்தனாய், சகோதரனாய், சித்தப்பன், பாட்டனாய் இன்னும் பல உறவு முறைகளில் வாழ்கிறானோ; சமூக மக்களின் அன்பைப் பெற்றுக்கொள்கிறானோ அதைப்போல் எல்லா வற்றையும் கடந்து நிற்கும் பரப்பிரமம் பலவித தெய்வ உருவங்களின்மூலம் மக்களின் பக்தி யையும் அன்பையும் ஏற்றுக் கருணை பொழி கிறது.

இந்தப் பரந்த பூவுலகில் மக்கள் பகைமை பாராட்டாது பரிவு, பாசம், அன்பு மேலிட வாழ்வதற்கு வழிகளை வகுத்துள்ளது சைவசமயமேயாகும்.

# வரங்களை வழங்கிடும் "வைகாசி விசாக விரதம்"

விசாக நட்சத்திரம் ஒவ்வொரு மாதமும் வந்தாலும், வைகாசி விசாகநாள் சிறப்பாகக் காணப்படுகிறது. ஏனெனில் அன்றுதான் முருகப் பெருமான் அவதரித்த நன்னாளாகும். அவருடைய ஜென்ம நட்சத்திரமும் விசாகமே. இதனால்த்தான் கலியுகப் பெருமான் கந்தனுக்கு விசாகன் என்ற ஒரு திருநாமம் உண்டு.

சூரபத்மனும் அவனது அசுரர் கூட்டத்தினரும் அமரர்களை அடிமைப் படுத்தியதோடு அவர்களுக்கு நாள்தோறும் சொல்லிலடங்கா துன்ப துயரங்களை விளைவித்தனர். இதனைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர்.

அசுரர்களின் அக்கிரமங்களை அழித்துத் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்ட சிவனார் தமது நெற்றிக் கண்ணைத் திறந்தார். இதன் காரணமாக ஆறு தீப்பொறிகள் உருவானது. அந்தப் பொறிகளின் வெப்பத்தைப் பொறுக்கமுடியாத அக்கினி பகவான் அதனைச் சரவணப் பொய்கையில் கொண்டு சென்று விட்டார். அப்பொறிகளிலிருந்து ஆறு குழந்தைகள் உருவாகின. சக்தியானவள் அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகத் தூக்கி ஆறு திருமுகங்கள் உடைய ஒரு அழகிய குழந்தையாக உருவாக்கினாள். இவ்வாறு சரவணப் பொய்கையில் சரவணனாக வந்துதித்த திருநாளே வைகாசி விசாக நட்சத்திரப் பெருநாளாகும்.

முருகக் கடவுள் தோன்றிய வைகாசி விசாக தினத்தன்று அதிகாலையிலேயே துயிலெழுந்து, நீராடிப் பகல் முழுதும் உண்ணாமல் ஐம்புலன்களையும் ஒன்றாக இணைத்து விரதமிருப்பதுவே முறை. உடல்நிலை சரியாக அமையுமிடத்து நீர் ஆகாரத்துடன் மட்டும் இவ்விரதத்தை நோற்றிட முடியும். இவ்விரதத்தை ஒருவர் முறையாக நோற்று வருமிடத்து மனதிலுள்ள சஞ்சலங்கள் யாவும் நீங்குவதோடு மனதுக்கு அமைதியும் கிடைக்கும். எடுத்த காரியங்கள் யாவும் இனிதாகவும், வெற்றியாகவும் அமையும். முருகப் பெருமான் அவதரித்த இந்நாளில் பல ஞானியர்களும் பிறந்திருக்கின்றார்கள். குறிப்பாக பௌத்த மத தர்மத்தை உலகுக்குப் போதித்த புத்த பெருமான் பிறந்தது, ஞானம் பெற்றது, பரி நிர்வாண நிலையை அடைந்தது யாவுமே வைகாசி விசாக நட்சத்திரத்திலேயே ஆகும்.

ஆகவே வைதாரையும் வாழ வைக்கும் வடிவேலன் பிறந்த இந்த வைகாசி விசாக விரத தினத்தை முறையாக அனுஷ்டித்து வருமிடத்துச் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

-செ. ரவிசாந்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

—வாரியார் சுவாமிகள்—



27. மின்னேநிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே.

## பதவுரை

பொன்னே- பொன்போல அருமை வாய்ந்தவரே! மணியே- மணிபோல ஒளி வீசுபவரே! பொருளே- பேரின்பப் பொருளே! அருளே- பேரருளுடையவரே! மன்னே- நிலைபெற்ற தலைவரே! மயில் ஏறிய வான வனே- மயிலை வாகனமாகக் கொண்ட மேலானவரே! மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்- மின்னலைப் போல் தோன்றி உடனே மறையும் நிலையில்லாத உலக வாழ்வை நிலைத்ததென எண்ணி விரும்பி அடியேன், என்னே- என்ன என்று சொல்வேன்? இங்கு- இந்தவுலகில், விதியின் பயன் இதுவோ- என் தலைவிதியின் பயன் இது தானா?

## பொழிப்புரை

பொன் போன்ற அருமை வாய்ந்தவரே! மணிபோல் ஒளி வீசுபவரே! உண்மைப் பொருளே! பேரருளுடையவரே! நிலைபெற்ற தலைவரே! மயிலை வாகனமாகவுடைய மேலானவரே! மின்னலைப்போலத் தோன்றி உடனே மறையும் இந்த நிலையில்லாத உலக வாழ்வை நிலையாக எண்ணி விரும்பியிருக்கின்றேன்! இதற்குக் காரணம் என்ன? முன் செய்த தீவினை காரணமாக என் விதிப்பயன்தானோ? அறிகிலேன்.

## விரிவுரை:

**மின்னே நிகர் வாழ்வை:-**

இந்த உலக வாழ்வும் செல்வமும் மின்னல் தோன்றி உடனே மறைவதுபோல் மறையற்பாலன. நிலையில்லாத இல்வாழ்வை விரும்புவது அறியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. -திருக்குறள்
மின்னு மொக்குளும் எனநனி வீயினும் வீயும்
-சிந்தாமணி (2754)
"இன்பம்........... மின்னின் ஒத்திருக்கும்"
-சிந்தாமணி (2537)
நீர்க்குமிழிக்கு நிகரென்பர்யாக்கை நில்லாது செல்வம்
பார்க்குமிடத்தந்த மின்போலும்" -கந்தரலங்காரம் (66)

**என்னே விதியின் பயனிங்கிதுவோ:-**

அழியும் உலக வாழ்வை விரும்புவது என்ன செயல்? அது அநுபூதிக்குத் தடையாயிற்றே!

அப்படி விரும்புவதற்குக் காரணம், முன் செய்த வினையின் காரணமாக விதித்த விதியின் பயன்தானோ?

ஊழ்வினை வலிமையானது என்பதைக் கீழே வரும் பாடல்களால் அறிக.

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் மன்ன ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்.
-கந்தபுராணம்.

வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை அதுவரச் சீரைச் சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவர் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ.
-இராமாயணம்.

**பொன்னே மணியே:-**

பொன் உலகப் பொருள்களில் அருமையானது. ஆதலால் இறைவன் அருமையானவன் என்பதைக் குறிக்க "பொன்னே" என்றார். "அரும் பொன்னே மணியே என் அன்பே" என்கிறார் தாயுமானவர். "மாற்றறியாத செழும் பசும் பொன்னே" என்கின்றார் வள்ளல் பெருமானார்.

மணி இயல்பாக ஒளிவீசுவது. இறைவன் ஞானஒளி வீசுபவன். "பொன் போன்றவனே, மணி போன்றவனே" என்றார். இந்த இரண்டும் உவமையாகு பெயர்கள்.

**பொருளே அருளே:-**

உலகப் பொருள்கள் அழியுந் தன்மையன என்று முன்னே கூறினார். ஆதலின், இறைவன் என்றும் அழியாத உண்மைப் பொருள் என்றார். அன்றியும் பேரருள் வடிவாகத் திகழ்பவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னே:-**

மன்- நிலைபேறு. இறைவன் நிலையானவன். நிலையான இன்பத்தை யருளுபவன்.
"மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே"

-சுந்தரர்.

**மயிலேறிய வானவனே:-**

சூரபன்மனாகிய ஆணவ மலத்தின் வலியை அடக்கி அவனை மயிலாகக் கொண்டவன் முருகன். ஆதலால் என் விதி வலியை அடக்கி என்னை ஆண்டருள் என்பது குறிப்பு. தானவன்- மேலானவன்.

**கருத்துரை**

மயிலேறிய வானவனே! நிலையில்லாத வாழ்வை விரும்பும் அறியாமையை அகற்றி, அநுபூதி ஞானத்தை அருள்செய்.

(தொடரும்...






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமையல் அறையில் சைவம்

திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்

பண்டைக்காலம் முதல் கி.பி 13ஆம் நூற்றாண்டு வரையில் சைவம் வளர்ந்ததும் பின் சிறிதளவில் மறையத் துவங்கியதும் வரலாற்று ஆசிரியர்களின் குறிப்பால் அறியப்படுகிறது. இந்தியாவின் மிகப்பழைய நாகரிக நகரங்கள் என்று ஆராய்ச்சியாளரால் கூறப்படும் மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் 600க்கு மேற்பட்ட சிவலிங்கங்கள் கிடைத்துள்ளன. சிந்துவெளியிலும் மற்றும் வடஇந்தியாவில் பற்பல இடங்களிலும் கிடைத்துள்ளன. இவை அனைத்தையும் ஒன்றுபடுத்திய சேர்ஜான் மார்ஷல் என்ற அறிஞர் சைவசமயம் "மார்க்கல் காலம்" அல்லது அதற்கு முற்பட்ட காலம் முதல் இன்றளவும் உள்ள மிகப்பழைமையான சமயம் என்று எடுத்துக் காட்டியுள்ளார். சங்ககாலத்திலும் "ஆலமர்செல்வன்" "முக்கண்ணன்" என்ற பெயர்களால் அழைக்கப்பட்ட சிவபிரானே சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் முதலிடம் பெற்றிருக்கிறார். முதற் பல்லவர்காலத்திலும் கோச்செங்கட் சோழன் ஏறத்தாழ எழுபது சிவன் கோவில்களைக் கட்டினான் என்று வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு சோழர் ஆட்சியிலும், பல்லவர் ஆட்சியிலும் செழித்தோங்கிய சைவத்தினுள் சாதிவேறுபாடு தோன்றி வளர்ந்து வயிரம் பாய்ந்து விட்டது. கி.பி 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மூடக்கொள்கைகளாலும், சாதிவெறியினாலும், சமய வெறியினாலும் சைவம் தன் ஆற்றலை இழந்து எதிரிக்குப் பணிந்தது.

இவ்வித காரணங்களால் சைவமதத்தை சொல்லிப்பிழைப்பவரும் பலராகிவிட்டனர். "அன்பே சிவம்" என்ற கொள்கை புதைக்கப்பட்டு அதன்மீது அறிவுக்குப் பொருத்தமற்ற கதைகள் கட்டப்பட்டன. இக் கேட்டினால் பெரும்பாலான சைவமக்கள் திருநீறு அணிவதோடு நிறுத்திக் கொண்டனர். கல்விச் செருக்காலும், செல்வச் செருக்காலும் சைவர் பலர் "சைபர்" ஆகி தம் சமயத்தைச் சேர்ந்த பலருடன் பழகுவதையும் தவிர்த்தனர்.

திருநீறணிந்தும் உள்ளத்தில் பல தீய எண்ணங்களை உலவ விடும் வேடதாரிகளை அப்பர் சுவாமிகள் வன்மையாகக் கண்டிக்கின்றார்.

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன்; மாமணிச்சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே!"

என்றபடி, சிவநேசர்கள் அன்பினால் காணக்கூடிய அருட்பெருஞ்சோதியை அறிவிலிகள்,

"உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருந்தியேனும்
கள்ளத்தே நிற்றி அம்மா! எங்ஙனம் காணுமாறே?"

என்று பரிதவிக்கிறார்களே! என்பதற்காக அப்பர் வருந்துகின்றார்.

"கங்கை ஆடிலன்; காவிரி ஆடிலென்;
கொங்கு தண்கும ரித்துறை ஆடிலென்;



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓங்கு மாகடல் ஒதநீர் ஆடிலென்;
எங்கும் ஈசன் எனாதவர்க் கிங்கிலையே”

கங்கையிலும், காவிரியிலும், கன்னியா குமாரியிலும் தானா ஈஸ்வரன் இருக்கிறான்? கடவுள் இல்லாத இடமில்லை என்ற உண்மையை உணர்ந்து ஒழுகினால் மோசத்திற்கு இடமேது?

“சாத்திரம் பல பேசும் சழக்கர்கான்!
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?”

என்று வினாவுகிறார்.

“கோசம், புல்லும், கையில் கூர்ச்சமும்
தோலும் பூண்டு, துயரம் உற்(று) என்பயன்?
நீல மாமயி லாடு துறையனே!
நூலும் வேண்டுமோ நுன் உணர்ந் தோர்கட்கே?

என்று பாடிக் குலங் கோத்திரங்களையும், சாத்திரங்களையும் கொண்டு பெருமை பேசும் சாதித் திமிரைக் கண்டிக்கிறார்.

சைவ மதத்தை வளர்க்கப் பாடுபட்டவர்களில் பல பெண்மணிகளுக்கும் இடமுண்டு. அத்தகைய சைவப் பெண்மணிகளில் திலகவதியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் முக்கியமானவர்கள். எந்தச் செயலைச் செய்து முடிப்பதென்றாலும் பெண்கள் துணையை நாடினால் அஃது எளிதில் முடியும். ஆதலால் இந்த சைவ சமயக் கோட்பாடுகளை நாம் இல்லற வாழ்க்கையிலேயே கையாள வேண்டும். நமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குச் சிறந்த சைவப் பெயர்களை இடவேண்டும். பெண்பிள்ளைக்கு “இலக்குமி” எனப் பெயர் வைக்கும் போது வீட்டில் உள்ள யாவரும் அப்பெயரை உச்சரிக்கும்போது வீட்டில் தெய்வீக சக்தி தோன்றும். இதை விடுத்து “ஆஷா” எனப் பெயர் வைக்கும்போது அவலம்தான் ஏற்படும். பிள்ளைக்குப் பெயர் வைக்கும் விடயத்தில் குடும்பப் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும்.

தெருவில் போகும்போது பார்க்கிறவர்களுக்கு “இது சைவர் வீடு” என்று தெரியும்படி வீடு அமைக்கப்பட வேண்டும். சைவர்களின் வீடமைப்பு முறை கலாசார வடிவம் மட்டுமல்ல சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதுமாகும். இன்றைய நவீன உலகில் ஆடம்பரத்திற்கு ஆளாகிவிட்டோம். வீட்டினுள் மலசல கூடம் அமைத்து மகிழ்கின்றோம். அதுவும் சமையலறைக்கு அருகிலேயே அமைக்கப்படுகிறது. இம்முறையிலுள்ள குறைபாட்டை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காலையில் வீட்டு வாசலில் மாக் கோலம், திருநீறு, மஞ்சள், குங்குமம் இட்டு விளங்கச் செய்ய வேண்டும். திங்கள், வெள்ளி, கிருத்திகை, திருவாதிரை முதலிய நாட்களில் மாவிலை கட்ட வேண்டும். செம்மண் இடுதலும் நலம். மாவிலை தூய்மை செய்யும், செம்மண் பூச்சிகள் சேராது காக்கும்.

வீட்டிற்கு அன்பையும், அறத்தையும், அறிவையும் உணர்த்தும் நல்ல படங்கள் மாட்டப்பட வேண்டும். கீழ்த்தர உணர்வை உண்டாக்கும் சினிமாப் படங்கள் கூடாது.

பூசை அறை இருத்தல் இன்றியமையாதது. வழிபாட்டிற்கு என்று ஒரு சுவாமி படமேனும் வேண்டும். இயலாதாயின் சுவரில் படங்களை மாட்டித் திரையிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளையார் பூசை அன்றாடம் செய்தல் வேண்டும். அதற்காக வீட்டில் இரண்டொரு பூச்செடிகளை வளர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரத்திற்காக வளர்க்கப்படும் சில குரோட்டன் தாவரங்கள் நுளம்பு தங்கும் குகையாக உள்ளது. இதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு அதிகமாகும். முன்னோர் வீட்டு வளவினுள் பழவகை மரங்களை நட்டு வளர்த்தார்கள். அவர்களின் எதிர்காலச் சிந்தனையையும், திட்டமிடலும் எண்ணி எண்ணி வியக்கலாம்.

முன்னைய வீடமைப்பு வீட்டை பசுவின் சாணத்தால் மெழுகக்கூடிய முறையில் அமைக்கப்பட்டிருந்தது. இன்று பிள்ளையார் பிடிப்பதற்குக் கூட பசுச்சாணம் எடுக்க முடியாத நாகரிக வளர்ச்சிக்கு உட்பட்டு விட்டோம். நவீன வீடுகளில் தொற்று அதிகமாக ஏற்படுவதனால் அதிகளவு தொற்று நீக்கிகளும் வந்துவிட்டன. வெளியில் இருந்து வீட்டிற்குள் வந்தால் கால் கழுவும் பழக்கத்தையும், இறந்த வீடு, வைத்தியசாலைக்குச் சென்று வந்தால் குளிக்கும் பழக்கமும் அவசியமாகும். சைவம் பரிசுத்தமானது. சைவர் வீடுகளும் தூய்மையாகத் துலங்க வேண்டாமா?

சமையல் அறைதான் உண்மையாகவே சமயத்தை வளர்க்கின்றது. சமையலறைதான் நாயன்மார் பலருக்கு பெருமையைத் தேடித் தந்தது. இல்லத்தின் வாழ்வரசியாய் இருக்கும் பெண்மணியின் உயிர்நாடியான இடம் சமையலறைதான். தன் கணவனையும், தன் மக்களையும், உற்றார் உறவினர்களையும் உணவால் மகிழ்விக்கும் இடம் சமையலறையன்றோ?

"உண்டி முதற்கே உணவின் பிண்டம்" என்பது நம் முன்னோர் வாக்கு. வெளி உலக வாழ்வில் ஈடுபட்டு பசியோடு வரும் கணவனை மனைவி சமையல் அறைக்குத் தான் பரிவோடு அழைத்துச் செல்வாள். இங்ஙனமே பள்ளிக்குச் சென்று திரும்பும் தன் பிள்ளைகளையும் அத்தாய் சமையலறைக்குத் தான் அன்போடு அழைத்துச் செல்வாள். தான் மிகுந்த கவனத்தோடு சமைத்த பொருள்களை அன்போடு தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் படைப்பாள். அருமையான சாப்பாடு என கணவன் அன்போடு சொல்லும்போது மனைவியின் முகம் மலர்ச்சியடைகின்றது.

மனைக்கு வந்த விருந்தினரை மகிழ்விக்கவும் சமையலறை உதவுகிறது. மகளிர் ஆட்சி செலுத்துமிடம் முழு இல்லமாக இருப்பினும் அவ்வில்லத்தை வாழ்விப்பது சமையலறையே ஆகும். வீட்டாரும், உற்றாரும், நண்பருமாக எல்லோரையுமே பேருண்டியாலும் சிற்றுண்டியாலும் மகிழ்விக்கும் இடம் சமையலறையே எனலாம்.

இங்ஙனம் எல்லோரையும் மகிழ்விப்பதற்கு அடிப்படையாக அமைவது யாது? அன்பேயாகும். அந்த அன்பு தான் சிவம் என்று சொல்லப்படும். அந்த அன்பினால்த்தான் மனைவி பல மணிநேரம் அடுப்பின் நெருப்புக்கு முன்னிருந்து பொறுமையாகச் சமையல் செய்கின்றாள். குழம்பு வைப்பதிலும், ரசம் வைப்பதிலும் இவ்வாறே ஒவ்வொரு கறி வைப்பதிலும் மிகக் கவனத்தோடு இருந்து இனிமையாகச் செய்கின்றாள். அவற்றைக் கூட்டும் போது உப்பு, காரம் முதலியன பொருந்தியிருக்கின்றனவா என்பதை ஆவலோடு பரிசோதிக்கின்றாள். தான் சமையலில் நற்பெயர் எடுக்க வேண்டுமே என்ற கவலை அவளை ஆட்டிப்படைக்கின்றது. இந்தச் சமையலறைதான் பெண்மைக்கு அமைந்த சிறந்த அடிப்படையாகும்.

சமையல் தொழில் பெண்களுக்கே சிறப்பாக உரியதாயினும் அறிவுடைய ஆடவரும் அதில் அடிக்கடி பங்குகொள்ள வேண்டும். ஓய்வு நாட்களில் பல குடும்பங்களில் சமையலறையில் கணவனும் மனைவியுமாக இருந்து உணவு தயாரித்தல் நடைபெறுகிறது. இப்படியான நிலைப்பாடு கணவன் மனைவி உறவை அன்பு மயமாக்க உதவிடும். இத்தகைய குடும்பங்கள் எம்மதத்தினராயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையெல்லாம் சைவக்குடும்பங்களேயாகும். "எங்கெல்லாம் அன்பிருக்கின்றதோ, அங்கெல் லாம் சிவம் இருக்கின்றது." எனவே அன்பை வசப்படுத்தும் சமையலறை சிவநெறியை வலுப்படுத்தும் கருவறையாகும்.

சமையலறை எமக்கு மட்டுமா சொந் தம்! என நவீன பெண்கள் கேட்கின்றார்கள். அவர்கள் வினா தவறானது. இயற்கை ஒரு நியதிக்கு உட்பட்டது. இந்த நியதி தவறு மாயின் அனைத்தும் பிழையாக முடிந்துவிடும். இயற்கையை வெற்றி கொள்ள முயலும் சில விஞ்ஞானிகள் ஆய்வுகளினால் ஏற்பட்டுவரும் சூழல் சமநிலைப் பாதிப்பை அனைவரும் அறிவோம். பெண்கள் நன்கு கல்வி பயில வேண்டும். பொருளாதாரம் காரணமாக வேலைக் குச் செல்லலாம், இன்னும் பல துறைகளில் இமாலய சாதனை செய்ய வேண்டும். திரு மணம் செய்வதும், குழந்தையைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல, அந்தக் குழந்தையை அன்பாக வளர்க்கவும் வேண்டும். குடும்பத்தை பல்கலைக்கழகமாக மாற்றும் பெரும் சக்தி பெண்கள்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. இந்தக் கருத்துக்களையே முன்வைத்து பாரதி "மாதர் அறங்களை முன்னர் இருந்ததை விட மேன்மையடையச் செய்திட வேண்டும்" எனக் குறிப்பிட்டதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

இல்லறத்தார் அனைவரும் அன்பாய் இருப்பதற்கு சமையலறையே அடிப்படை யாகும். இவ்வாறே உற்றார், உறவினர்களை விருந்தால் மகிழ்விப்பதும் சமையலறையே ஆகும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதுபோல சமையலறையின்மூலம் அன்புச் செல்வம் சமுதாயத்தில் பரவுகிறது; அதாவது வீட்டில் தொடங்கும் சைவமே நாட்டிலும் காணப்படும். சமையலறையில் மலரும் அன்பு வீட்டில் பரவுகிறது- பின்பு நாட்டிலும் பரவு கிறது.

இங்குள்ள பாடசாலைகளில் சமைய லறையில் ஒவ்வொரு வேளையில் பலநூறு மாணவர்களுக்கு உணவு தயாரிக்கப்படுகிறது. "தம்மைப் பெற்று வளர்த்து அன்பைச் சொரியும் பெற்றோரை விட்டு, நம்மை நம்பி வரும் இப்பிள்ளைகளுக்கு இனிய உணவை அளிப்பது நமது கடமை" என்று தாயன்புடன் எரிகின்ற அடுப்புகளுக்கு முன் ஒவ்வொரு நாளும் பலமணிநேரம் நின்று வேலை செய் யும் சமையற்காரர்களே அன்பின் திருவுரு வங்கள் என்று சொல்லலாம். அவர்கள் படைக் கும் இனிய உணவினால் தான் கிராமத்து இளம்பிள்ளைகள் துள்ளி விளையாடுகின்றார் கள் - படிக்கின்றார்கள் - ஆடுகின்றார்கள் - பாடுகின்றார்கள். எனவே சமையலறை சைவத் தால்த்தான் உலகமே இயங்குகின்றது என்பது முக்காலும் உண்மை.

## குருபூஜை தினங்கள்

| | | |
|---|---|---|
| யூன் 06 | வை 23 வியாழன் | கழற்சிங்கர் |
| யூன் 12 | வை 29 புதன் | சேக்கிழார் |
| | | நமிநந்தியடிகள் |
| யூன் 13 | வை 30 வியாழன் | சோமாசி மாறர் |
| யூலை 01 | ஆனி 17 திங்கள் | கலிக்காமர் |
| யூலை 12 | ஆனி 28 வெள்ளி | மாணிக்கவாசகர் |
| யூலை 13 | ஆனி 29 சனி | அமர்நீதிநாயனார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காளமேகம்" பாடல்கள் (தொடர்ச்சி...)



## தை மாசி பங்குனி:

சொன்ன சமிசைகளுக்கு ஏற்றபடி எல்லாம் நொடியளவுக்குள் சுவைபடப் பாடி வரும் காளமேகத்தை, தாம் மடக்கிவிட நினைத்த ஒருவர், "தை மாசி பங்குனி" என்னும் மாதப் பெயர்கள் வருமாறு ஒரு வெண்பா சொல்லும் - என்றார்.

கவிஞரோ அப்படியே சொன்னதுடன் அவை மாதப் பெயர்களாயினும் பொருள் வேறாகச் சுட்டுகின்ற சுவையுடையனவாக அமையுமாறும் தம் வெண்பாவை அமைத்துப் பாடினார். அந்தப் பாடல்-

பாணர்க்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தாணு விரித்ததுவும் சக்கரத்தோன் - ஊணதுவும்
எம்மானை ஏத்துவதும் ஈசனிடத்துத் துஞ்சிரத்தும்
தைமாசி பங்குனிமா தம்.

பாணர்க்குச் சொல்லுவதும்- தையற்காரர்களுக்குச் செய்யெனச் சொல்லும் சொல்லும், பைம்புனலை மூடுவதும்- பசிய நீரினை மூடிக்கொண்டிருக்கும் பொருளும், தாணு உரித்ததுவும்- சிவபெருமான் உரித்ததுவும், சக்கரத்தோன் ஊணதுவும் சக்கரப்படையினை உடையோனான திருமாலின் உணவாக விளங்கியதும், எம்மானை ஏத்துவதும்- எம்பெருமானாகிய சிவனைத் துதிப்பதுவும், ஈசன் இடத்தும்- அந்த ஈசனின் இடப்பாகத்தே ஆகியதும், தை மாசு இபம் கு உனிமாது அம்- தை என்னும் சொல்லும்; மாசு ஆகிய பாசியும்; இபம் என்னும் யானையும்; நிலமும்; மனத்தே நினைத்தலும்; அழகிய மாதாம் உமையம்மையும் என முறையே ஆவதாகும்.

தை மாசி பங்குனி மாதம் என்றதனை தை, மாசு, இபம், கு, உனி, அம்மாது எனப் பதப்பிரிவு செய்து அதற்கேற்பப் பொருள் கொள்ளல் வேண்டும். உன்னி, உனி என்று ஆயது இடைக்குறை.

## ஆயனுக்கு மண்:

இது கடைமொழி மாற்றுச் செய்யுள். "ஆயன்" என்றதனை முதலடியின் இறுதியிலே வைத்துப் பொருள் செய்தல் வேண்டும்.

ஆயனுக்குக் கண்மூன்றாம் ஆதிசிவ னுக்கிருகண்
மாயனுக்குச் செங்கையிலே மான்மழுவாம் - நேயமுடன்
சங்கரர்க்குச் சங்காழி தான்மாலுக் காலமாம்
மங்கையிடத் தாற்காகு மண்

"கண் மூன்றாம் ஆதி சிவனுக்கு; இரு கண் ஆயனுக்கு; செங்கையிலே மான் மழுவாம் நேயமுடன் சங்கரற்கு; சங்கு ஆழி தான் மாலுக்கு; ஆலமாம் மங்கை இடத்தாற்கு; ஆயனுக்கு ஆகும் மண்" என்று கூட்டிப் பொருள் கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசிவன்- அனைத்திற்கும் ஆதியான சிவபிரான், ஆயன்- கோபாலனான திருமால், நேயமுடன்- விருப்பமுடன் கொண்டது, ஆழி- சக்கரம், ஆலம்- நஞ்சு, மங்கை இடத்தாற்கு- மங்கையைத் தன் இடப்பாகத்தே உடையவனுக்கு; சிவனுக்கு.

இதன்கண் திருமால் சிவன் ஆகியோரின் கண்கள், ஆயுதம், அவர் உண்பவை ஆகியவை முறையே வந்தன.

**கொன்றை - சிவன்:**

இந்தச் செய்யுளின் கடைசி அடியான "சிக்கலிலே வாழும் சிவன்" என்ற தொடரை முதலில் வைத்துப் பொருள் உரைத்தல் வேண்டும்.

"சிக்கல்" என்பது "திருச்சிக்கல்" என வழங்கப்பெறும் பாடல் பெற்ற தலம். நாகபட்டினத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது. "சிக்கல்" எனும் புகையிரத நிலையம் ஊருக்கு அரை மைல் தள்ளி இருக்கிறது. சுவாமி பெயர்: நவநீதேஸ்வரர், தேவி பெயர்: வேனெடுங்கண்ணி அம்மை. சிக்கல் வடிவேலனுக்குக் கந்தசஷ்டிப் பெருவிழா இன்றும் சிறப்பாக நடைபெறுவதாகும்.

கொன்றை மலர்தரித்தான் கோபாலன் கோலெடுத்து
நின்றுகுழ லூதினான் நீள்சடையோன் - பொன்றிகழும்
அக்கணிந்தான் மாயன் அரவணையிற் கண்வளர்ந்தான்
சிக்கலிலே வாழும் சிவன்.

சிக்கலிலே வாழும் சிவன் கொன்றை மலர்தரித்தான்- திருச்சிக்கலிலே கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் கொன்றை மலர் மாலையினைத் தரித்தவன்; கோபாலன் கோலெடுத்து நின்று குழலூதினான்- கோபாலனான மாயவனோ மாடு மேய்க்கக் கோலையும் கையில் எடுத்துக்கொண்டு நின்று புல்லாங்குழலை வாசித்தான்; பொன் திகழும் நீள் சடையோன் அக்கு அணிந்தான்- அழகுடன் விளங்கும் நீண்ட சடாபாரத்தை உடைய சிவபெருமான். எலும்பினை ஆபரணமாக அணிந்தவன்; மாயன் அரவணையிற் கண் வளர்ந்தான்- திருமால் பாம்பாகிய படுக்கையிலே படுத்து உறங்கினான்.

**கடம்பற்குக் கை:**

கடம்பர்க்கென் டோளயற்குக் கண்பதினைந் தாமால்
கடம்பற்கே நால்வாய்கை யைந்தே - கடம்பற்கோ
டானைமுகற் காயிரங்கண் ணாகண்ட வற்கிலம்பா
டானைமுகற் காறிரண்டு கை.

இதுவும் கடைமொழி மாற்றுவகையைச் சேர்ந்த பாடலே. ஆனால் கடைசி அடியிலே வரும் இறுதி இரு சீர்களை மட்டும் முதலில் வைத்துப் பொருள் செய்ய வேண்டும்.

ஆறிரண்டு கை கடம்பற்கு- கடம்ப மாலையையுடையவனான முருகப் பெருமானுக்குப் பன்னிரண்டு கைகள்; எண் தோள் ஆயற்கு- பிரம்மாவுக்கு எட்டுத் தோள்கள்; கண் பதினைந்தாம் ஆல் கடம்பர்க்கு- கடம்ப வனத்து வீற்றிருக்கும் சிவபெருமானுக்குப் (ஐந்து முகங்கள் ஆனதால்) பதினைந்து கண்களாம்; நால் வாய்கை ஐந்தே கடம்பற்கோ ஆனை முகற்கு- தொங்கும் வாயும் ஐந்து கைகளும் மதமும் பல்லாகிய கோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைமுகக் கடவுளுக்கு உள்ளனவாம்; ஆயிரம் கண் அகண்டலர்க்கு- இந்திரனுக்கு ஆயிரம் கண்கள்; இலம்பாடு ஆன் ஐம் முகற்கு- ஐந்து முகமுடைய சிவனுக்கு வறுமையும் ஆனேறும் உரிமை உடையவனாம்.

**சிதம்பர சின்னங்கள்:**

சிதம்பரம் நடராஜர் கோவிலிலே இருக்கின்ற சின்னங்கள் பலவற்றையும் தொகுத்து வெண்பாவாகப் பாடியது இது.

ஞான சபைக னகசபைசிற் றம்பலம்பே
ரானந்தக் கூடந் திருமூலட் - டானம்பே
ரம்பலம்பஞ் சாவரண நாற்கோபுரம் பொற்செய்
கம்பமண்ட பஞ்சிவகங் கை.

சிற்சபை ஞானசபை என்பது; கனகசபையாவது பொன்னம்பலம்; பெருமான் நடராசமூர்த்தியாக வீற்றிருக்கும் இடம் அது; சிற்றம்பலம் என்பது சிற்சபையான ஞான சபைக்கு முன்னர் இருப்பது; பேரின்ப சபை பேரானந்தக் கூடம் எனப்பெறுவது; இது பெருமான் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாக விளங்கும் இடம். பேரம்பலம் என்பது தேவசபை; தேவர்கள் வந்து பெருமானைத் தரிசித்துப் போற்றும் இடம். ஐந்து பிரகாரங்கள் பஞ்சாவரணம் என்று குறிக்கப்பெற்றன. நான்கு திசைகளிலும் விளங்கும் கோபுரங்கள் நாற்கோபுரங்கள் என்று குறிக்கப் பெற்றன. கம்ப மண்டபம்- ஆயிரங்கால் மண்டபம். சிவகங்கை- திருக்குளத் தீர்த்தம்.

**திருவாரூர்ச் சின்னங்கள்:**

திருவாரூர்க் கோயிலின் முக்கியமான சின்னங்களைக் குறிக்கும் செய்யுள் இது.

சங்குதீர்த் தந்திருச் சாளரவா யில்வீர
சிங்காச னந்திருவந் திக்காப்புப் - பங்குனிமா
தத்திரு- நா டீர்த்தந் திருவினா தன்கோயில்
உத்தரபா கந்திருவா ரூர்.

சங்கு தீர்த்தம், திருச்சாளர வாயில், வீர சிங்காசனம், திருவந்திக்காப்பு, பங்குனி மாதத் திருநாள், திருவின் தீர்த்தம், உத்தரபாகம், நாதன் கோயில், இவை திருவாரூர்ச் சிறப்புக்கள்.

திருச்சாளர வாயில்- தியாகர் திருமுன்பு இருக்கும் பலகணிவாயில், வீர சிங்காசனம்- தியாகர் வீற்றிருப்பது, திருவந்திக்காப்பு- மாலை வேளையிற் சார்த்தும் திருக்காப்பு, பங்குனி மாதத் திருநாள்- திருவுத்தரத் திருநாள், திருவின் தீர்த்தம்- கமலாலயம் என்னும் திருக்குளத் தீர்த்தம்.

**கும்பகோணத்துச் சின்னங்கள்:**

திருக்குடந்தையிலே கும்பேசர் கோயில் கொண்டிருக்கும் ஆலயம் புகழ் பெற்றது. அதனையும் பிறவற்றையும் குறிப்பது இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குடந் தையா திகும்பேசர் செந்தா
மரைக்குளம் கங்கை மகங்கா - விரிக்கரையின்
ஓரங்கீழ்க் கோட்டங்கா ரோணமங்கை நாயகியார்
சாரங்க பாணி தலம்.

திருக்குடந்தை ஆதி கும்பேஸ்வரர்- திருக்குடந்தைப் பதியினிடத்தேயுள்ள ஆதியான கும்பேசப் பெருமானின் திருக்கோயில்; செந்தாமரைக் குளம்- செந்தாமரை மலர்கள் பூத்திருக்கும் திருக்குளம்; கங்கை மகம்- கங்கைகள் வந்து கூடுகின்ற சிறப்பு உடையதான மகாமகக் குளம்; காவிரிக் கரையின் ஓரம் கீழ்க்கோட்டம்- காவிரிக் கரையின் அருகேயிருக்கும் "குடந்தைக் கீழ்க்கோட்டம்" என்னும் திருக்கோயில், காரோணம்- திருக்குடந்தைக் கீழ்க்காரோணம் என்னும் தலம்; மங்கை நாயகியார்- மங்கை நாயகியார் கோவில்; சாரங்கபாணி என்னும் பெருமாள் கோயில் என்பன குடந்தை நகரத்தின் சிறந்த சின்னங்கள் ஆகும்.

(தொடரும்....

# எட்டுவிதமான மானசீக புஷ்பங்கள்

பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தை வாசம் மிகுந்த மலர்களைக் கொண்டு வணங்குவதுபோல இருதயத்திலுள்ள லிங்கத்தை வணங்குவதற்கு எட்டுவித மானசீக புஷ்பங்கள் சொல்லப்பட்டுள்ளன.

❖ உடல், வாக்கு, மனம் எனப்படும் முக்கரணங்களாலும் யாருக்கும் எந்தவித ஹிம்சையும் செய்யக்கூடாது. **அஹிம்சை** எனப்படும் அதுவே முதல் புஷ்பமாகும்.

❖ கண், காது, வாய், மூக்கு, மனம் என்னும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஒருநிலைப்படுத்த வேண்டும். **இந்திரிய ஜபம்** என்பது இரண்டாவது புஷ்பமாகும்.

❖ தேகத்துக்கோ, மனத்துக்கோ துன்பம் நேருமானால் மனம் கலங்கக் கூடாது. தைரியமாக அவற்றை ஏற்க வேண்டும். **தைரியம்** என்பது மூன்றாவது புஷ்பம்.

❖ ஒருவர் எவ்வித தீங்கு இழைத்தாலும் அதைப் பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும். அதைப் பொருட்படுத்தக்கூடாது. **பொறுமை** எனப்படுவது நான்காவது புஷ்பம்.

❖ தேகம், மனம், வாக்கு இம் மூன்றின் விஷயத்திலும் எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும். அவைகளின் ஈடுபாடுகளில் களங்கமோ, அசுத்தமோ கூடாது. **ஸௌசம்** எனப்படும் சுத்தியே ஐந்தாவது புஷ்பம்.

❖ கோபம் ஏற்படக்கூடிய சமயம் வந்தாலும், பிறர் உன்னைக் கோபம் கொள்ளுமாறு தூண்டினாலும் அதற்கு இடமளித்துவிடக்கூடாது. கோபத்தை அறவே ஒழிக்க வேண்டும். **அத்ரோஹம்** எனப்படும் இது ஆறாவது புஷ்பம்.

❖ அதர்மமான காரியத்தைச் செய்வதில் மனம் கூச வேண்டும். எண்ணத்திலும் பேச்சிலும் அதர்மமான காரியங்களில் ஈடுபட மனம் கூசி அதைச் செய்யாமல் தடுக்க வேண்டும். வெட்கப்படக்கூடிய இத்தன்மையை அடைவதே **ஹ்ரீ** என்னும் ஏழாவது புஷ்பமாகச் சொல்லப்பட்டுள்ளது.

❖ மனத்திலே எப்போதும் சத்தியத்தையே நினைக்க வேண்டும். பேச்சிலும் சத்தியத்தையே கடைப்பிடிக்க வேண்டும். **சத்தியம்** எனப்படும் இது எட்டாவது புஷ்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குருவாயூரப்பன் என் அப்பன்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்



பத்து அவதாரங்கள் எடுத்த பச்சைநிறக் குழந்தை. இந்தப் பாருலகையே தன் வாய்க்குள் அடக்கிப் "பார்" என்று காட்டியதே அந்தக் குழந்தை. பாஞ்சசன்யம், சுதர்சனம் ஏந்திப் பாற்கடலிலிருந்து அண்ட சராசரங்களையும் காக்கிறதே அந்தக் குழந்தை. கொஞ்சிக் கொஞ்சி மோகம் தீரா ஏக்கத்துடன் கோபியர்கள் சுற்றிச் சுற்றி வந்தார்களே அந்தக் குழந்தை. "அஞ்சாதே அர்ச்சுனா! அனைத்துக்கும் நானே கர்ப்ப நாயகன்: கடமையைச் செய்" என்று ஐந்தாம் வேதம் தந்த அந்தக் குழந்தை.

இத்தனையும் செய்துவிட்டு, மலர மலர சிரித்துக்கொண்டு குளிரக் குளிரப் பாலாபிஷேகம் ஏற்றுக்கொண்டு ஒவ்வொருநாளும் உஷத்காலமும் புலரப்புலர "உன்னிக்கிருஷ்ணா ஓடிவா!" என்று பக்தர்கள் உருக உருக புன்னகை தவழும் உன்னிக் கிருஷ்ணனாக அதாவது சின்னக் கண்ணனாக அந்தத் தெய்வக்குழந்தை அருள்கொழிக்க நின்று கொண்டிருக்கும் திருத்தலம் குருவாயூர்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீ குருவாயூரப்பனின் அருளைப் பெறுவதால் குடும்பத்திலுள்ள துக்கங்கள் நீங்கி நன்மைகள் ஏற்படும் என்பது பலர் அனுபவித்து அறிந்த உண்மை. மகா விஷ்ணுவின் பூரண அவதாரம் கிருஷ்ணாவதாரம். கிருஷ்ண பெருமான் தமது வாலிபப் பருவத்தில் மாபெரும் வீரராகவும், மிகச் சிறந்த ராஜதந்திரியாகவும், உலகிற்கே போதனை செய்யும் ஜகத்குருவாகவும் விளங்கியிருக்கிறார். அழகே வடிவமாகவும், அன்பே உருவாகவும், அருள் செய்வதையே குணமாகவும், அதர்மத்தை அழிப்பதையே நோக்கமாகவும் கொண்ட பகவான், சாதாரண மனிதர்களைப்போல் உடலும் வடிவமும் கொண்டு விளங்கிய திருவருட் கோலத்தைத்தான் நாம் பகவானின் திருக்கோயில்கள் எங்கும் மங்கள விக்கிரகங்களாகக் காண்கிறோம். பகவானுடைய எல்லாத் திருக்கோயில்களையும்விட தனித்தன்மையும், தனிப் பெருஞ்சிறப்புமுடையது குருவாயூர் திருக்கோயில். வைகுந்தத்தில் பக்தர்களை வரவேற்கும் பகவான் எத்தகைய திருக்கோலத்தைக் கொண்டிருப்பாரோ அத்தகைய கம்பீர வடிவழகுடன் தான் குருவாயூரில் காட்சியளிக்கிறார். தென்னகத்தின் துவாரகையாக குருவாயூர் விளங்குகிறது. ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் கிருஷ்ணர் தேவகி வசுதேவருக்கு எத்தகைய பரிபூரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வருபத்தோடு தரிசனம் அளித்தாரோ, அத் தகைய ஜகன்மோகன ரூப சௌந்தர்யத்துடன் மிகவும் கவர்ச்சிகரமான வடிவத்துடன் நான்கு திருக்கரங்களிலும் சங்கு, சக்கரம், கதை, பத்மமலர் ஆகிய திருச்சின்னங்களுடன் தரிசனமளிக்கிறார். பசுந்துளசி மாலைகளுடன் அழகிய முத்தாரங்களை அணிந்து, கண் களை மலர்விக்கும் திவ்விய திருக்கோலத் துடன் காட்சியளிக்கிறார். அவரது திருமுகத் திலும், திருவிழிகளிலும் கருணையும், கிருபை யும், சுபீட்சமும் பால்போலப் பொழிந்து வரு கின்றதை எந்நேரத்திலும் கண்டு மகிழலாம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு தனது அவதார காரியங்கள் எல்லாம் முடிந்து, சுவாமி வைகுண்டத்திற்கு செல்வதற்கு சற்று முன்பு தமது அந்தரங்க சீடனும், அரிய பக்தனுமாகிய உத்தவ முனிவரிடத்தில் தான் வைகுண்டம் செல்லப்போவதாகவும், தீமைகள் மலிந்த கலியுகத்தில் மக்களுக்குக் காவலாக இந்த விக்கிரகம் இருக்கட்டும். எனது சக்தி களுடன் இந்த விக்கிரகத்தில் ஆவாஹனம் செய்துகொண்டு அதன்மூலம் அருள்பாலிப் பேன். பக்தர்கள் இந்த விக்கிரகத்தை தொழுது வணங்கி வழிபட்டு பூசித்து வந்தால், நான் எனது ஆசிகளையும் வரங்களையும், வாழ்த் துக்களையும் வழங்குவேன். இன்னும் ஏழு நாட்களில் துவாரகையை பிரளயம் ஏற்பட்டு கடல்கொள்ளும். நான் பூசித்த இந்த விக்கிர கம் மாத்திரம் மிதக்கும். அதனைத் தேவ குருவான பிரகஸ்பதி மூலம் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றார். கலியுகம் பிறந்த தும் குருவும், வாயுவும் இடம்தேடி அலைந்தார் கள். அப்போது சாட்சாத் சிவபெருமானே கேர ளத்திலுள்ள இத்திருத்தலத்தில் பிரதிஷ்டை செய்யுமாறு அருள்புரிந்தார். சிவபெருமான் பார்வதியுடன் அருகிலுள்ள மம்மியூரில் எழுந் தருளிவிட்டார். மம்மியூருக்கும் சென்று வழி பட்டால்தான் பிரார்த்தனை நிறைவுபெறுமாம். இப்படிக் குருவும், வாயுவும் சேர்ந்து இணைந்து பிரதிஷ்டை செய்தபடியால் குரு வாயூர் என்ற பெயர் வந்தது.

தத்தாத்ரேயர் என்ற முனிவரின் யோச னைப்படி பரீட்சித்து மன்னனின் மகனாகிய ஜனமேய மன்னன் தீராத தொழுநோய் தீர குருவாயூரப்பனை பூஜித்து நோய் நீங்கப் பெற்றார். ஆதி சங்கரர் நாராயணபட்டத்திரி, பூந்தானம் நம்பூதிரி, பில்வமங்களஸ்வாமியார் போன்ற புனித மகான்களின் அருள்வலிமை யால், யோகபலத்தால், தியானப் பெருமை யால் குருவாயூர்த் திருக்கோயில் மேலும் புனிதத் தன்மையும், தெய்வீக சக்தியும் பெற்றுள்ளது. அந்த மோகனக் கண்ணனின் முத்துச் சிரிப்பில் சரணாகதியாகி உடற்பிணி களையும், உளப்பிணிகளையும் போக்கிக் கொண்ட மகான்கள், கவிஞர்கள் எத்தனை? எத்தனை? அந்தச் சிரிப்பில் பித்தாகி, அந்த மாயக் குழந்தையை தன் மடிக்குழந்தை யாக்கி மகிழ்ந்தாள் ஒரு தாய். ஒரு கன்னி அவனுக்கு மாலையானாள். எத்தனை ஞான லீலைகள், தர்மலீலைகள்! நாராயண பட்டத் திரி "நாராயணீயம்" பாடித்தனது வாதநோய் நீங்கப்பெற்றார். இவர் குருவாயூரப்பன் சந்நிதி யிலிருந்து ஒவ்வொரு லீலையைப் பாடிவிட்டு "கிருஷ்ணா! நான் சொல்வது சரிதானே!" என்று ஒவ்வொரு லீலையாகக் கேட்பாராம். கிருஷ்ணன் தலையை ஆட்டினால்தான் மறு பகுதிக்குப் போவாராம். அவர் தலையாட்டா விட்டால்; தன் தலையிலடித்து தனக்குத்தானே தண்டனை கொடுப்பாராம். இதனைத் தாளாத கிருஷ்ணன் உடனே பிரத்தியட்சமாகக் காட்சி தந்துவிடுவார். மகானோடு கண்ணன் காட்சி கொடுத்து, சிரித்து, நேரில் பேசியிருக்கிறார். அதற்குரிய பக்குவநிலையடையும்போது நாம் கண்ணனை நேரில் பார்க்கலாம்.

விடியற்காலை 3 மணிக்கு குருவா யூரில் நிர்மால்ய தரிசனம் காணும்வேளை அந்தத் தலத்தில் மிகமுக்கியமான தரிசனம். நாதஸ்வர ஓசை ஒலிக்க, சங்கம் முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பள்ளியெழுச்சி கொண்ட கிருஷ்ணனின் சந்நிதிக் கதவுகள் திறக்கப்பட்டதும் தீப ஒளியுடன் அப்பனின் நிர்மால்ய தரிசனம் காணலாம். எங்கும் நாராயணா, கிருஷ்ணா, குருவாயூரப்பா என்ற முழக்கம். "பூலோக வைகுண்டம்" என்று போற்றப்படும் குருவாயூரப் பன் சாமியை நின்று நிதானமாகப் பார்க்கவிட மாட்டார்கள். சுற்றிச் சுற்றிவந்து எத்தனை தடவையும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். அழகுக் கிருஷ்ணவிக்கிரகத்தை வேறு எந்தத் தலத்திலும் காணமுடியாது. "பாதாள அஞ்ச னம்" என்ற அபூர்வப் புனிதப் பொருளால் ஆனவிக்கிரகம். ஆதிகாலம் தொட்டு அணை யாத நெய்விளக்கில் கிருஷ்ணன் ஜோதியாய் மின்னுகிறார். தைலாபிஷேகம், நீர் அபிஷேகம் எல்லாம் முடிந்து முதல் அலங்காரம் குழந் தைக் கண்ணன்தான்! என்ன அழகு! இடை யில் அரைஞாண், கையில் குழல், தலையில் மயில் சிறகு அலங்காரம். இந்தப் பாருல கையே அள்ளி உண்ட அந்தச் சின்னக் கண் ணனைப் பார்வையாலேயே அள்ளி உண்ண லாம். இந்தத் தோற்றத்தில் உருகித்தான் குரூரம்மா என்ற பக்தை பித்தாகிப்போனாள். அவள் பக்தியில் கட்டுண்டு அவள் நினைக் கும் போதெல்லாம் அவள் மடியில் விளையாடு வானாம் குட்டிக் கண்ணன். இந்த அலங்காரம் கலைந்த பின் அபிஷேகத்தின் பின் பெரிய கிருஷ்ணனாக அலங்காரம். இப்படிக் குழந் தைக் கண்ணன், பெரிய கிருஷ்ணன் உருவங் களில் காட்சி அளிப்பதன் நோக்கம், "பிறப் பிலிருந்து உன் வாழ்வு முழுவதும் நான் காவல்" என்று உறுதியளிக்கிறது இரவு அத்தாள பூஜை நடக்கிறது.

(தொடரும்...

# சந்நிதியான் புகழ் மாலை



உலகையெல்லாம் காத்திடும்
உலகநாதன் மகனே சண்முகா
உனைவிட அழகில்லை இவ்வுலகிலெதுவும்
உன் அருவமேனி எந்நாளும்
உருவமென என் நெஞ்சில் நிற்க
உருவாய் வருவாய் குமரா
உன் புகழைப்பாடி எந்நாளும் வாழ
உன்னடியை நாடி வந்தேன் சந்நிதியானே

ஊரெல்லாம் உன் கோயில்
ஊரெல்லாம் உன் நாமம்
ஊரெல்லாம் கூடி இழுக்கும்
ஊர்ந்து வரும் தேரோட்டம் காண
ஊரின் கண் காணாது முருகா
ஊர் சிறந்து வாழவேண்டும்
ஊமை மனம் புலம்புதையா

-ச. வாகீசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு விருந்து

திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள்

ஓங்கார கணபதியே ஒருமுகமாய் உனை நினைந்து
கங்குல் பகல் கண்விழித்தே கழல் தொழு தேன்
எங்கும் நிறை பரப் பிரம்மத்தை என் சிந்தையிலே
தங்கிடச் செய்வாய் தலைமகனே

மனிதர்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் சிந்திக்கத் தெரிந்தவர்கள். மனித வாழ்வு எண்ணும் எண்ணங்களால் ஆனது. "நீ எதை எண்ணுகிறாயோ அதுவாகவே நீ ஆகின்றாய்" என்பது ஆன்றோர் வாக்கு. எண்ணங்கள் சத்துடையவையாயின் வாழ்வு சத்தானதாக சலிப்பற்றதாக அமையும்.

நல்ல எண்ணங்கள் தோன்ற வேண்டுமாயின் நல்லோர் கூட்டத்தில் சேர வேண்டும். நல்ல சொற்பொழிவுகள், சத்சங்கங்கள் இவற்றில் அடிக்கடி கலந்துகொள்ள வேண்டும். உணவு, உடை, தரிப்பிடம் ஆகியவை மனிதனுக்கு அத்தியாவசிய தேவை. இவற்றிற்காக நாம் தொழில் செய்து சம்பாதிக்க வேண்டும். அதேபோல உலகில் நிம்மதியாகச் சந்தோஷமாக வாழ உலகநீதி, நன்னெறி, திருக்குறள், பகவத்கீதை, நற்சிந்தனை போன்ற சத்தான நூல்களைத் தினமும் ஒரு மணி நேரமாவது ஆறுதலாக இருந்து வாசித்து உணரவேண்டும். இவை மனத்திற்குத் தெம்பூட்டவல்ல நூல்களாகும்.

உடல் ஆரோக்கியத்தைப் பேணச் சத்தான உணவு, சுத்தமான நீர், ஒழுங்கான உடற்பயிற்சி, சீதோஷ்ணத்திற்கேற்பச் சுத்தமான அளவான உடை என்பன அவசியமாகின்றது. இவற்றை ஒழுங்காகப் பேணின் உடல் ஆரோக்கியம் பெறுகின்றது. ஆனால் மனம் ஆரோக்கியம் இல்லாவிட்டால் எந்தக் காரியத்தையும் செவ்வனே செய்ய இயலாது. ஒழுங்கான உணவுமுறை, தூக்கம், உடற்பயிற்சி என்பன பாதிக்கப்படுகின்றது. செய்யும் தொழிலில் அசிரத்தை உண்டாகின்றது. ஊக்கம் குறைகின்றது. இதனால் மனச்சலிப்பும் சோர்வும் உண்டாகின்றது. வாழ்வு கேள்விக்குறியாகின்றது. விரக்தி, வயிற்றெரிச்சல் என்பன உண்டாகி அலைக்களிக்கின்றது.

ஆகவே நாம் இந்த உடலைச் சீராகப் பேணுவதுபோல் உள்ளத்தையும் சீராகப் பேணினால்தான் வாழ்வு வளம் பெறும். அமைதி, ஆனந்தம் என்பன கிடைக்கும் வாழ்வில் திருப்தி ஏற்படும்.

"போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து"
பசி யென்னும் நோய்க்கு
உணவென்பது மருந்து"

நோயாளிக்கு உறவு மருத்துவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஆன்றோர் வாக்கு. பசியெடுத்தபின் உணவு உண்டால் எளிதில் சீரணமாகின்றது பசியெடுக்க மருந்துண்டு உணவை அதிகமாக உண்பதால் சீரணக்கருவிகள் விரைவில் பழுதடைகின்றன. ஆகவே, பசித்தபின் உண்பது ஆரோக்கியத்தைத் தரும்.

"ஆடைபாதி ஆள் பாதி" என்பார்கள் பருவகாலங்களின் தட்ப வெப்ப நிலைக்கேற்பவும் அதிக இறுக்கமில்லாமலும் மனக்கிளர்ச்சியைத் தூண்டாதிருக்கும் வகையிலும் உடைகளை அணிவதே உடலுக்கும் மனத்திற்கும் ஆரோக்கியத்தைத் தருவதாகும்.

காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள வீடு, தேவைக்கேற்ப வீட்டுப் பொருட்கள் போதுமானது. வீடும் வீட்டுப் பொருட்களும் நம்மால் பேணக்கூடியதாக இருந்தால்த்தான் நமக்குச் சந்தோஷம். அளவிற்கு மீறிய பெரியவீடு, அதற்குள் அதிகமான பொருட்களை வாங்கி நிரப்புவதால் அதனைப் பராமரிக்க முடியாது. இதன் விளைவு துன்பமேயாகும்.

பணம், கார், பங்களா மற்றும் சொத்துக்கள் என்பன தேடத்தேட இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்ற அவாவைத் தூண்டிக்கொண்டேயிருக்கும். வாழ்நாள் முழுவதும் மனிதன் இதற்காக உழைத்துக்கொண்டே இருக்கின்றான். நேரமில்லை, நிம்மதியில்லை, ஓய்வில்லை என்று அலுத்துக் கொள்கிறான். இத்தகைய மன அழுத்தத்தால் ஆரோக்கியம் குன்றுகின்றது. உடலில் நச்சுத்திரவம், நச்சு வாயு என்பன சுரந்து நோயாளியாக்குகின்றது. எத்தனை வசதிகள் இருந்தும் எதையும் அனுபவிக்க முடியாதவன் ஆகின்றான். எதையும் தேவைக்கேற்ப வாங்கி அளவோடு வாழ்பவன் மனத்திருப்தியோடு நிம்மதியாக வாழ்கின்றான். போதுமென்ற மனம் கொண்ட மனிதன்தான் வசதியாக வாழ்கின்ற பெரிய மனிதன்.

நல்ல சிந்தனைகள் அமிர்தம் போன்றவை. இவை எப்போதும் சுரந்து கொண்டிருந்தால்; மனிதன் எப்போதும் சாந்தமாகவும், அமைதியாகவும், நிதானமாகச் செயலாற்றுபவனாகவும் இருப்பான். இவ்வமிர்தம் நமக்குள் எப்போதும் சுரந்து கொண்டிருக்க நாம் நல்லவற்றைப் பார்த்து, கேட்டு, பேசி, வாசித்து மனத்தை நல்வழிப் படுத்தினால் போதும். இதற்கு அதிக பணமோ நேரமோ செலவழிக்க வேண்டிய அவசியமில்லை. நல்ல மனம் படைத்த நல்லவர்களோடு கூட்டுறவு வைத்தால் எல்லாம் நலமே நடக்கும்.

நமது தேவைக்காகப் படைக்கப்பட்டவையெல்லாம் இறைவனால் நமக்கு வழங்கப்பட்ட வரப் பிரசாதங்கள். இதற்காகத் தினமும் அவனுக்கு நன்றிகூறி அவனுக்கு அர்ப்பணித்து அதனை அனுபவித்தால் வாழ்வில் என்றும் எதனாலும் துன்பமில்லை.

---

**ஆண்டவனின் பெயரைக் குழந்தைகளுக்கு வைத்து அழைக்கும் போதெல்லாம் நமக்குக் கடவுளின் நினைவு வருகிறது. கடவுளின் பண்புகளும் நமக்கு நினைவுக்கு வருகின்றன. அதற்குரிய பலன் நமக்குக் கிடைக்கிறது. எந்தப் பெயரால் நாம் குழந்தையை அழைத்தாலும் அழைப்பது குழந்தையைத்தான். ஆனால் ஆண்டவனையே அழைப்பதுபோன்ற மனப்பாங்கு நம்மை உயர்த்தி விடுகிறது. இந்த உயர்ந்த அனுபவம் கிடைக்கத்தான் கடவுளின் பெயரைக் குழந்தைகளுக்கு வைக்கிறோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 8. பாவன ரமணன்

கிருஷ்ணமூர்த்தி ஐயர், தான் பகவானின் பால்ய வயது தோழர்களாகிய முத்திருளப் பனையும், வேளைச்சேரி ரங்கநாதய்யரையும் சந்தித்து அறிந்து கொண்ட சில வரலாறுகளை எடுத்துரைத்தார்:

பகவான் திருச்சுழியில் "சேதுபதி" ஆரம்பப் பள்ளி"யின் பாலர் வகுப்பில் ஐந்து வயதில் சேர்க்கப்பட்டார். பள்ளிக்கூட நேரம், வீட்டில் சாப்பாட்டு, உறக்க நேரங்கள் தவிர மற்ற சமயங்களிலெல்லாம் தன் தோழர்களுடன், பூமிநாதேஸ்வரர் ஆலயத்தின் பிரகாரங் களிலும், அதைச் சுற்றியும் விளையாடுவது பாலவேங்கடனின் வழக்கம். கோவிலின் "சூல தீர்த்தத்தில்" மூழ்கி விளையாடுவது குழந்தை களுக்கு அலுக்காத பொழுதுபோக்கு. கந்தகம் கலந்த அந்தக் குளத்து நீரால் தன் வெள்ளிக் காப்புகளுக்கு உண்டான கறையைப் போக்க குழந்தை ரமணன் வெகு சிரமப்பட வேண்டி வந்தது.



ஒருநாள், தகப்பனார் சுந்தரமய்யர் ஊரில் இல்லாத சமயம் குழந்தைகளின் உற்சாகம் கரைபுரளவே, பரணில் வைக்கப்பட்டிருந்த பழைய வழக்குகளின் காகிதக் கட்டுகளில் ஒன்றை எப்படியோ ஏறி எடுத்துச் சென்று, கப்பல்கள் செய்து குளத்தில் மிதக்கவிட்டு குதூகலம் அடைந்தனர்.

வீடு திரும்பிய சுந்தரமய்யர் விஷய மறிந்ததும் கடுங்கோபத்துடன், "எங்கே அவன்? அவன் அணிந்திருக்கும் துணியை எல்லாம் கழற்றிவிட்டு, வெளியே விரட்டு" என்று இரைந்தார். இதைக் கேட்டதும், சிறுவன் மின்னலென மறைந்தான்.

பகல் உணவுண்ணும் நேரத்தில் குழந்தையைக் காணாமல் பரிதவித்து, தேட ஆரம்பித்தனர். வீட்டிலும், வெளியிலும், நண்பர்கள் வீடுகளிலும், கோவில்களிலும் எங்கும் அலைந்து திரிந்து தேடியும் காணாமல் போகவே, குடும்பத்தினர் கவலையுற்றனர். கடுஞ்சொல் பொறுக்காமல் குழந்தை குளத்தில் குதித்து விட்டானோ? எவ்வளவு தேடியும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதனிடையில் கோவில் அர்ச்சகர் அம்மனுக்கு உச்சிக்கால பூஜை செய்ய இருண்ட கர்ப்பக்கிருகத்தில் நுழைந்தார். அங்கே அம்மன் சிலைக்குப் பின்புறம் இருட்டில் மற்றொரு சிலைபோன்று பிரகாசமான உருவத்தைக் கண்டு, விளக்கின் திரியைத் தூண்டி பிரகாசமாக எரியவிட்டு, உற்றுப் பார்த்தார். அது வேங்கடராமனே! வீட்டுக்குத் தகவல் பறந்தது. கவலையில் மூழ்கியிருந்த தந்தை சுந்தரமய்யர் ஓடோடி வந்து குழந்தையைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு வீடு திரும்பினார். தந்தையின் சினத்திற்கஞ்சி அன்னை சகாயாம்பாளிடம் அபயம் தேடி அடைக்கலமானான் பிஞ்சுக்குழந்தை.

* * * * * * *

திருமதி ரோடா மெக்கிவர் எனக்கு, பின்வரும் தகவலைத் தந்தார்கள்:

ஆச்ரமத்தில் எனக்கும் மெக்கிவருக்கும் நடந்த திருமணச் சடங்குகளை பகவான் ஊன்றிக் கவனித்தார். ஆச்ரமத்துக்கும் என் கணவருக்கும் இடையில் ஏற்பட்ட சிறு அபிப்பிராய பேதத்தால், நாங்கள் சிலகாலம் ஆச்ரமத்திற்குச் செல்வதைத் தவிர்த்தோம். ஆனால் என்னால் தினமும் பகவானைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. மலைமேல், நான் முதலில் பகவானைச் சந்தித்த இடத்தில் போய்க் காத்திருப்பேன். பகவானும் அவ்விடம் வரும்போது, சற்று நின்று, கருணை ததும்ப என்னைப் பார்க்கத் தவறுவதில்லை. ஆச்ரம நிர்வாகத்துடன் ஏற்பட்ட சிறு தகராறு எனக்கு எதிர்பாராத அதிர்ஷ்டத்தை அளித்தது. மலைமேல் எனக்குக் கிடைத்த அருள்நோக்கு- நேருக்கு நேராக- ஹாலில் என்றும் கிடைத்திருக்க முடியாது".

ரோடாம்மா தொடர்ந்தார்:- ஒரு தடவை பம்பாயிலிருந்து பகவான் எழுத உபயோகிப் பதற்காகவென்று, விலையுயர்ந்த காகிதம், பேனா முதலியவைகளை வாங்கி வந்தேன். ஒரு அன்பர், "இவ்வளவு விலையுயர்ந்த பொருள்களை ஏன் கொண்டு வந்தாய்?" என்று கேட்டதற்கு, நான் "இவை தேவைப்படும் என்று நினைத்தேன், மலிவானதை வாங்கி வரமுடியுமா என்ன?" என்றேன். பகவான் இடைமறித்து எனக்குத் தேவையானவை ஏற்கனவே இருக்கையில் "எதற்காக எதையாவது கொண்டு வரவேண்டும் என்று நினைக்க வேண்டும்?" என்றார். நான் மனம் சோர்ந்து விட்டேன். பகவானுக்கு வேறு எது உபயோகப்படும் என்று யோசிக்க ஆரம்பித்தேன். பறவை, அணில் முதலிய தன் நண்பர்களுக்காக, முந்திரி முதலிய பருப்புக்களை ஒரு பழைய, விகாரமான தகர டப்பாவில் வைத்திருந்தனர். அதற்குப் பதிலாக ஒரு சின்ன, அழகான வெள்ளிப்பெட்டிதான் பகவானுக்குத் தேவை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இந்த எண்ணம் என் மனதில் ஓடிக்கொண்டிருக்கும்போதே, யாரோ ஒருவர், நான் நினைத்ததைப் போலவே ஒரு சின்ன வெள்ளி டப்பாவைக் கொண்டுவந்து சமர்ப்பித்தார். பகவான் அதைத் தொடக்கூட இல்லை! "என்னது? வெள்ளிப்பெட்டியா? எனக்கெதற்கு வெள்ளிப்பெட்டிகள்? அவற்றை நான் என்ன செய்வது? தயவு செய்து திருப்பி எடுத்துப் போய்விடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே என்னைப் பார்த்தார்- உனக்கும், உன் வெள்ளிப்பெட்டிக்கும் இதே கதிதான் ஆகியிருக்கும் என்பதுபோல் பகவானின் வாழ்க்கை முறை எளியது. ஆடம்பரமும், சொகுசும் அவருக்கு உகந்தவையல்ல. இது நமக்கெல்லாம் நல்ல படிப்பினை.

"அக்காலத்தில் குரங்குகளின் தொல்லை மிக அதிகம். அடியார்கள் கொண்டு வரும் பொருட்களை அபகரித்து அவை விளையாடின. பகவானிடம் புகார் செய்து பயனில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பெல்லாம் இந்த இடம் அடர்ந்த காடாக, குரங்குகளின் வாசஸ்தலமாக இருந்தது. நாம் வந்து காட்டை அழித்து, வீடுகள் கட்டி, வானரங்களை விரட்டி விட்டோம். யார் மீது தவறு? நம்மீதா அவர்கள்மீதா? அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் தொந்தரவு செய்தால் அதைப் பொறுமையுடன் தாங்கமுடியாதா என்று அந்த ஜீவர்களின் சார்பாகவே வாதாடுவார். பகவானுக்கு குரங்குகளிடம் உண்மை அன்பு இருந்தது. பருப்புகளைத் திருடியதற்காக ஒரு பணியாள் குரங்குகளை அடித்ததற்கு பகவான், "நீ குரங்குகளை அடிக்கவில்லை. என்னைத்தான் அடிக்கிறாய். வலி எனக்கல்லவா?" என்று கண்டித்தார். எல்லையற்ற கருணை என்பது இதுதானோ!

ஆதிநாட்களில் பகவானுக்கு உணவு அளித்தவர்களில் எச்சம்மாளையும், முதலியார் பாட்டியையும் அனைவருக்கும் தெரியும். பகவான் விருபாக்ஷகுகையில் இருந்த நாட்களிலிருந்தே பகவானுக்கும் பக்தர்களுக்கும் உணவளித்த உதார குணமுடைய பக்தை தேசூர் அகிலாண்டம்மாள். நினைவில் வைத்து போற்றப்பட வேண்டியவர். அவரைப் பற்றிய ஒரு தமிழ்ப் புத்தகத்தை சாது ஓம் அவர்கள் எழுதியிருக்கிறார்.

ஒருமுறை கந்தாச்ரமத்தில் பகவானுக்கு அகிலாண்டம்மாள் உணவு பரிமாறியதும் "நொண்டி" (குரங்கு)- பகவானின் செல்லஜீவன்- அதைப் பிடுங்கிக் கொண்டது. மறுபடி பகவான் இலையில் உணவு பரிமாற அகிலாண்டம்மாள் முயற்சித்ததும், குரங்கு அந்தப் பக்தையைப் பயமுறுத்தியது. பகவான், அடே! அடே "அவள் நம்மாள்தாண்டா" தொந்தரவு செய்யாதே!" என்று தடுத்தார். "நம்மாள் என்று பகவானால் குறிப்பிடப்பட்டதில் அகிலாண்டம்மாள், தான் பேரருள் பெற்றதாக உணர்ந்தார்.

அவர் ஒருநாள் "பகவானே! கருணை கூர்ந்து எனக்கு ஏதாவது உபதேசம் செய்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, பகவான் "உன்னை விடாமல் இரு" என்றருளியது.

(தொடரும்...

## சிந்திக்கச் சில வரிகள்

- ஒவ்வோர் வாழ்விலும் தன்மை என்னும் நிலை எப்போது வருகின்றதோ, அப்போதுதான் அவர்களால் மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்க முடிகின்றது.
- தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது மனித வாழ்க்கை. எனவே நல்லவற்றை உடனுக்குடன் செய்து உங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்குங்கள்.
- தூங்கும்போது கனவுகள் தோன்றுவது நாம் நினைப்பது மட்டுமல்லாமல், இறைவன் எம்மை அழைத்துச் செல்லும்போது காணும் காட்சிகளும்கூட.
- வண்டில் பாதை எவ்வளவு கரடுமுரடாக இருந்தாலும் அதனை இழுக்கும் மாடுகள் மனம் தளர்வதில்லை. அதுபோல நமது வாழ்வில் பல பள்ளம், மேடுகள் வரும்போதெல்லாம் தளராது தாண்டுதல் வேண்டும் இதுவே வெற்றி.
- தினமொரு கொள்கையை வைத்திருக்கும் நண்பர்களுடன் நட்பு வைத்திருக்காதீர்கள். அவர்களால் உங்கள் நிம்மதி குறையுமே அல்லாமல் கூடாது. எனவே அவர்கள் நட்பை இயலுமானவரை தவிருங்கள்.


-கு. குமாரகுலசூரியன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுக்களைப் பாதுகாப்போம்; வணங்கி மகிழ்வோம்!



திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்



பசு ஒரு தெய்வீகம் நிறைந்த சாதுவான பிராணி. பசுவின் அருமையும், பெருமையும் சொல்லில் அடங்காதவை. பசுவிலிருந்து சிவபெருமானுக்குரிய அபிஷேகத் திரவியங்கள் பெறப்படுகின்றன. அதனால்த்தான் பசு கோமாதா என்று போற்றிப் புகழப்பட்டு வணங்கப்படுகின்றது.

பசுமாடு செல்வம் தரும் கற்பக தருவாகும். பசுமாட்டின் தெய்வீகத்தையும் சிறப்பையும் கருதியே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமது தேவாரத் திருப்பதிகத்திலே "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று குறிப்பிட்டுப் பாடியிருக்கின்றார்.

பசுமாட்டை நாம் வாயில்லாப் பிராணி என்று சொல்லுகின்றோம். ஏன்? அது நம்மைப்போல் பேசுவதற்கு வல்லமை இல்லாது இருப்பதனால்த்தான். ஆகவே பசுமாட்டை வணங்கவேண்டுமேயல்லாது வதைத்து உண்ணுதல் கூடாது. பசு வதையைப் போலப் படு பாதகமான செயல் வேறு இல்லை. "கோமாதா எங்கள் குலமாதா" என்பது பெரியோர் வாக்கு. ஒரு காரியத்துக்குப் புறப்படும்போது பசுமாடு எதிர்ப்பட்டால் நல்ல சகுனம் என்பார்கள்.

மொத்தத்தில் பசுமாடு ஒரு கிடைத்தற்கரிய பெரிய அருமைச் செல்வமாகும். இந்தச் செல்வம் வீட்டில் இருந்தால் இல்லாததொன்றில்லை. பசுமாட்டைப் போன்ற ஒரு சிறந்த செல்வம் வேறு எதுவுமேயில்லை.

முற்காலத்தில் அரசாட்சி செய்த அரசர்கள் ஒரு நாட்டுடன் போர் தொடுப்பதானால் முதலில் பசு மாடுகளையே கவர்ந்து செல்வார்கள். அந்த நாட்டின் செல்வம் அந்நாட்டின் பசுக்கூட்டத்திலேயே தங்கியிருந்திருக்கிறது. ஆதலால் அந்தப் பசுக்களைக் கவர்ந்து விட்டால் நாட்டின் செல்வத்தையே கவர்ந்தமாதிரித்தான். அது அரசனுக்கு அவமானம். உடனே அவன் சினங்கொண்டு போர் தொடுப்பான். முற்காலத்தைய அரசர்கள் பசுமாடுகளைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டு வந்திருக்கின்றார்கள். அது மாத்திரமன்றி பசுக்கூட்டங்கள் மனித வாழ்க்கையில் முக்கிய இடம் வகிப்பதை நினைவிற்கொண்டு நாட்டு மக்களுக்கு வளர்ப்பு மிருகங்களாகப் பரிசுப் பொருளாக வழங்கியும் வந்திருக்கின்றார்கள்.

இதிலிருந்து நமது முன்னோர்கள் முற்காலத்திலே பசுவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள் என்பது மிகத் துல்லியமாகப் புலப்படுகின்றது. இவ்வளவு சிறப்புடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவை நாம் கொன்று தின்பது நீதியான செயலா? கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கின்ற ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். மனித உருவில் இருந்து கொண்டு மிருகத்தனமான செயலைச் செய்து வாழ்க்கை நடத்துதல் கூடவே கூடாது.

பசுக்களின் உடம்பு முழுவதும் தேவர்கள் உறைவதாகக் கருதப்படுகின்றது. ஆகவே, பசுவைக் கோமாதா எங்கள் குலமாதா என்று வணங்கி மகிழும்போது அந்தத் தேவர்களையும் வணங்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டுகின்றது. மாதாவின் மறுபெயர் தாய். ஒரு குழந்தை தனது தாயை "அம்மா" என்று அழைப்பது போலப் பசுமாட்டுக் கன்றும் தாய்ப் பசுவை "அம்மா" என்றே அழைக்கின்றது. பத்துமாதம் சுமந்து பெற்றவள் தாயாகின்றாள். அதேபோலப் பசு மாடும் பத்து மாதங்களில் கன்றை ஈனுகின்றது. இப்படிப் பல வழிகளிலும் ஆராய்ந்து பார்க்குமிடத்திலே பசு மாடும் நம்மைப்போலவே வாழ்க்கை நடத்துவதனால் அது மனிதருடன் ஒன்றிணைந்து ஒன்றித்திருப்பது புலனாகின்றது.

சிவபெருமானுடைய வாகனம் இடபம். சக்தியின் வழிபாட்டம்சம் பசு. எனவே இடபமும் பசுவும் இறைவனுடைய அம்சங்கள். ஆலயங்களில் ஆண்டவன் குடியிருப்பதால் அங்கு நடைபெறுகின்ற மகாகும்பாபிஷேகங்களின்போது பசுவுக்கு விஷேட பூசைகள் இடம்பெற்றதன் பின்னரே ஆலய மூலஸ்தானக் கதவுகள் திறக்கப்படுகின்றன. ஆண்டவனுடைய திருவருட்பார்வை அதாவது அருட்சக்தி முதலிலே பசுவிலே படவேண்டும் என்பதே விதிமுறை. மகாகும்பாபிஷேகமாகிக் கதவு திறக்கும்போது பசுவிலேயே விழிக்கப்படுகின்றது. இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? பசு தெய்வீகம் நிறைந்தது என்பதே.

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்" என்பது தேவாரம். இதிலும் பசுவின் பெருமை மிக அழகாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். ஆதலால் பசு வணங்கி வாழ்த்தி மகிழ்ந்து துதிக்கவேண்டிய ஒரு தெய்வீகம் நிறைந்தது என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும்.

எங்களுடைய வயிற்றுப்பசியைப் போக்குவதற்காக அதனை வெட்டி வதைத்து வதக்கி உண்ணுதல் மாபாதகச் செயலாகும். பசுவையும் எருதுகளையும் பாதுகாத்து வீட்டிலே வளர்க்க வேண்டும். அதற்கு நம்மாலான வகையில் உணவளித்துப் பேணவேண்டும்.

சுவாமி ஞானப்பிரகாசர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலானோர் பசுவைக் கொன்று தின்பது பாவம் என்று அறிவுறுத்தியிருக்கின்றார்கள். எனவே நாம் மாட்டிறைச்சி உண்பதை நிறுத்திவிட்டால் பசுவதை தானாகவே நின்றுவிடும். சைவம், சைவம் என்று சொல்லிக் கொண்டு நாங்கள் அசைவர்களாக வாழக் கூடாது. உண்மை, நேர்மை, இரக்கம், பணிவு, அடக்கம் முதலிய நற்குணங்களுடன் வாழ்ந்து புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்த பயனைப் பெற்று உய்தி பெறுவோமாக.

---

## எல்லாம் அவன்தானே

வள்ளியம்மை வலப்பக்கம் இருக்க
தெய்வயானை மறுபக்கம் இருக்க
வள்ளலவன் முருகனோநடு விருக்க
வாய்த்ததொரு திருக்கோலம் இருக்க
உள்ளத்தில் உனக்கென்ன இருக்கு
வெள்ளம்போல் அவனருளும் இருக்க
வீண்பயமேன் உனக்குள்ளே இருக்கு
விட்டுவிடு அவன்தானே இருக்கிறான்



-வ. யோகானந்தசிவம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரக் கதைகள் (தொடர்ச்சி...)

திரு கே.வி. குணசேகரம் அவர்கள்

## 7. கிடக்கப் படுத்தார்

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரோடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"

அன்பு மிகுந்த அழகான மனைவிக்குத் தனக்கு என்னென்ன உணவு வகைகள் தேவை என்று சொன்னார். அடக்கமும் ஒழுக்கமும் கொண்ட அவரது மனையாள் அவர் விரும்பிய உணவு வகைகள் யாவற்றையும் மிகவும் சுவையாகத் தனது கணவன் மகிழ்ந்து மகிழ்ந்து உண்ணக்கூடிய வகையில் செய்து கொடுத்து, அவர் மிகுந்த விருப்புடன் இரசித்துச் சுவைத்து உண்பதைப் பார்த்து மகிழ்ந்தாள். செல்வம் மிகுந்திருந்தமையால் அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் உண்டு அனுபவித்தனர். அழகான அவள் தனது கணவன் விரும்பிய இன்பங்களையெல்லாம் மனங்கோணாது அளித்தாள். இவ்வாறு அவர்களது இல்வாழ்வு சிறப்பாகவும் இன்பமாகவும் கழிந்தது. திடீரென்று ஒருநாள் அவர் தனது இடப்பக்கம் வலிக்கிறது எனக் கையால் பொத்தியபடி அமர்ந்தார். அதன்பின் அவர் எழும்பவில்லை.

இவ்வாறு வாழ்க்கை நிலையாமை பற்றித் திருமந்திரம் கூறுகிறது. கருணாகரன் நாவலூரில் வாழ்ந்த பெரும் வணிகன். அவனிடம் நூற்றுக்கு மேற்பட்ட கப்பல்கள் நின்றன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தனர். அவன் தாய்மாமனின் மகளைத் திருமணம் செய்தான். அவள் நல்ல அழகி. பெண்மைக் குணங்கள் அத்தனையும் அவளிடம் இருந்தன. அவள் தனது கணவனைத் தெய்வமாகப் பூசித்தாள்.

கருணாகரன் தனது மனைவிமீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தான். அதனால் அவன் பிற நாடுகளில் உள்ள சிறந்த பொருட்களையெல்லாம் வாங்கி வந்து மனைவிக்குக் கொடுப்பான். விலை உயர்ந்த ஆபரணங்களை அணிவித்து அழகு பார்ப்பான். அவள் தனது கணவனின் விருப்பத்திற்கேற்ப உணவுகளைச் செய்து கொடுப்பாள். கருணாகரன் உணவுப்பிரியன். அதனால் விதம்விதமான உணவுகளை அவள் தயாரிப்பாள். அவள் சமைக்கும் உணவின் சுவையால் அவன் வேறு இடங்களில் உண்ண மாட்டான். நேரஞ்சென்றாலும் வீடுதேடி வந்து விடுவான். பிற ஊர்களுக்குச் செல்வதானால் பல நாட்களுக்குப் பழுதடையாத உணவு வகைகளை அவள் செய்து கொடுப்பாள்.

அவள் தினமும் காலையில் அன்று என்னென்ன உணவு வகைகளைச் சமைக்க வேண்டுமெனக் கேட்பாள். கருணாகரன் நன்கு யோசித்து விட்டுச் சொல்வான். சில வேளைகளில் அவன் பிறவூர்களில் வாழும் பெருந் தனவந்தர்களை தனது வீட்டுக்கு அழைத்து வந்து உணவளிப்பான். அன்று அவர்களது வீடு திருவிழாப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


களைகட்டியிருக்கும். பிறவூரவர் ஒவ்வொரு முறையும் உணவைத் தமது வாய்க்குள் வைக்கும்போது அதன் சுவையை மெச்சுவார்கள். சிலர் இப்படித் தமது மனைவிமார்க்குச் சமைக்கத் தெரியவில்லையே என்று கூறிக் கவலைப்படுவார்கள். ஒருமுறை கருணாகரனின் வீட்டுக்கு வந்து உணவு உண்ட ஒரு பெரும் தனவந்தன் சொன்னான், "நண்பா வாழ்க்கையில் உயிர்கள் உணவுக்காக போராடுகின்றன. உணவு கிடைப்பது இன்பம். அதைவிட சுவையான உணவு கிடைப்பது பேரின்பம். நீ தினமும் அமிர்தத்தை உண்கிறாய். சுவையான உணவு வகைகளை உண்பவன் தருமவான்" என்று கூறிவிட்டுச் சென்றான். அது கருணாகரனுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது.

சில தினங்கள் கழிந்தன. கருணாகரன் துறைமுகத்திற்குச் சென்று அன்று வந்திருந்த கப்பல்களில் ஏற்றிவந்த பொருட்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனது இடப்பக்க நெஞ்சில் சிறு வலி தோன்றியது. அது சில நிமிடங்களில் பெருத்துத் தாங்க முடியாதளவுக்கு வேதனையைக் கொடுத்தது. கருணாகரன் பெருங் குரலெடுத்துக் கதறியபடி ஆசனத்தில் அமர்ந்தான். அவனது உடல் வியர்த்தது.

சில நிமிடங்களில் அவனது உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. குடும்பத்தினர் ஊரவர் உறவினர் நண்பர்கள் எல்லோரும் அழுது குழறிவிட்டுப் பிரேதத்தைச் சுடலைக்குக் கொண்டு சென்றனர். உடல் நிலையில்லாதது. அதற்கு அழிவு எந்நேரமும் வரலாம். மிகுந்த தேகாரோக்கியத்துடன் வாழ்பவன் திடீரென்று விபத்துமூலம் மரணமடையலாம். உயிருள்ளவரை தம்மை அலங்கரிப்பதிலும், சுவையான உணவு வகைகளை உண்பதிலும், ஆடம்பரமாக வாழ்வதிலும் அக்கறை கொள்ளும் மனிதர்கள் தாம் பூசித்துப்பேணும் உடல் நிலையில்லாதது என்று உணர்ந்து நிலையான பொருளும் என்றும் இன்பத்தை அள்ளி வழங்கும் தன்மையும் கொண்ட சிவனை வணங்கி நிலையான இன்பத்தைப் பெற வேண்டும்.

(தொடரும்...

## நல்லாசிரியர் விநாயகர் தரும் பாடம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த வைகாசிப் பெருவிழா - 2013

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் வருடாவருடம் மேற்கொள்ளப்பட்டுவரும் வைகாசிப் பெருவிழாவானது வழமைபோன்று இவ்வருடமும் வைகாசி விசாக தினத்தை ஒட்டி 17.05.2013 வெள்ளிக்கிழமை மிகவும் பக்திபூர்வமாகவும் எளிமை யாகவும் நடைபெற்றது.

அன்று காலையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆச்சிரம வளாகத்தின் பூசை அறையிலும் விசேட வழிபாடுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து மேடையில் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

திருமதி ஜனனி நடேசமூர்த்தி, திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா இருவரதும் வீணை இசையுடன், திருமதி சுஜாத்தா நிரஞ்சன் அவர்களின் வயலின் இசையும் சேர்ந்து, சிறந்த பக்கவாத்தியங்களுடன் ஒன்றிணைந்து பார்வையாளரைப் பரவசப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து, யா/ உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனம், கும்பி நடனம் ஆகிய நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றது. நடன நிகழ்ச்சிக்குப் பாட்டிசைத்த திருமதி சகிலா மயூரனின் பாட்டுக்கு, அற்புதமாகப் பக்கவாத்தியம் இசைத்த பக்கவாத்திய கலைஞர்களும் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றனர்.


நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரையுடன் இவ்வருடத்திய வைகாசிப் பெருவிழா நிறைவு பெற்றது.

## 2013ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| த. கணேசமூர்த்தி | இலங்கை வங்கி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| வை. துரைராசா | ஒஸ்காலேன் | உரும்பராய் | 2500. 00 |
| செ. நவரத்தினராசா | (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் | | சங்கானை | 4000. 00 |
| இ. இராசநாயகம் | துர்க்கா மரக்காலை | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| M.S.K. மகேஸ்வரன் | | தாவடி வடக்கு | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம் | (செல்வம்ஸ்) சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 3500. 00 |
| மகாராணி புடவையகம் பெரியகடை | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வ. இராசையா | கேணியடி | திருநெல்வேலி | 2000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | | நீர்வேலி | 1000. 00 |
| Dr சி. இராசலிங்கம் | இளை. வைத்தியப் பொறுப்பதிகாரி | அச்சுவேலி | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் | மாலிசந்தி | அல்வாய் | 1500. 00 |
| ஐ. சண்முகலிங்கம் | ஆசிரியர் கரணவாய் | கரவெட்டி | 2000. 00 |
| சி. சரவணப்பெருமாள் | | கரணவாய் தெற்கு | 1000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வருடாந்த வைகாசிப் பெருவிழாவை (17.05.2013) முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைகாசிப் பெருவிழாவில் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய
மாணவிகளின் நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள் | | பொலிகண்டி | 2000. 00 |
| Dr E. கனகரெத்தினம் | கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | தொண்டைமானாறு | 2000. 00 |
| சுந்தர்சன்ஸ் | | மானிப்பாய் | 3000. 00 |
| சி. நாகலிங்கம் | லிங்கம்ஸ் | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | | ஆவரங்கால் | 2000. 00 |
| த. சிவகுருநாதன் | துவாரகா வெதுப்பகம் | கரணவாய் | 2500. 00 |
| க. சொர்ணவடிவேல் | | அளவெட்டி | 1000. 00 |
| லிங்கம் கூல்பார் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |

# புண்பட்டு நொந்தவர்க்கு இரங்கு

நல்லவை எது? கெட்டவை எது? என்று
நமக்குத் தெரிய வைத்த தாயே,
நாளும் உந்தன் முகம் பார்க்கவும்
நமக்குக் கொடுத்து வைத்த தாயே,
வல்லவர்கள் கையில் பணம் அவர்கள்
வாய்ப் பேச்சில் தெரிகிறதே! தாயே!
வாயிருந்தும் அடிமையானோர் பலர்
வறுமை எய்த விடலாமோ? சொல்
கல்லுமனம் படைத்தவர்கள் – ஏனோ
கனவீடுகள் கொள்முதல்!
காணி இல்லை வீடு இல்லை – அம்மா
கண்ணீரோ உன் கொள்முதல்?
புல்லுமனம் இருந்து விட்டதால்தான்
புதுயுகம் கலியுகம் என்றனரோ?
பூமாதேவி யாகச் சுமக்கிறாயே அம்மா
புண்பட்டு நொந்தவர்க்கிரங்கு!

-கே.எஸ். சிவஞானராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி (தொடர்ச்சி)

உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

**நடராசமூர்த்தி:**

சிவன் தலைசிறந்த நர்த்தகன். இவன் பேருவகையுடன் சுடலையில் நின்று ஆடுவதைச் சமயநூல்கள் கூறுகின்றன. இவ்வாறு ஆடுங்கூத்து பல தத்துவங்களை உணர்த்தும். இக் கூத்துக்களிலும் பலவகை உண்டு. பரதநாட்டியத்தில் நூற்றெட்டு வகை நடனங்கள் கூறப்படுகின்றன. ஆகமத்திலும் நூற்றெட்டுவகை நடனங்கள் பற்றிய குறிப்பு இடம்பெறுகின்றது. இவை இரண்டும் ஒரேவகை நடனத்தையே குறிக்கின்றது. சிதம்பரத்தின் கோபுரங்களில் ஒன்றின் இரு மருங்கிலும் நூற்றெட்டு வகை நடனங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் கீழ்த் தனித்தனியே அவ்வவ் நடனங்களுடைய பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பெயர்கள் நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படுகின்றன.



ஆகமங்கள் நூற்றெட்டுவகை நாட்டியங்களைக் குறிப்பிடுகின்றனவாயினும், ஒன்பதுவகை நாட்டியங்களையே விளக்குகின்றன. இவ்வொன்பது வகை நாட்டியம் புரியும் நிலையில் இறைவனை வெவ்வேறான நிருத்த மூர்த்திகளாக வைத்து வழிபடும் வழக்கு பாரதத்தில் பரவியுள்ளது. இவ்வொன்பதுவகையினுள் முதல் வகையைச் சார்ந்தது நடராசர் இயற்றும் நடனம். நடராசர் உருவம் இல்லாத சிவன் கோவில்கள் நிறைவுபெற்ற சிவன் கோவில்களாகா. அம்சுமத்பேத ஆகமங்கூறும் நடராசர் உருவம் உத்தமதசகால அளவுக்கு அமைய உருவாதல் வேண்டும்.

முன் இடது கை தண்டாக நீண்டு உடம்பைச் சாரும்வண்ணம் திரும்பி உடம்பின் முன்னர் சிறிது வளைந்து தொங்குதல் வேண்டும். இவ்வாறு தொங்கும் கை சிற்ப நூல்களில் கஜஹஸ்தம் எனப் பெயர்பெறும். பின் பக்கத்தில் உள்ள இடதுகை அக்கினியை ஏந்தி நிற்கும். இவ்வக்கினி இக்கையின் நடுவிரலின் அடியிலோ, நடுவிலோ, அன்றி நுனியிலோ பொருந்துதல் வேண்டும். முன்பக்கத்தில் இருக்கும் அபயகரம். இதன் நடுவிரலின் உச்சி ஹிக்கா சூத்திரத்திற் படுதல் வேண்டும். இக்கையின் மணிக்கட்டையடுத்துப் பாம்பு வளையமாக விளங்குதல் வேண்டும். பின் வலது கையில் உடுக்கை இருக்கும். வலதுகால் அபஸ்மார புருஷன்மீது சிறிது வளைந்தவாறு ஊன்றப்பெற்று விளங்கும். முழந்தாள் நாபிசூத்திரத்தைத் தொடுதல் வேண்டும். இடதுகால் வலதுகால் பக்கமாக குறுக்கே மடிந்து அதைத்தாண்டி விரல்கள் கீழே தொங்கியவாறு இருத்தல் வேண்டும். சிவனின் தலையில் சடாமகுடம் தொங்கும். அதை மலர்மாலை, தூர்த்தூர மலர், எருக்கம்பூ, பாம்பூ, மண்டையோடு, பிறைச்சந்திரன் முதலியன அழகு செய்வன. சடாமகுடத்திலிருந்து இருமருங்கிலும் ஐந்து, ஆறு, ஏழு அல்லது பதினொரு சடைகள் விரிந்து பக்கங்களில் பரவுதல் வேண்டும். சடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு நேரே பரந்திராது தலையை அடுத்து வட்டவடிவமாகவும் அமையலாம். பூணூல், உரஸ் சூத்திரம் என்பன உடலை அழகுறுத்தும். நடுவிரல் தவிர்ந்த ஏனைய விரல்களில் மோதிரங்கள் விளங்குவன. கால்களை அழகு செய்வன சதங்கைகள். முகத்தில் சாந்தம் தவழும் புன்சிரிப்பு முறுவலிக்கும். இம்மூர்த்தி புலித்தோலாடையினை அணிந்திருப்பார். முயலகனின் தலை சிவனின் வலப்பக்கத்திலும், கால்கள் இடப்பக்கத்திலும் இருத்தல் வேண்டும். சிவன் கையில் பாம்பை வைத்திருப்பன். கைகளையும் முட்டியாகப் பிடித்து நாகமுத்திரை காட்டி நிற்பன். நடராசரின் இடது பக்கத்தில் பார்வதி, சந்திரசேகர மூர்த்தியின் பக்கத்தில் நிற்கும் நிலையிலேயே அதே அம்சங்களுடன் விளங்குவாள்.

உத்தரகாமிகாமம் நடராஜர் திருவுருவம் அமையவேண்டிய முறையினைக் கூறுகிறது. இதில் மேற்கூறிய அம்சங்களிலிருந்தும் வேறானவை பின்வருமாறு. சடாமகுடத்திலிருந்து சடைகள் விரிந்து இருத்தல் வேண்டும். சடைகள் ஐந்திலிருந்து முப்பதுவரை இருக்கலாம். இவை தனித்தனியாகப் பிரிந்து இருத்தலவசியம். சடையின் இடையே ஊமத்தை, எருக்கம்பூ முதலானவை பொருந்த கங்கை பெண்ணுருவில் அரைக்கு மேலும், ஓடும் நீர்போல் அவளுருவின் கீழ்ப்பகுதி அமையும் வண்ணம் கூப்பிய கரத்தினளாய்ச் சித்தரிக்கப்படல் வேண்டும். இடப்பக்கச் சடையில் பிறைச்சந்திரனுக்கு இடமுண்டு. கழுத்தில், கழுத்துமணி, முத்தாரம், பாம்புமாலை, வகுளமாலை, சங்குமாலை, பன்றிப்பல், புலிநகம், மணிகள், ஆமைஓடு முதலியனவும் விளங்கும். இடதுதோளைப் புலித்தோல், மான்தோல், பருத்தி ஆடை முதலியன அழகு செய்யும். இடது காதில் பத்ரகுண்டலமும், வலது காதில் நக்ர குண்டலமும் தொங்கும். சிறு மணிகளாலான சதங்கைகள் இரு கால்களிலும் இணைந்து விளங்குவன. அபஸ்மார புருஷன் நான்கு தாலப்பிரமாணத்தில் அமைவான். இவனுக்கு இரு கரங்களும் இரு கண்களும், கீழ்நோக்கிய முகமும் உண்டு. இடது கையில் பாம்பை ஏந்தி நிற்பான். கங்கையின் உயரம் முகமளவு இருத்தல் வேண்டும். பக்கத்தில் பிருங்கி ரிஷியும் இடம்பெறலாம். பத்ரகாளியை நிறுவும் முறையும் உண்டு. இந்த நடனம் புஜங்கத்ராஸ நடனம் எனப்படும். நடனம் நிகழும் வேளை மேல்தூக்கிய அடி ஊன்றி நிற்கும் காலினது முழந்தாழ் மட்டத்திற்கு மேல் உயர்ந்தால் அது புஜங்கத்ராஸம் எனப் பெயர்பெறும்.

நாட்டிய சாஸ்திரத்தில் புஜங்கத்ராஸ நடனம் விளக்கப்பட்டுள்ளது. ஒரு கால் முக்கோண வடிவாக வளைக்கப்பட்டு மேலே தூக்கப்படும். இடுப்பு பொருந்துமிடத்து உடம்பும் முழந்தாளும் ஒரு பக்கம் திரும்புமாறு நிற்றல் புஜங்கத்ராஸ நிலை. பரதநாட்டியத்திற்கு உரைகண்ட அபிநவகுப்தர் நாட்டிய வேத விருத்தியிற் பின்வருமாறு கூறுவர். ஆடுபவன், பாம்பைக் கீழே கண்டதும் பயமேலிட்டவன் நிலையினை நிகர்த்துத் திடீரெனக் காலைத் தூக்கும் நிலை இந்நிலை. அவனது நிலை அசையாது நிற்கும் நிலையன்று. இந்த நிலையில் கை தோலாஹஸ்தமாகவும், மற்றது கடகஹஸ்தமாகவும் அமையும்.

சிவனின் உருவத்தைச் சுற்றிப் பிரபாமண்டலம் விளங்குதல் வேண்டும் எனச் சில்பரத்தினங் கூறுகின்றது. இம் மண்டலம் சூரியன் போன்று வட்ட வடிவமானது. பூர்வகாரணாக சிவனின் கண்கள் குரரிப் பறவையின் வடிவம் பெறல் வேண்டும் எனக் கூறும். சிவனின் காதுகளில் நக்ரகுண்டலமும் பத்ரகுண்டலமும் அமைதல் வேண்டும் எனவும் இவ்வாகமம் கூறும். சிவனணியும் ஆடை புலித்தோலாடை. அக்கினிக்கு மூன்று சுவாலைகள் உண்டு. புலித்தோல் மேலாடையாகவும் விளங்கும். அபஸ்மார புருஷன் நான்கு தாலப் பிரமாணத்தில் மூன்று பக்கங்களுடன் உருவாக்கப்படுவன். (தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| திருமதி அருள்மொழி சூரியகுமார் | லண்டன் | 5000. 00 |
| ம. கனகம்மா | நவாலி | 2000. 00 |
| திரு ஜீவரஞ்சன் (மணியம் ஸ்ரோர்ஸ்) | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| இரட்ணசபாபதி வள்ளிநாயகி | கனடா | 10000. 00 |
| S. கந்தசாமி | கரணவாய் | 3000. 00 |
| சங்கரப்பிள்ளை சண்முகலிங்கம் | அவுஸ்திரேலியா | 40000. 00 |
| மகேஸ்வரி யோகநாதன் (வரணன் அச்சுவேலி) | அவுஸ்திரேலியா | 19000. 00 |
| Dr T. ஸ்ரீஸ்கந்தராசா | லண்டன் | 10000. 00 |
| க. ஞானச்சந்திரன் நாகலிங்கம்லேன் | கொக்குவில் | 1000. 00 |
| வை. துரைராஜா ஒஸ்காலேன் | உரும்பிராய் | 1500. 00 |
| செல்வி T. பெரியதம்பி | பருத்தித்துறை | 2000. 00 |
| சி. கந்தையா கந்தரோடை | சுன்னாகம் | 5000. 00 |
| K. சுதாகரக்குருக்கள் ஸ்ரேசன்றோட் | சுன்னாகம் | 2000. 00 |
| சோ. பொன்னம்பலம்பிள்ளை | கொழும்பு | 10000. 00 |
| திருமதி K. சிவராஜா | கொழும்பு | 4000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் கரணவாய் | கரவெட்டி | 5000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் மகாத்மாவீதி | நெல்லியடி | 1000. 00 |
| நா. உருத்திராதேவி | மல்லாகம் | 2000. 00 |
| திரு ரவிசங்கர் | அச்சுவேலி | 5000. 00 |
| திரு கிருஸ்ணபிள்ளை குடும்பம் | கனடா | 5000. 00 |
| செ. கிருஸ்ணவிக்னேஸ்வரன் | சுன்னாகம் | 1000. 00 |
| நா. பிரதீபன் | இளவாலை | 3000. 00 |
| P. அப்புத்துரை | வசாவிளான் | 2000. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் சந்தி | 2மூடை அரிசி |
| பா. குமரன் | சாவகச்சேரி | 5000. 00 |
| சுசிலா நகை மாடம் | பருத்தித்துறை | 2மூடை அரிசி |
| திருமதி வசந்தசிவதாஸ் | அமெரிக்கா | 10000. 00 |
| திரு மோகனமூர்த்தி | சங்கானை | 5000. 00 |
| பொ. கிரிதரன் | வவுனியா | 500. 00 |
| K.V. துரைசாமி நினைவு | மயிலிட்டி | 1000. 00 |
| அமரர் கதிர்காமத்தம்பி ராகினி நினைவு | கொற்றாவத்தை | 1000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இ. விக்னேஸ்வரமூர்த்தி | கொற்றாவத்தை | 1000. 00 |
| ந. மதி | சுன்னாகம் | 1000. 00 |
| முருகேசு அருளம்பலம் | கிளிநொச்சி | 2000. 00 |
| திரு ஸ்ரீஸ்கந்தராசா | கொழும்பு | 6000. 00 |
| தாருண்யா பிரகலாதன் | இடைக்காடு | 3000. 00 |
| தங்கராசா ஸ்ரீஸ்கந்தராசா | இணுவில்தெற்கு | 2000. 00 |
| கோகிலாம்பிகை இரத்தினம் | சாவகச்சேரி | 5000. 00 |
| க. விஸ்னுமோகன் | உரும்பராய் கிழக்கு | 5000. 00 |
| சற்குணராசா கலைச்செல்வி | நோர்வே | 2000. 00 |
| ச. செகசோதிராஜா | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| கோ. கிருத்திக் | மட்டக்களப்பு | 500. 00 |
| திருமதி கமலா குணரட்ணம்மூலம் யமுனா வர்ணன் | பிரான்ஸ் | 10000. 00 |
| த. தர்மலிங்கம்மூலம் செல்வி சுபாசினிநாதன் | லண்டன் | 5000. 00 |
| K. கணேசலிங்கம் | புலோலி | 5000. 00 |
| வி. விஜயலெட்சுமி | மட்டக்களப்பு | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாஷ் குடும்பம் | பருத்தித்துறை | 2000. 00 |
| த. தவராசா | கோண்டாவில் | 5000. 00 |
| சுவாமி சித்ருபானந்தா மூலம் சி. சண்முகநாதன் | லண்டன் | 2மூடை அரிசி, சீனி, தேயிலை |
| செ. சோமசுந்தரம்மூலம் செ. பிருந்தன் | கனடா (உடுப்பிட்டி) | 20000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | 2000. 00 |
| இ. பரஞ்சோதிநாதன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வே. வில்வராசா | ஏழாலை | 2000. 00 |
| வே. கந்தசாமி | இடைக்காடு | 500. 00 |
| செல்வரத்தினம் குடும்பம் | சுன்னாகம் | 1000. 00 |
| நா. உருத்திராதேவி | மல்லாகம் | 2000. 00 |
| பொ. பாலகிரிஷன் | கனடா | 5000. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வேதநாயகம் இரகுநாதன் | அரியாலை | 10000. 00 |
| ஆ. இராசரத்தினம் | லண்டன் | 1000. 00 |
| வ. தங்கவடிவேல் | வவுனியா | 1000. 00 |
| ஸ்ரீரங்கன் ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி 1புட்டி பருப்பு |
| வே. சிவபாதசுந்தரம் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| கணபதி அஸ்வின் | நோர்வே | 5000. 00 |
| ரமேஸ் மாதவன் | நல்லூர் | 5000. 00 |
| B. குகனேசன் | அவுஸ்திரேலியா | 50 டொலர் |
| திரு கந்தகுமார் | அவுஸ்திரேலியா | 50 டொலர் |
| தசராம் ஜெயருபன் | டென்மார்க் | 20000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## சைவபேதவியல் (தொடர்ச்சி.

123. சைவர்கள் தீக்ஷாபேதத்தினால் எத்தனை வகைப்படுவார்கள்?

சமய தீக்ஷிதர், விசேஷ தீக்ஷிதர், நிருவாண தீக்ஷிதர், ஆசாரியர் என நால்வகைப்படுவார்கள்.

124. சமய தீக்ஷிதராவார் யாவர்?

சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு, சந்தியாவந்தனம் மாத்திரமேனும், சந்தியாவந்தனம் சிவாலயப்பணி என்னும் இரண்டுமேனும் அநுட்டிப்பவர்.

125. சந்தியாவந்தனம் மாத்திரம் அநுட்டிக்கும் சமயிகள் யாது பெயர் பெறுவர்?

சந்தியோ பாஸ்திபரர் என்னும் பெயர் பெறுவர். (உபாஸ்தி- வழிபாடு)

126. சந்தியாவந்தனம் சிவாலயப்பணி என்னும் இரண்டும் அநுட்டிக்கும் சமயிகள் யாது பெயர் பெறுவர்?

சிவகர்மரதர் என்னும் பெயர் பெறுவர். (ரதர்- விருப்பமுடையவர்)

127. விசேஷ தீக்ஷிதராவார் யாவர்?

சமய தீக்ஷை, விசேஷ தீக்ஷை என்னும் இரண்டும் பெற்றுக்கொண்டு, சந்தியாவந்தனம், சிவலிங்க பூசை என்னும் இரண்டும் அனுட்டிப்பவர்

128. நிருவாண தீக்ஷிதராவார் யாவர்?

சமய தீக்ஷை, விசேஷ தீக்ஷை, நிருவாண தீக்ஷை என்னும் மூன்றும் பெற்றுக்கொண்டு, சந்தியா வந்தனம், சிவலிங்கபூசை என்னும் இரண்டினோடு ஞான பூசையும் அநுட்டிப்பவர்.

129. ஞானபூசை யென்பது என்ன?

ஞான நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களை விதிப்படியே ஓதல், ஓதுவித்தல், அவைகளின் பொருளைக் கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல் என்னும் ஐந்துமாம்.

130. ஆசாரியராவார் யாவர்?

சமய தீக்ஷை, விசேஷ தீக்ஷை, நிருவாண தீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றுக்கொண்டு, நித்திய கருமங்களோடு தீக்ஷை, பிரதிட்டை முதலிய கிரியைகளும் செய்பவர்.

131. ஆசாரியராதற்கு யோக்கியர் யாவர்?

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருள்ளும், மனக்குற்றங்களும் உடற்குற்றங்களும் இல்லாதவராய், நிகண்டு கற்று, இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கணமும் தருக்கமும், நீதி நூல்களும் சிவபுராணங்களும் படித்தறிந்தவராய், தேவார திருவாசகங்களைப் பண்ணோடு ஓதினவராய், சைவாகமங்களை ஓதி அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அறிந்தவராய், சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையுஞ் சைவசமயத்தையும் போதித்தலின் கண் அதிசமர்த்தராய் உள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**132. ஆசாரியராதற்கு யோக்கியரல்லாதவர் யாவர்?**

நான்கு வருணத்துக்குட்படாதவன், கணவன் இருக்கக் கள்ளக் கணவனுக்குப் பிறந்தவனாகிய குண்டகன், கணவன் இறந்தபின் கள்ளக் கணவனுக்கு விதவையிடத்துப் பிறந்தவனாகிய கோளகன், வியபிசாரஞ் செய்த மனைவியை விலக்காதவன், குருடன், ஒற்றைக் கண்ணன், செவிடன், முடவன், சொத்திக் கையன், உறுப்புக் குறைந்தவன், உறுப்பு மிகுந்தவன், தீரா வியாதியாளன், பதினாறு வயசுக்குட்பட்டவன், எழுபது வயசுக்கு மேற்பட்டவன், கொலை, களவு முதலிய தீயொழுக்கமுடையவன், சைவாகம உணர்ச்சி யில்லாதவன் முதலானவர். (சொத்தி- ஊனம்)

**133. இக்குற்றமுடைய ஆசாரியரைக் கொண்டு தீக்ஷை, பிரதிட்டை முதலியன செய்வித்தவர் யாது பெறுவர்?**

அவைகளால் ஆகும் பயனை இழந்து, நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். ஆதலினாலே, குருலக்கணங்கள் அமையப்பெற்ற ஆசாரியரைக் கொண்டே தீக்ஷை, பிரதிட்டை முதலியன செய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

**134. இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன வருணத்தாருக்கு ஆசாரியராகலாம் என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; பிராமணர், பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருக்கும், க்ஷத்திரியர், க்ஷத்திரியர் முதலிய மூன்று வருணத்தாருக்கும், வைசியர், வைசியர் முதலிய இரண்டு வருணத்தாருக்கும், சூத்திரர், சூத்திரருக்கும் சங்கரசாதியாருக்கும் ஆசாரியராகலாம். இந்நியமம் கிரியாகாண்டத்தில் மாத்திரமேயாம்; ஞான காண்டத்திலோ எனின், நான்கு வருணத்துள்ளும் உயர்ந்த வருணத்தாருக்குத் தாழ்ந்த வருணத்தாரும் ஆசாரியராகலாம்.

**135. சிவஞானத்தை அடைய விரும்பி சீடன் தான் அடைந்த ஆசாரியரிடத்தே சிவஞானம் இல்லையாயின், யாது செய்தல் வேண்டும்?**

வண்டானது தான் அடைந்த பூவினிடத்தே தேன் இல்லையாயின், அதனை விட்டுத் தேன் உள்ள பூவைத்தேடி அடைவதுபோலச், சீடன் தான் அடைந்த ஆசாரியரிடத்தே சிவஞானம் இல்லையாயின், அவரை விட்டுச் சிவஞானம் உள்ள ஆசாரியரைத் தேடியலையலாம்; அடையினும், மூன்று சந்தியினும், கிரியை உபதேசித்த முந்திய ஆசாரியரைத் தியானஞ் செய்து கொண்டே, ஞானம் உபதேசித்த பிந்திய ஆசாரியரைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

**136. இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன தீக்ஷை பெறுதற்கு யோக்கியர் என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; நான்கு வருணத்தாரும், அநுலோமர் அறுவரும் ஆகிய பத்துச் சாதியாரும் ஔத்திரி தீக்ஷை பெறுதற்கு யோக்கியர். மற்றைச் சாதியார் ஔத்திரி தீக்ஷைக்கு யோக்கியரல்லர். ஔத்திரி தீக்ஷைக்கு அங்கமாகிய நயன தீக்ஷை, பரிச தீக்ஷை, வாசக தீக்ஷை, மானச தீக்ஷை, சாத்திர தீக்ஷை, யோகதீக்ஷை, என்னும் ஆறினுள்ளும் தத்தம் சாதிக்கும் பரிபக்குவத்துக்கும் ஏற்ப தீக்ஷை பெறுதற்கு யோக்கியர். ஆசாரியர் தமது பாதோதகத்தைக் கொடுத்தலும் ஒரு தீக்ஷையாம்; சீடர் அதனைச் சிரத்தையோடும் ஏற்றுச் சிரசின் மீது புரோக்ஷித்து ஆசமனஞ் செய்யக் கடவர்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மகாவிரதர்

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள்:131)

ஒழுக்கமே சிறப்பினைத் தருவதால், அது உயிரை விட மேலானதாகக் கருதிக் காக்கப்படும்.

குறிப்பிட்ட ஒழுக்கத்தை விடாமல் காப்பேன் என்று உறுதி பூணுதல் விரதமாகும். இது காலம், இடம், சூழ்நிலைப்படி தளர்த்திக் கொள்ளப்படலாம். “அப்படி எதனாலும், உறுதியிலிருந்து தவறமாட்டேன்” என்று விடாப்பிடியாக ஒழுக்கத்தைக் காப்பதே மகாவிரதம் எனப்படும். இப்படி ஸ்ரீராமர் ஒரே மனைவி என்பதில் விரதம் கொண்டு இருந்தார் மனைவியைப் பிரிந்தபோதும், மனைவியுடனிருக்கும் போதே, தானே வலிய சூர்ப்பனகை வந்தழைத்தபோதும் அந்த விரதத்தில் உறுதியாக இருந்து மகாவிரதராக ஆனார்.

தேவவிரதன் என்று சந்தனுவின் மகன் இருந்தான். அவன் தன் பதினெட்டாம் வயதில் தற்செயலாகத் தந்தை கவலையாக இருப்பதைப் பார்த்து, அவருடைய நண்பனும் தேரோட்டியுமானவனிடமிருந்து தந்தை ஒரு மீனவப் பெண் மச்சகந்தி என்பவளைக் காதலிக்கிறார் எனக் கேட்டறிந்து தானே அவளைத் தந்தைக்காகப் பெண் கேட்கப் போனான்.

மச்சகந்திக்கு சத்தியவதி என்று பெயருண்டு. அவளின் தந்தை “சந்தனு மகாராஜாவிற்கு என் பெண்ணைத் தரத் தயார். ஆனால், அவளே பட்டத்து ராணியாக இருக்க வேண்டும்” என்றான்.

“சரி!” என்று தேவவிரதன் கூறினான்.

“அவளுக்குப் பிறப்பவனே சந்தனுவிற்குப் பிறகு அரசுப் பட்டத்தையும் பெறவேண்டும்.”

“சரி”

“சரி” என்று இன்று நீங்கள் சொல்கிறீர்கள். நாளைக்கு உங்களுக்குப் பிறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் மாவீரனாக இருப்பான். அவன் சத்தியவதிக்குப் பிறப்பவனைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றி விட்டால்?"

"அப்படி நீர் நினைத்தால், நான் திருமணம் புரிந்து கொள்ளாமலேயே நைட்டிக பிரும்மச்சாரியாகவே இருந்து விடுகிறேன். இது பஞ்சபூதங்களின் மேல் ஆணை. அப்புறம் எனக்கு மகன் எப்படிப் பிறப்பான்?" என்று தேவ விரதன் சபதமிட்டவுடன் அசரீரி அவனைப் பாராட்டிப் பெரியவன் என்ற பொருளில் "பீஷ்ம, பீஷ்ம" என்றொலித்தது. அப்படி விரதம் பூண்டு பீஷ்மரானவர் கடைசி வரை எந்தச் சிக்கலான நிலையிலும் விரதத்தில் பங்கம் வராமல் மகாவிரதராக இருந்தார். இது அவருடைய ஒழுக்கத்தின் விழுப்பம்.

"ஒழுக்கமே வாழ்க்கையில் துணை என்று சிரமப்பட்டு அதைப் பாதுகாத்தார். அதில் தவறினால் இழுக்கு பரம்பரைக்கே களங்கம் கற்பிக்கும்" என்று உயர்ந்த குலப் பண்பாக அதைக் காத்தார்.

வேதமோதுதலை மறந்த பிராமணன் கூட அதைப் பிறகு மீண்டும் ஓதிப் பழகி விடலாம். ஒழுக்கத்தில் ஒரு தடவை தவறினாலும் பல வருடங்கள் அதைக் காத்திருந்தும் பயனில்லாமற் போகும். பொறாமை கொண்டவன் செல்வம் குன்றுவதே போல ஒழுக்கமற்றவனிடம் எந்தவித உயர்வுமிருக்காது.

ஒழுக்கத்தில் ஒரு துளி தவறினாலும் அதன் வழியாகக் குற்றங்கள் புகுந்துவிடும். இதனால் சான்றோர் ஒரு துளியும் ஒழுக்கத்தில் தவறமாட்டார். ஒழுக்கத்தால் உயர்வும், அது தவறினால் பழியும், உண்டாகும். நல்லொழுக்கம் வாழ்க்கை நலம் தரும். கெட்ட நடத்தை கேடே தரும். ஆகவே, ஒழுக்கத்தில் சிறந்த பெரியோர் கெட்ட பேச்சே பேசமாட்டார். உலக நடையை ஒத்து நடக்காதவர் என்ன கற்றும் பயன்படாது. அப்படி நடப்பது இங்கிதம் எனப்படும். எனவே, சான்றோரால் உலக நடையாக வகுக்கப்பட்டிருக்கும் ஒழுக்கத்தில் மீறக்கூடாது.

இந்த தருமங்களை நன்கு உணர்ந்தறிந்த பீஷ்மர், குருதேசத்தைக் காக்க உறுதி பூண்டு கடைசிவரை அதை விட்டகலாமல் அஸ்தினாபுரத்திலேயே இருந்தார். தேசத்தை ஆள அரசனில்லாத போதும், எந்தச் சத்யவதியின் பிள்ளை நாட்டை ஆளவேண்டும் என்று சபதம் செய்தாரோ அந்தப் பிள்ளைகள் இறந்துவிட்டபோதும், நாட்டின் ஆட்சியை ஏற்க சத்யவதியே வற்புறுத்தியும் "வேண்டாம்" என்று விட்டு விட்டார். அதோடு, சகோதரனின் மனைவிகளிடம் நாட்டை ஆள வாரிசை உற்பத்தி செய்ய சத்யவதியே ராஜமாதாவாக கட்டாயம் செய்து கூறியும், பீஷ்மர் தம் நைட்டிக பிரும்மச்சர்யத்திலிருந்து தவறவில்லை.

சகோதரர்களுக்கு மணமுடிக்க கடத்தி வந்த காசிராஜனின் மூன்று புதல்விகளில் ஒருத்தி அம்பை காதலனாலும் கைவிடப்பட்ட நிலையில் கடத்தி வந்த பீஷ்மரே மணக்க வேண்டும் எனக் கெஞ்சினாள். பிறகு பீஷ்மரின் குருவான பரசுராமரைக் கூட்டி வந்து மிரட்டினாள். அப்படியும் அவளைத் தம் விரதத்தை முறித்து மணக்க மறுத்துவிட்டார். இதற்காக, குருவுடனே இருபத்துநான்கு நாட்கள் போரும் செய்தார். இப்படி உயிரைவிட, விரத ஒழுக்கமே பெரிது எனக் காத்த மாபெரும் வீரர் பீஷ்மர் மகாவிரதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னால் விரோதமிது...

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

சைவமும் வைணவமும் சகோதர சமயங்கள் எனலாம். சிவனை முழுமுதற் பொருளாக வணங்குவது சைவம். இஃது சிவசம்பந்தம் உடையது. வைணவம் விஷ்ணுவை வழிபடுஞ் சமயம். எனவே விஷ்ணு சம்பந்தமானது எனலாம். நாயன்மார்கள் சிவனையும் விஷ்ணுவையும் பாடியது போன்று ஆழ்வார்களிற் சிலர் சிவனையும் போற்றியுள்ளனர். நம்மாழ்வாரின் திருவாய் மொழியிலே இவ்வுண்மை நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

உணர்ந்துணர்ந் திழிந்தகன்று யர்ந்துரு
 வியந்தவிந்நிலைமை
உணர்ந் துணர்ந் துணரினும் இறைநிலை
 யுணர்வரி துயிர்காள்
உணர்ந் துணர்ந் துரைத் துரைத் தரியய
 னர னென்னுமிவரை
உணர்ந் துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்
 மனப்பட்ட தொன்றே

திருவாய் மொழி 1.3.6

ஒன்றெனப் பல வென அறிவரும்
 வடிவினுள் நின்ற
நன் றெழில் நாரணன் நான்முகன்
 அரனென்று மிவரை
ஒன்ற நும் மனத்து வைத்துள்ளி நும்
 மிருபசை அறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை
 நம்முடை நாளே

மேல் 1.3.7

ஒற்றுமைக் கண்ணோட்டத்திற் தன் மதசம்பந்தமான தெய்வத்தையன்றி புறந்தொழார் வைணவர். பரசமய கோளரிகளும் சைவ நெறியில் இல்லாமல் இல்லை. என்ன எப்படிப் பார்ப்பினும் ஒன்று பரம்பொருள். நாமதன் மக்கள் என்பது பாரதியார் கூற்று. சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. இவற்றுள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு தோத்திரப் பாமாலைகள், இசைப்பாடல்கள். இவற்றுக்குப் பண்ணும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வண்ணமே பன்னிரு ஆழ்வார்களின் அருட்செய்யுள்கள் திருநாலாயிரம். இதை நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனவும், திராவிட வேதம் எனவும் வழங்கப்படும். இரு சமயங்களும் தமிழகத்தில் நிலையூன்றியுள்ளன. பரம்பொருளையன்றி வேறெவரையும் வணங்காத வைணவம் புகழ்பூத்த பாசுரங்களை முறையாகப் பாராயணம் பண்ணும் பெருமைக்குரியது. நம்பியாண்டார் நம்பி தேவார திருவாசக வரிசையைத் தொகுத்தவர். ஸ்ரீ நாதமுனி திருநாலாயிரங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடியெடுத்து உலகுக்கு அளித்தார். மேலரகத்தாழ்வார், கீழரகத்தாழ்வார் என்போர் திருநாலாயிரத்துக்கு இசையமைத்தவர்கள் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மனைவி வழிவந்தோர் தேவாரத்துக்குப் பண் வகுத்தனர். இவ்வண்ணம் பெருமை வாய்ந்த இரு சமயமும் இன்றும் அனுஷ்டிக்கப்படுகிறது. இக்கண்ணோட்டத்தில் நம்மாழ்வார் ஸ்ரீமத் நாராயணனையன்றி நின் கடவுளையன்றி வேறெவரையும் பாடல் செய்து என்ன பயன் அடையப் போகிறீர்கள் என ஒரு பத்தே பாடியுள்ளார். இ.்து நம் சிரத்தைக்குரியது பகவானையே புகழவேண்டும். அவனுடைய அநுபூதிகளையே கூறவேண்டும். அவன் குணத்தையே பேசவேண்டும். இவற்றை விட்டு மனிதரைப் பாடலாமா? இதனால் எய்தும் பயன் என்ன? எம்பெருமான் உவந்தளித்த ஞானம், நாவன்மை ஆகியனவற்றை அவனுக்கே பயன்படுத்த வேண்டாமா என வினவுகிறார் சடகோபர் (நம்மாழ்வார்)

சொன்னால் விரோதமிது ஆகிலும்
சொல்லு வேன் கேண்மினோ
என்னாவில் இன் கவி யா னொரு
வர்க்கும் கொடுக்கி லேன்
தென்னா தென்னா என்று வண்டு
முரல்திரு வேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெரு
னுள னாகவே மேலது 3.9.1

இக்கருது கோள் ஏழாந் திருமுறையிலும் இடம்பெற்றிருக்கிறது.

"தம்மை யேபுகழ்ந்து இச்சை பேசினும்
சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடா தேஎந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே

திருமுறை 7. 105 சுந்தரர்.

பொருள்:

புலவர்களே! தம்மையே விரும்பிப் புகழ்ந்து பேசினும் சார்ந்திருந்தாலும், இந்நிலைகொண்ட அடியவர்க்கு ஒன்றுமே ஈயாத பொய்ப் புலவர்களைப் பாடுவதை விடுத்து எம் தந்தையாகிய திருப்புகலூர்ப் பெருமானையே பாடுங்கள். அவ்வண்ணம் பாடினால் அப்பெருமான் இப்பிறவியில் உண்ண உணவும், உடுக்கத் துணியும் கொடுப்பதோடு மறுமையில் சிவலோகம் செல்வதற்குரிய நிலையையும் இறைவன் தருவான். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. எனவே இடர் (கெட) அவனையே பாடிப் பரவுவோம்.

சுந்தரருக்குப் பின்னர் வந்த அருணகிரியாரும் இதுவரை கந்தன்புகழ் பாடாவிடினும் இனியாதல் பாடுங்கள் என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூ மேல்மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே

கந்தரநுபூதி 17

அருணகிரிப் பெருந்தகை கந்தரந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருவகுப்பு, விருத்தம் (மயில் விருத்தம், வேல் விருத்தம், சேவல் விருத்தம்) திருப்புகழ் (16000 இப்போ 1324) போன்ற அறுவகை இலக்கியங்களை வடித்தார். எனவே நாமும் கந்தன்புகழ் பாடி உய்தி பெறுவோமாக.

இன்று பலவிதமான மதக்கலப்புகள் வந்தமையால் சைவசமயிகள் திசைமாறிப் போயினர். எம்மத்தியில் இங்கர்சாலின நாத்திகம் பரவிவிட்டது. எனினும் நாம் சைவ சமயிகளாகவே வாழ்கிறோம். இந்தத் திசையில் திராவிடக்கழகம் தென்னகத்தில் ஊடுருவினாலும் குன்றக்குடியடிகளார் கிருபானந்தவாரியாரின் முயற்சிகள் வெற்றிகண்டுள்ளன. வெளிநாடுகளில் நாத்திகம் இடம்பெறாவிடினும் தமிழ்ப்பாட நூல்களில் பாரதிதாசன் அறிமுகம் செய்யப்படுகிறார். அவர் பாடிய பாடல்கள் இறைவனையே மறுதலிக்கும் பாடல்களாய் அமைந்துள்ளன. அப்பாடல்கள் சில முன்மாதிரிக்காகத் தருகிறோம்.

கூசி நடுங்கிடு தம்பி, கெட்ட கோயில் என்றால்
ஒரு காதத்தில் ஓடு
அரி யென்றும் சிவனென்றும்
சித்தார்த்தன் என்றும்
பேசி வளர்க்கின்ற பேரில் உன்
பெயரையும் கூட்டு வர்
நீயொப்ப வேண்டாம்.....
கூசி நடுங்கிடு தம்பி

கடவுள் கடவுள் என் றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்
கடவுள் என்ற நாம தேயம்
கதறிடாத நாளிலும்
உடமை யாவும் பொது மையாக
உலகு நன்கு வாழ்ந்ததாம்
கடையர் செல்வர் என்ற தொல்லை
கடவுள் பேர் இழைத்ததே

மனைமக்கள் தூங்கினார்
வழிநடைச் சிரமமின்றி
மாபெரிய சிந்தனா லோகத்தை எய்தினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கடவுள் நான்கடவுள்
என்றொருவர் வந்தார்
எழுப்புசுவர் உண் டெனில்

எழுப்பியவன் ஒருவனுண்டே
இவ்வுலகு கண்டு கண்டுயானும்
உண் டென உணர்க என்றார்
கனமான கடவுளே
உனைச் செய்த சிற்பி எவன்
என்ற உடனே
கடவுளைக் காண்கி லேன்
அறிவியக்கப் புலமைகண்ட
பாரத தேசமே.

-பாரதிதாசன்-

எம் செல்வச் சிறார்க்கு இப்படியான கொள்கையுள்ள பாரதிதாசனை அறிமுகம் செய்வது முக்கியமா குளிக்கப் போய்ச் சேறு பூசுவதா மூத்த பெற்றோரே சீர்தூக்கிப் பார்ப்பீர்களாக.

இறைவனின் சேவையே ஒவ்வொரு ஜீவாத்மாவும் செய்ய வேண்டிய கடமையாகும்.

இறைவனுக்குச் செய்யும் சேவை ஒன்றில் தான் உலக ஜீவன்கள் அனைத்தும் ஒன்றுபடுகின்றன.

இறைவனுக்குச் செய்யும் தொண்டு ஒருவனுடைய வாழ்வின் லட்சியக் கதவைத் திறந்து, இறைவனின் எண்ணற்ற சக்திகளை உணரும்படி செய்கிறது.

வாழ்க்கை என்னும் பெரிய சாகரத்தைக் கடக்க விரும்புவோர் "கண்ணன் என்ற ஓடத்தைப் பயன்படுத்துவார்களேயானால் பரந்த பிறவிக்கடல் ஒரு சிறு நீர்த்தேக்கத்திற்கு சமனாகிவிடும்.

வேரிலே நீரூற்றினால் அதன் பலனைச் செடி முழுவதும் அடைவதுபோல், கண்ணனை வழி பட்டால் மற்ற எல்லாத் தேவர்களும் மகிழ்ச்சி யடைவார்கள்.

வாயிலே போடும் உணவின் சத்தும், சக்தியும் உடலின் எல்லா பாகங்களும் அடைவதுபோல, கண்ணனுக்குச் செய்யும் சேவை எல்லாத் தெய்வங்களுக்கும் செய்ததாகும். *-கோபுர தரிசனம்-*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானேயோ தவஞ்செய்தேன்

திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்

ஒரு செல்வந்தர் நாலைந்து அடுக்கு மாடி வீடுகளை அமைத்தார். கீழ் மாடியில் மூன்று நான்கு வாகன ஊர்திகள் தயார் நிலையில் பணிப்பை எதிர்நோக்கிய வண்ணம் நிற்கின்றன. காற்றாடியின் கீழ் சுழல் கதிரையில் சொகுசாக அமர்ந்திருக்கின்றார். செல்வந்தர் எதிரில் அமர்ந்திருக்கும் நண்பரை உரிமையோடு பார்த்துச் சொல்லுகின்றார்.

"நான் என்னத்தை ஐயா உழைத்தேன்?" என்று "ஹாயா"கச் சொல்லுவதுபோல அமைந்திருக்கின்றது மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் பாடும் வாக்கு ஒன்று. அது திருவேசறவுத் திருப்பதிகத்தில் பத்தாம் பாடலாக ஆரம்பிக்கின்றது.

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்" இவ்வுணர்வை எளிய தமிழ் வசனநடை பின்வருமாறு புலப்படுத்தும்.

"நான் என்னத்தை அப்பா தவம் பண்ணினேன். ஒன்றுமில்லை. ஆனால் சிவாயநம என்று மாத்திரம் உச்சரிக்கப் பெற்றேன்.

பெருந்தவ வாணருடைய தவத்தினோடு நான் பண்ணின தவத்தைத் தவம் என்று பேசலாமா? குளிரில் குளித்து மூழ்கி, வெயில் பனி மழையில் உடலை வாட்டி, கண்ணுறங்காது, உள்ளக் கருத்து மறவாது, உயிர்ப்பை ஒடுக்கி, ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி நோய் நொடி பசியினால் நொவ்வுறாமல் ஒற்றைக் காலில் நின்று உயர்தவத்தை மேற்கொண்டவர் எத்தனைபேர்! தன் தலையைத் தன் தசையை அரிந்து அக்கினியில் இட்டு சூரன் சிங்கன் போல் அருந்தவத்திற்குத் தம்மை ஆளாக்கியவர் அனேகர்!! நாற்றிசையிலும் கனலை மூட்டி நடுவக்கினியில் காலை நிறுத்திப் பத்தாயிரம் ஆண்டுகள் பரிதவிக்கும் தவத்தை மேற்கொண்டான் கயமுகாசுரன். அவன் போல அரிய தவத்தை எத்தனை முனிவர்கள் முயன்றார்கள்!! அவர்கள் முயன்ற அரிய தவத்தோடு அடியேன் உச்சரித்த சிவநாம திருவைந்தெழுத்து மந்திரத்தையும் தவம் என்று ஒப்பிடலாமா? இந்த அரும்பொருள் உள்ளீட்டை வெளிக்காட்டும் பொருட்டாகப் போலும்- நானேயோ தவஞ் செய்தேன் என்றார் போலும்.

அப்படி இருந்தாலும் ஐந்து எழுத்து மந்திரமும் தவத்தில் சோடை போனதில்லை. என்ற உண்மையை அதே திருவாசகச் செழும்பாடலில் தெளிவுபடுத்துகின்றார்.

தேன்போலவும் இனிய பாலமுதம் போலவும் இனிமை பயக்கும் சிவபெருமான் நானாகச் சொல்லத் தானாகவே எழுந்தருளி வந்தார். என் மனத்தில் புகுந்தருளினார். புலால் நிறைந்த உடம்பில் உயிர் வாழ்தலைக் கண்டித்தார். அவ்வாழ்வை வெறுத்திடும்படி அடியேனுக்கு அருள் அளித்தார்.

சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதோ என்ற பண்டைமொழி போலச் சும்மா சிவாயநம என்பவனுக்கு அது போதாதா? இவையாவும் நரியைக் குதிரைப் பரியாக்கிய பேரருள் போன்ற தன்றோ!! அத்திருவாசகச் செழும்பாடல் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

சிவாயநம எனத் திருவாதவூரடிகள் செய்தவத்திற்குப் பிரான் அருளிய பேற்றை திருவேசறவு பதிகப் பத்துப் பாடல்களிலும் மணிவாசகமாகப் பகர்கின்றார். சுவைதரு தேன் அவை இவையாகும்.

1) இரும்பின் தன்மையைப் பயக்கும் உள்ளம் உடையேனை இழுத்து இழுத்து எலும்பினை உருகுவித்து நினது திருவடிகள் இரண்டின் கரும்பின் சுவைபோன்ற இனிமையை எனக்குக் காண்பித்தருளினை.

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை

2) நீ என்னை வாவென்று சொல்ல உன் திருவடிகளைக் கண்ணாரக் கண்டேன். உய்வடைந்தேன்.

"........... நீ வாஎன்ன
கண்ணார உய்ந்தவா றன்றேஉன் கழல்கண்டே

3) அடியேனுக்கு உன் திருவடிக் கமலங்களைக் காட்டியவாறு தான் என்னே பரம்பரனே!

"......... அடியேற்குஉன்
பாதமலர் காட்டியவா றன்றேஎம் பரம்பரனே.

4) குறைபாடுகள் நிறைவாக உள்ள தெய்வங்களை வழிபடாமல் உன் தன்மையை நினைந்து உய்யக் கொள்ள நான் உய்வடைந்தவாறு. தான் என்னே!

"........ சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோ என்
சித்தத்தாறு உய்ந்தவா றன்றேஉன் திறம்நினைந்தே.

5) எம்பெருமானே! நினது மாறில்லாத பொன்போன்ற அருள் அடியேனுக்கு நல்கியது பொன்னாசனத்தை நாய்க்கு இட்ட முறை போலாம் அல்லவா!!

"....... எம்பெருமானே அடியேற்கு
பொற்றவிசு நாய்க்கு இடுமாறு அன்றேநின் பொன்னருளே

6) பஞ்சின் தன்மைப் பாதங்களையுடைய கன்னியரின் கடைக்கண் பார்வையால் அல்லற்பட்டு நஞ்சார்ந்த துயர்ப்பட்டு அஞ்சி அலமருவேன் நின்னருளால் பிழைத்தேன்......"

"பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேன்....

7) "நீ என்மீது வைத்த தயவால் உள்ளம் நெகிழும்படி உள்ளே போந்தருளி ஆண்டு கொண்டது என்மீது வைத்த அருள் நோக்கினால் அன்றோ!

"அன்பார்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே..

8) "......... இங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவா றன்றேஎம் பெருமானே.

கடமை என்னுடையது பலன் ஆண்டவனுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அடிகளார் நின்றாலும் இருந்தாலும் நடந்தாலும் கிடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் இமைத்தாலும் விழித்தாலும் மன்றாடும் மலர்ப்பாத நாமத்தை ஒருக்காலும் மறவாமைக் குன்றாத கொள்கையினால் நாவில் கொண்ட தவப்பேற்றால் பெற்ற பேறு கொஞ்சநஞ்சமல்ல.

நமக்கு நாவிருந்தும் நினைக்க மடநெஞ்சிருந்தும் வாய் வாழ்த்த மறுப்பதனாலும் மறப்பதினாலும் பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் பெறுதற்கரிய பேற்றை இழந்து பரிதவிக்கும் மடமையின் மதியிலி தான் என்னே.... என்னே!!

# செல்வச்சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை- 40

நதியி னருகினி லெழிலுறு பதியதில்
நவில வரியுன திருவரு ளதைநித
மயில துருவினி லருளிட வருதிரு – முருகோனே
நலம தளியுன மலரிணை தருமுப
சரணை யளிகத வினையடை கயவரும்
நலிய வுனதிடம் மறுபடி வரவருள் – புரிவேலா
நிதிய துனதடி பணிகுத லெனநித
முதய மதிலுனை தொழுதெழு மடியவர்
மகளி னுடலினை வதைசெயு பிணியற – அருள்கோனே
நிலம தளிநறு மலரொடு ஒளிதரு
கலச மவையளி குடியினர் வளமுற
நினையு தொறுமுன பெருவரு ளதையளி – வடிவேலா
விதியின் வழியுழ லெனநிலை புவியினி
லுயர வுனதிரு வடியிணை சிரமதி
விரைவி லெழுதிடு வரமதைப் பரிவொடு – தாராயோ?
வினையின் வழியினி லியமனு முயிரினை
கவர வென்வர கடிதிலெ னெதிரினில்
அபய மதுதர வெனதுன மயிலினில் – வாராயோ?
கதிய திலையுன கழலிணை துணையென
கதறு மடியவர் கருதவை நனியுற
கருணை யதுபுரி குருபர னெனவுரை – பெறுவேலா
கருது வதிசய மவைபல செயவென
கழனி யொடுபொழி லணிசெயு திருவிடங்
கலியி லருளிடு மிறையென வமருசந் – நிதியானே!

-இராசையா குகதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**16.05.2013 கதிர்காம பாத யாத்திரைக் குழுவினர்**
**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முன்றலில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாத்திரைக் குழுவினர் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்து
யாத்திரையை ஆரம்பிப்பதற்கு முன் ஆச்சிரம சுவாமிகளுடன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசா வாஸ்ய உபநிஷதம்

சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பாடலாக்கம் செய்தவர்:- திரு பூ சோதிநாதன்.

## சாந்தி பாடம்

ஓம்!
பூர்ணம் அதே
பூர்ணம் இதே
பூர்ணம் அதில்
இருந்திந்தப்
பூரணமும்
தோன்றிற்றே
பூர்ணம் அதில்
பூர்ணம் இதை
பூர்ணமும் ஆய்
எடுத்த பின்னும்
பூர்ணம் தான்
எஞ்சியதே.
ஓம் சாந்தி.
சாந்தி சாந்தி.

## மந்திரம் ௧

பிரபஞ்சத்துள்ள யாவும்
பிரமத்தால் நிறைக்கு மந்தச்
சரதமாம் உண்மைத் த்யாகத்
தகவினால் பற்றை நீக்கிப்
பரந்தஇவ் உலகம் தன்னில்
பணமெலாம் எவர தென்ற
உரந்தனை மனத்துட் கொண்டே
உலகைநீ அனுப விப்பாய்

## மந்திரம் ௨

கருமத்தைச் செய்து கொண்டே
காலத்தை ஆண்டு நூறு
கருதிய வாறே வாழ்ந்து
கழித்திட விரும்பு கின்ற
பெருந்தொகை மாந்தர் போல
பிறிதொரு வழிகா ணாநீ
கருமத்தில் பற்றே இன்றிக்
கடமைசெய் பற்றா த.்.தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திரம் 3

அசுரரின் உலகம் எல்லாம்
ஆழ்ந்தகார் இருளில் மூழ்கும்
பசுவெனும் ஆன்மா தன்னைப்
பராமுக மாகக் கொன்றால்
பசுவினைக் கொன்ற அந்தப்
பாதகர் மரித்த பின்னால்
அசுரர்தம் உலகம் தானே
அடைவரென் பதுவும் உண்மை

### மந்திரம் 4

அசைவினை அற்ற தான்மா
அதுவுமே ஒன்றாம் ஆனால்
விசையினை அதற்குச் சொல்லின்
வியத்தகு மனத்தை வெல்லும்
திசையெலாம் அறிவைத் தேடும்
திறனுள புலன்கள் தானும்
அசைவிலா ஆன்மா தன்னை
அறிந்திடல் முடியா தன்றோ

சிலைஎன நின்று கொண்டே
செல்வன வற்றுக் கெல்லாம்
நிலையதில் அதுவே முந்தும்
நின்றிடா தோடு கின்ற
நிலையிலா வற்றை எல்லாம்
நீடுற முந்தி நிற்கும்
நிலையுடன் அதுவே நிற்க
நிகழ்த்திடும் பிராணன் யாவும்.

### மந்திரம் 5


அசைகிறதாய் ஆனதுவும் அன்றி எவித
அசைவிலதும் அண்மையதும் தூர - இசைவதுவும்
உள்ளதனைத் துள்ளும் வெளியேயும் உள்ளதுவும்
உள்ளதந்த ஆன்மா உணர்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம யாத்திரை





வருடாவருடம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காம உற்சவத்தையொட்டி நடைபெற்றுவரும் கதிர்காம நடைப்பயணம் 16.05.2013 வியாழக்கிழமை காலையில் யாத்திரையில் பங்குபற்றும் அடியவர்கள் தமது பயணத்தினை ஆரம்பித்தனர்.

காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகர் கோவில் தர்மகர்த்தா வேல்சாமி ச. மகேஸ்வரன் தலைமையில், (ஒரு சிறுவன் ஒரு சிறுமி உட்பட) 43பேர் இந்த நடைப் பயணத்தில் பங்கு கொண்டனர். நடைப்பயணத்தில் பங்கு கொள்ளும் பலபேர் இரு நாட்களுக்கு முன்பே ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வந்து தங்கியிருந்தனர். அவர்களுக்குரிய உணவுவகைகளை சந்நிதியான் ஆச்சிரமம் பொறுப்பேற்று நடை முறைப்படுத்தியது.



16.05.2013 அன்று காலையில் செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற விசேட வழிபாடு முடிந்ததும், ஆச்சிரமம் வந்தடைந்த யாத்திரைக் குழுவினரை ஆச்சிரமத்து சுவாமிகள் வரவேற்று காலை உணவளித்து உபசரித்தார். அத்துடன் இடைநேர உணவுக்கான ஒரு கட்டுப் பொதியும் தனித்தனியாக வழங்கப்பட்டது. பிரயாணத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகிய பின்னர் ஆச்சிரம சுவாமி அறையில் விஷேட பூசை நிகழ்வு நடைபெற்றது. நடைப் பயணியர் ஒவ்வொருவருக்கும் விபூதிப் பிரசாதத்துடன் கைவிசேஷம் (ஒரு தொகைப் பணம்) வழங்கப்பட்டதுடன், விசேட பூசையில் வைக்கப்பட்டிருந்த வேலினை ஆச்சிரம சுவாமிகள் நடைப்பயணக் குழுவின் தலைவர் வேல்சாமி அவர்களிடம் கையளித்தார். பயணியரின் ஏகோபித்த "அரோகரா" ஒலியுடன் நடைப்பயணம் ஆரம்பமாகியது.


தென்மராட்சி, வன்னிப் பிரதேசங்களுக் கூடாகச் சென்ற யாத்திரைக் குழுவினர் 27ந் திகதி வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் விழாவினையும் தரிசித்தனர். தொடரும் அவர்களின் பாதயாத்திரை கதிர்காமக்கந்தனின் கொடியேற்றத்துடன் நிறைவு பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் சனிப் பிரதோஷம்

– வல்வையூர் அப்பாண்ணா –

இராஜராஜ சோழனின் கனவுக்கோயில் தஞ்சைப்பெரிய கோவில். ஆயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் இயற்கையின் சீற்றங்களுக்கு ஈடுகொடுத்து, நிரம்பிய கலை வடிவங்களுடன் இன்றும் அனைவரையும் (வெளிநாட்டவர்கள் உட்பட) கவர்ந்திழுக்கும்




சக்திகொண்டது இக்கோயில். ஐக்கிய நாடுகள் சபை - தொல்பொருட் பிரிவின் பாதுகாப்பில் பராமரிக்கப்படும் மூன்று ஸ்தலங்களில் ஒன்று இது. (ஏனையவை: கங்கை கொண்ட சோழபுரம், கும்பகோணம் தாராசுரம்) தமிழ் நாட்டிலேயே மிகப்பெரிய லிங்கோற்பவர் - பிரகதீஸ்வராக - மூலவராக இங்கே வீற்றிருக்கிறார். பரந்து விரிந்த ஒரே பிரகாரம். பரிவார மூர்த்தங்கள் எனப் பல சந்நிதானங்கள் அங்கில்லை. தெட்சணாமூர்த்தி, கணபதி, முருகன், சண்டிகேசர் சந்நிதிகள் பெரிதாக அமைந்திருக்கின்றன. இதைவிட நந்திமண்டபம் அருகே தெற்குப் பார்த்தபடி பெரியநாயகி அம்பாள் சந்நிதி தனிக்கோவிலாக உள்ளது. வழமையாக

---


கடந்த ஓரிரு வருடங்களின் முன்பு திருக்காளகஸ்தி ராஜகோபுரம் இடிந்து விழுந்த பின்னர், இந்திய மத்திய அரசின் தொல்பொருட் பிரிவினரால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினர் தமிழ்நாட்டின் மிகப் பழமை வாய்ந்த கோயிற் கோபுரங்களை - அவற்றின் உறுதிப்பாடுகளை ஆய்வு செய்தனர். தஞ்சைப் பெரிய கோவிலின் கோபுர அடித்தளம் ஒரு சில மில்லிமீற்றர் மட்டுமே வித்தியாசப்பட்டிருப்பதாகவும், இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கோபுரம் உறுதி குலையாமல் நிலைத்திருக்கும் எனவும் சான்று பகர்ந்தனர். விமானத்தின் உயரம் 216 அடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்த மண்டபம் அமைந்திருக்கும் ஈசானிய மூலையில் தெற்குப் பார்த்தபடி நடராஜர் சபை தனிக்கோவிலாக உள்ளது. சரித்திரச் சிறப்பு வாய்ந்த பிரகதீஸ்வரர் ஆலய சனிப் பிரதோஷ நன்னாளில் இரண்டாவது முறையாக (09.03.2013) எம்பெருமானைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. மனம் நிறைந்த அந்த நன்னாள் அநுபவத்தினை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். வாருங்கள்...... பெரிய கோவில் போவோம்.

கோவிலின் எதிரே வீதிக்கு மறுபுறம் உள்ள வாகன தரிப்பிடத்தில் வாகனத்தை விட்டிறங்கி வீதி கடந்து, முகப்பு வாசல் தாண்டி, இரண்டாவது வாசல் கடந்து (இரண்டுமே கோபுரங்கள் போன்ற அமைப்பு இல்லாவிடினும், மிகப்பெரிய முகப்பு வாயில்கள்) உள்ளே வருகிறோம். நேரம் 4மணியாகிறது. சாரிசாரியாகச் சனக்கூட்டம் கோவிலின் உள்ளே போகிறது. அந்த அலையில் நாமும் அள்ளுண்டு உள்ளே போகிறோம். நிமிர்ந்து பார்த்தால் பிரமாண்டமான நந்தி உள்ள இரண்டு தள மண்டபம் கண்ணெதிரே தெரிகிறது. ஒரு தளம்:




நந்தி மண்டபத்திற்கும் மூலவரின் மகாமண்டபப் படிக்கட்டுக்கும் இடைப்பட்ட 4அடி உயரமான-1000பேர் வரை அமரக்கூடிய - மேற்கூரையில்லாத - தூண்கள் எதுவுமற்ற பரந்த மேடைப்பகுதி. அடுத்த தளம்: இந்த மேடைப்பகுதியின் மேல் இன்னும் 8அடி வரையுள்ள உயரத்தில் நந்தி உள்ள மூடிய மண்டபப் பகுதி. நந்தி மண்டபத்திற்கு ஏறிச்செல்ல அகன்ற படிவரிசை வடக்கிலும் தெற்கிலும் உள்ளன. காலம் இத்தனை கடந்தும்கூட நந்தி மண்டபத்திற் காணப்படும் கருங்கற் தூண்கள் மண்டபத்தைத் தாங்கிநின்று நந்திக்கு நிழல் கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மேடைப்பகுதியில் நின்றபடி நேராகப் பார்த்தால் பிரகதீஸ்வரர் வீற்றிருக்கும் கருவறையும், கருவறைக்கு முன்னே உள்ள அகன்ற மகாமண்டபமும், அம் மண்டபத்திற்கு ஏறிச்செல்ல வசதியாக அமைந்துள்ள அகன்ற நேரான படிக்கட்டுகளும் தெரிகிறது.



மூலவரின் பூசைவேளை முடிந்ததும் வாயிற் படிவரிசை வழி தற்காலிகமாக மூடப் பட, மக்கள் தெற்கு வாசலில் ஒடுங்கிய படி வரிசைகளில் ஏறி மண்டபத்தின் உள்ளே போகிறார்கள். நந்தியின் அபிஷேகத்தினைப் பார்ப்பதற்காக நேர் படிவரையில் கிழக்கு நோக்கியபடி வரிசை வரிசையாக மக்கள் நீக்க மற நிறைந்து அமைதியாக அமர்ந்திருக்கிறார் கள். நேரம் செல்லச்செல்ல - அந்தப் பரந்த மேடைப்பகுதியும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி விட்டது. அமைதியாக அமர்ந்திருந்த அனை வரும் நந்தியின் அபிஷேகத்தினை எதிர்பார்த் துக் காத்திருந்தனர்.

எட்டு அடி உயர நந்தி மண்டபத்தில் நந்திக்கும் - மண்டப விளிம்புக்கும் இடைப் பட்ட ஆறு அடி இடைவெளியில் இளம்பெண் ஒருவரின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்து கொண்டிருந்தது. மூலவரை நோக்கி நடனமாடிக் கொண்டிருந்த அப்பெண் பரத அபிநயங்களை அழகுறக் காண்பிக்கிறார். மண்டபத்தைச் சுற்றிவர இருந்தபடியும் - நின்ற படியும் பார்த்து ரசித்த மக்கள் கூட்டம் கைதட்டி உற்சாகப்படுத்துகிறது. சங்கீதம் - நடனம் இரண்டிலும் யான் ஞானசூனியமாக இருத்தலினால் நடன முத்திரைகள் பற்றி என்னால் விரித்துக் கூறமுடியவில்லை. நந்தி மண்டபத்தின் தென்கிழக்கு மூலைப்பகுதியில் நான்கைந்து அர்ச்சகர்களும் அவர்களது உதவியாளர்களும் அபிஷேகத்திற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சரி கீழே - நந்தி மண்டபத்தின் பின்புறமாக பத்துப்பேர்வரை வரிசையாக நிற்கிறார்கள். அவர்கள் முன்பாக 10 திவலைகள் (நேரான கொத்துக் கிடாரம்) சிறியதும் பெரியதுமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு அண்டாவிலும் புனுகு - ஜவ்வாது வாசனைத் திரவியங்கள், பன்னீர், எலுமிச்சை, பழங்கள், கற்கண்டு, நெய், பால், தயிர், பூவகை எனப் பலவும் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டிருக்கிறது. முகப்பு வாசல் வழியாக உள்ளே நுழையும் மக்கள் கூட்டம் சிறிய பைகளில் எதையெதையோ கொண்டு வந்ததை ஏற்கனவே யான் அவதானித்தேன். ஆகக் குறைந்தது ஒரு பைக்கற் பாலாவது கையில் இல்லாமல் யாரும் வந்ததாகத் தெரியவில்லை வெறும் கைகளை வீசியபடி உள்ளே நுழைந்த நமக்கு இந்தக் காட்சி வெட்கித் தலைகுனிய வைத்தது. அவரவர் கொண்டுவரும் அபிஷேகச் சாமான்களை தாமாகவே அண்டாக்களில் இடுகிறார்கள். பின்புறமாக நின்றிருந்த பத்துப்பேரும் இதற்குப் பூரணமாக உதவிபுரிகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த மேடைப் பகுதிகளிலும் படி வரிசைகளிலும் அமர்ந்திருந்தவர்களைவிட இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் நின்றபடியே அபிஷேகம் ஆரம்பமாவதை எதிர்பார்த்துக் காத்து நின்றனர். அமர்ந்திருந்தவர்களில் அநேகர் குனிந்தபடி காகிதங்களில் "ஓம் நமசிவாய" எழுதிக் கொண்டிருந்தனர். 36 வரிகள் கொண்ட 3 வரிசைகளில் 108 முறை "ஓம் நமசிவாய" எழுதிக்கொள்ளலாம். மடிமீது வைத்து எழுதுவதற்காக ஒவ்வொருவருக்கும் ஒரு தடித்த அட்டையும் கொடுக்கப்படுகிறது. இந்த அட்டையிலும் கடுதாசியிலும் குறித்த ஒரு நிறுவனத்தின் பெயர் மேலே பொறிக்கப்பட்டுள்ளது. விளம்பர சுயநலம் மேலோங்கி இருந்தாலும் இறைவன் தொண்டினில் பங்குகொள்ளும் பக்குவம் வந்தமைக்காக அவர்களுக்கு ஒரு "வணக்கம்" கூறலாம். "ஓம் நமசிவாய" எழுதப்பட்ட அந்தக் கடுதாசிகள் ஒன்று சேர்க்கப்பட்டு நந்தியின் பாதத்தருகே வைக்கப்பட்டிருந்ததைப் பின்னர் என்னால் காணமுடிந்தது.

நேரம் ஆக ஆக மக்கள் கூட்டம் அதிகரித்தது. பரத நாட்டிய நிகழ்ச்சி நிறைவடைந்து, நர்த்தகிக்குப் பொன்னாடை போர்த்திப் பட்டம் வழங்கிய அந் நிகழ்ச்சி மிகச் சொற்ப நேரத்தில் முடிவடைந்தது. நேரம் இப்போது 4மணி 50 நிமிடங்கள். நடன அரங்கேற்றம் நடந்த அதே இடத்தில் வயது முதிர்ந்த - சங்கையான - வாட்டசாட்டமான ஒரு அர்ச்சகர் நந்தியின் முகப்புப் பகுதிக்கு வந்து கைமணியை ஒலித்துத் தீபம் காட்டுகிறார். அதேவேளை பெரிய கோவிலின் கண்டாமணி பலமாக ஒலிக்கிறது. எங்கும், "ஓம் நமசிவாய", "சிவசிவ" என்கிற சத்தம் மேலெழுந்து வானிற் பரவுகிறது. குருக்கள் நிற்கும் மேடை (நந்திமேடை) தனியாக 8அடி உயரமுடையது என முன்னரே கூறினேன். அதனால் பல்லாயிரம்பேர் கூடியுள்ள அந்தப் பரந்த வீதியில் எந்த இடத்தில் இருந்தாலும்சரி - நின்றாலும் சரி தீப ஒளியினையும் - அபிஷேகத்தினையும் கண்குளிரக் காணமுடியும். நந்தியின் உயரம் 12 அடி. நீளம் 16அடி. அதன் எடை 25 டன். குருக்களால் நந்தியின் வாய்ப்பகுதிவரை மட்டுமே தீபத்தை உயர்த்திக் காண்பிக்க முடிகிறதெனின் நந்தியின் பிரமாண்டத்தை வாசக அன்பர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும். அந்த 8 அடி உயரமான மேடையில் நந்தியின் இடதுபுறமாக அகன்ற - உறுதிவாய்ந்த உருக்கு ஏணி வைக்கப்பட்டுள்ளது. உருக்கு ஏணியின் 3 படிகளிலும் 3 இளம் அர்ச்சகர்கள் நிற்கிறார்கள். உயர்ந்த படியில் நிற்பவர் நந்தியின் முற்பகுதியினையும், நடுப்படியில் நிற்பவர் நந்தியின் இடைப்பகுதியினையும், கடைப்படியில் நிற்பவர் நந்தியின் பிற்பகுதியையும் அபிஷேகிப்பதற்கு 3 அர்ச்சகர்களும் தயாராகிவிட்டனர். அர்ச்சகர்களுக்கு உதவிபுரிய நந்தியின் பாதமருகே சிலர் காத்திருக்கின்றனர். நந்தியின் பாதமருகே நின்றிருந்த அர்ச்சகரின் கைமணி ஓசையும், தீபாராதனையும், தொடர்ந்து ஒலித்த கண்டாமணி ஓசையும், "சிவ.... சிவ...." என எழுந்த பெருஞ் சத்தமும் அந்தச் சுற்றாடலை பக்திப் பரவசமாக்கியது. மேலே ஏணிப்படியில் நின்றிருந்த மூன்று அர்ச்சகர்களும் காவிரி நீரை நந்தியின்மீது ஊற்றி அபிஷேகத்தினை ஆரம்பிக்கிறார்கள். காவிரி நீரைத் தொடர்ந்து விபூதி, மஞ்சள் மா, அரிசிமாக்கரைசல், இளநீர், எலுமிச்சம்பழச்சாறு, கற்கண்டுக் கரைசல், பஞ்சாமிர்தம், புனுகு - ஜவ்வாது முதலிய வாசனைத் திரவியங்கள், தயிர், பசும்பால் என அடுத்தடுத்து அபிஷேகம் நடைபெறுகிறது. ஒவ்வொரு முறையும் நந்தியின் முன்பாக நின்றிருந்த அர்ச்சகர் தீபம் காண்பித்து முடிய நீரினாற் கழுவி அடுத்ததற்குப் போகிறார்கள். இறுதியில் சந்தன அபிஷேகத்துடன் சரியாக 5.40க்கு அபிஷேகம் நிறைவுக்கு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது நந்தியெம்பெருமானுக்குரிய அலங்காரம் ஆரம்பமாகிறது. மேலே நின்றிருந்த மூவரும், கீழே உள்ள மூன்று, நான்கு அர்ச்சகர்களுமாக நந்தியினை அலங்காரம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சந்தன அபிஷேகம் முடிந்து ஒற்றைத் தீபம் காண்பித்த உடனேயே, அமர்ந்திருந்தவர்களில் பலரும் எழுந்துகொள்ள சற்றே பரபரப்பு பற்றிக்கொள் கிறது. பலரும் வீட்டிலிருந்து வரும்போதே சில்வர் பாத்திரங்களில் தாங்கள் கொண்டு வந்திருந்த காப்பரிசியினை மக்களுக்கு விநியோகிப்பதனால் ஏற்பட்ட பரபரப்பே அது. அபிஷேகம் முடிந்த கையுடன் - முழுமையான தீபாராதனைகள் நடைபெற முன்பே காப்பரிசி கொடுப்பதும் அதனைப் பலரும் வாங்கி உண்பதுவும் எந்தவிதத்தில் சரி என்பது புரியவில்லை. நந்தியினதும், மூலமூர்த்தியினதும் பூசை ஆராதனைகள் நிறைவுபெற்ற பின்னரே காப்பரிசி கோயில்களில் வழங்கப்படுவதையே நாம் பொதுவாகப் பார்த்திருக்கிறோம்.

நந்திக்கான அலங்காரம் நிறைவுபெற்றுவிட்டது. நெற்றியில் திருநீற்றுப் பூச்சு, நடுவே பெரியதொரு சந்தனப்பொட்டு. அதன் நடுவே குங்கும திலகம். கழுத்தில் கட்டியிருக்கும் மணிக்கு தனிச் சந்தனச் சாந்து, இடையில் வெள்ளை வெளேரென அங்க வஸ்திரம், நந்தியின் பருமனுக்கு ஏற்றபடி அழகிய தடிப்பான மலர்மாலை... இவ்வாறு பார்த்துப் பார்த்து அழகுற அலங்கரித்தனர் அர்ச்சகர் பெருமக்கள். நேரம் 6.40. அலங்காரம் முடிந்த கையோடு இப்போது தீபாராதனைக்கான நேரம் நெருங்க மக்களிடையே மீண்டும் பரபரப்பு அதிகமாகிறது. நேரம் 6.45 கைமணிச் சத்தத்தினைத் தொடர்ந்து கோயிற் கண்டாமணி பெரும் ஓசையுடன் ஒலிக்க, அதற்கும் மேலாக "ஓம் நமசிவாய", "சிவசிவ" எனும் சத்தம் விண்ணைத் தொட்டு வந்து மீண்டும் மீண்டும் எதிரொலிக்க நந்தியின் முன்பாக மூன்று கற்பூர பஞ்சதீபங்கள் காண்பிக்கப்படுகிறது. நடுவே நிற்கும் அர்ச்சகர் பஞ்ச தீபத்தினை நந்தியின் முகம்வரை மேலே தூக்க - மற்ற இருவரும் தீபங்கள் நந்தியின் மடக்கிய பாதம்வரை பதித்து - மீண்டும் நடுத் தீபம் இறக்கப்பட ஏனையவை மேலே செல்ல - இவ்விதமாக மூன்று முறை காண்பிக்கிறார்கள். இந்தக் காட்சியினைக் காண்பதற்காகவே காத்திருந்த மக்கள் கூட்டம் "சிவசிவ" எனச் சத்தமிட்டபடி தத்தம் இருப்பிடங்களிலிருந்து எழுந்துகொள்ள எங்கும் ஒரே ஆரவாரம்.



தீப ஆராதனையின் பின்னர் பஞ்சபுராணம் பாடிய ஓதுவாரின் இசையில் மயங்காதவர்களே இல்லை எனலாம். கணீரென்ற குரலில் ஆழமான உச்சரிப்புடன் பாடப்பட்ட பஞ்சபுராணம் செவிகளில் தேனாகப் பாய்ந்தது. அந்த ஓதுவார் இன்னும் பலகாலம் நோய்நொடியின்றி வாழ்ந்து பிரகதீஸ்வரர் சந்நிதானத்தில் பஞ்சபுராணம் இசைக்க வேண்டும் என இறைவனை வேண்டிக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தியின் முன்புறமாக பரந்த மேடைப்பகுதியில், கொடிமரத்தின் கீழ் உள்ள பீடத்தில் பலநூறு சிட்டி விளக்குகள் ஏற்றப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. பரந்த மேடையின் இடது புறத்தே ஒரு ஓரமாக நான்கு சிறிய தூண்கள் கொண்ட சிறிய சந்நிதியில் குட்டி நந்தி ஒன்று வடக்குப் பார்த்தபடி உள்ளது. அந்த நந்தி படும்பாடு சொல்லமுடியாது. அர்ச்சகர் இல்லாமல் அவரவரே அறுகுமாலை சாத்தி - பொட்டு வைத்து - பூ வைத்து வணங்குகிறார்கள். அத்துடன், நந்தியின் இடது பக்கக் காதினை இழுத்துப் பிடித்தபடி - வலது கையினால் நந்தியின் கழுத்தை வளைத்து அணைத்துப் பிடித்தபடி நந்தியின் காதுக்குள் "வேண்டுதல் வைக்கும்" கூட்டம் வரிசையாக நிற்கிறது. இப்படி ஒரு நிலைமை அந்தச் சிறிய நந்திக்கு... படாதபாடு படுகிறது.... உள்ளன்போடு ஆண்டவனை வேண்டுதல் செய்து நமது பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியாதா?

ஏதோ ஒரு வரிசையில் மக்கள் இடம்பிடித்து நிற்கிறார்கள் என்று கூறினேன் அல்லவா....

**வரிசை1:**

மாலையிலிருந்தே, மகாமண்டபம் செல்லும் நேர் படிக்கட்டுகள் மூடப்பட மக்கள் பக்கவாட்டுப் படி வழியாக உள்ளே போய்க்கொண்டிருந்தனர். இப்போது அந்த மக்கள் வரிசை இன்னமும் நீண்டு - பருத்து ஒரு "ப" வடிவில் தெற்கு வீதியின் பெரும்பகுதியை மூடி நிற்கிறது.

**வரிசை2:**

மகாமண்டபத்தினூடாக உள்நுழைந்து மூலவரைத் தரிசித்த மக்கள் தெற்கு வாசல் வழியாக கீழிறங்கி, ஓட்டமும் நடையுமாகத் தெட்சணாமூர்த்தியைத் தரிசிப்பதற்காக ஒடுங்கிய படிக்கட்டுகளில் மேலேறிச் செல்கின்றனர். 15க்கும் அதிகமான அந்தப் படிக்கட்டுகள் ஒருவர் ஏறவும் - ஒருவர் இறங்கவும் மட்டுமே முடியுமான அகலம் குறைந்த படிக்கட்டாதலினால் வரிசை மிக நீண்டதாகக் காணப்பட்டது.

**வரிசை3:**

தென் பிரகாரச் சுற்று வீதியில் கிழக்குப் பார்த்தபடி ஒரு சிறிய சந்நிதியில் "வராகி அம்மன்" அருள் பாலிக்கிறார். அந்நாளில் ஏற்பட்ட படை எடுப்புகளின்போது தென் திருச்சுற்றிலிருந்த பரிவார மூர்த்தங்கள் அனைத்தும் அழிந்துபோய்விட, பிற்காலத்தில், மண்ணில் புதையுண்டு கிடந்த வராகி அம்மனைக் கண்டெடுத்து இந்தச் சிறு சந்நிதியில் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். வேண்டுவன அருளும் வரப்பிரசாதியாக வராகி அம்மன் விளங்குவதால் அம்பாளுக்கு விசேடமான விழாக்கள் பலவுண்டு. சிறப்பு வாய்ந்த வராகி அம்மனைத் தரிசிக்க மாலையிலிருந்தே வரிசையில் போய்க்கொண்டிருந்த மக்கள் கூட்டத்துடன், இப்போது வந்து சேர்ந்தவர்களுமாக பெரிய நீண்ட மக்கள் வரிசை வளைந்து வளைந்து காணப்படுகிறது.

---

தை 2009 ஞானச்சுடரில் "**தஞ்சைப் பெரிய கோவிலும், கங்கை கொண்ட சோழபுரமும்**" என்ற ஒப்பீட்டுக் கட்டுரையில் மேலும் விபரங்கள் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரிசை4:**

நந்தி மண்டபத்தின் கீழே உள்ள பரந்த மேடையில் (முன்பு அமைதியாக மக்கள் அமர்ந்திருந்த இடம்) வளைந்து நெளிந்து நிற்கும் பெரிய வரிசை இது. இந்த வரிசையானது நந்தி மண்டபத்தின் தென்புறப் படிகளில் ஏறிச்சென்று நந்தியின் திருப்பாதங்களுக்கு அருகே அர்ச்சகரிடம் திருநீறு வாங்கவும் அர்ச்சனைப் பொருட்கள் வாங்கவும் காத்திருக்கும் நீண்ட வரிசை இது. வாசலினூடாக உள்ளே வரும்போதே - உரிய இடத்தில் பணம் கொடுத்து அர்ச்சனைக்கான அடையாளத்துண்டு. (ரோக்கின்) பெற்று கைகளில் வைத்திருக்கிறார்கள். இவர்கள் திருநீறு பிரசாதம் பெற்றுக் கொண்ட பின்னர் வடபுறப் படி வரிசையினூடாக கீழிறங்கி வருகிறார்கள். அப்படி வந்த ஒருவரிடம் கொண்டு வந்த பையினை வாங்கிப் பார்த்தேன். இங்கு கோவில்களில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதால், சாதாரண கடுதாசியைவிடத் தடிப்பான - பார்வைக்கு ரிசூபை போன்ற அமைப்புக் கொண்ட - நிலத்தில் போடப்பட்டாலும் ஒரு சில நாளில் உக்கிப் போகக்கூடிய ஒரு வகைப் பை அது. (இந்தப் "பை" நடைமுறையினை நாமும் எமது கோவில்களில் நடைமுறைப்படுத்திப் பார்க்கலாமே) அதனுள்ளே பாதித் தேங்காய், 1 வாழைப்பழம், 1 வெற்றிலை, 1 பாக்கு, பூவகை ஆகியன இருந்தன. "உங்களுடைய அடையாளத் துண்டின் இலக்கம் என்ன" என்று கேட்டேன். "347" என பதில் தந்தார். நந்தி மண்டப தென்புறப் படிகளில் ஏறிச்செல்ல இதைவிட இரு மடங்கானோர் காத்திருப்பது தெரிந்தது.

**வரிசை5:**

வாசலினூடாக உள்ளே வரும்போது கிழக்கு வீதியில் (நந்தி மண்டபத்திற்கு சரி தென்கிழக்கு மூலையில்) ஓரளவான உயரமுடைய ஒரு நாடக மேடையளவு கொண்ட திறந்த மேடை ஒன்றுள்ளது. நமது வசதிக்காக இதனைப் "பிரசாதமேடை" என்றழைப்போம். இந்தப் பிரசாத மேடையில் பெரிய பெரிய அண்டாக்களில் பிரசாதங்களை வைத்து வழங்குகிறார்கள். எல்லா இடங்களிலும் தரிசனத்தை முடித்துக்கொண்ட அனைவரும் இப்போது இந்த வரிசையில் இணைந்து கொள்வதால் "இந்த வரிசைக்கு முடிவே இல்லையோ" என எண்ணும் அளவிற்கு வரிசை நீண்டு செல்கிறது. "வரிசையில் மக்கள் கூட்டம்" என நான் சொல்கிறபோது 50, 100பேர் எனக் கற்பனை செய்தால் அது பெரிய தப்பாகிவிடும். ஒவ்வொரு வரிசையிலும் ஆயிரக்கணக்கானோர் என்பதை நினைவிற் கொள்ளவும்.

பிரதோஷ அபிஷேகத்தை ஏற்றுக்கொள்ளும் மூலவர் முன்பாக நந்தி மண்டபத்தில் உள்ள இப்பெரிய நந்தி இராஜராஜசோழன் - பிரதிஷ்டை செய்த நந்தியல்ல. சோழ மன்னனால் பிரதிஷ்டை செய்த நந்தியானது (இப்போதுள்ள நந்தியைவிட சற்றே உருவத்தில் சிறியது) வராகி அம்மன் சந்நிதிக்கு வலதுபுறமாக உள்ள நீண்ட மண்டபத்தில் வடக்குப் பார்த்தபடி வைக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்தின் பின் வந்த நாயக்கர் கால மன்னனின் எண்ணத்தில் "கோயில்- கோபுரம்- லிங்கம்" ஆகியவற்றின் பிரமாண்டங்களுக்கு முன்னால், "இந்த நந்தி பொலிவாக இல்லை... சிறிதாக உள்ளது" என்ற எண்ணம் தோன்றியதால், சிறிய நந்தியை அகற்றி மண்டபத்தில் வைத்துவிட்டு, ஒரே கல்லிலான இப்போதுள்ள பெரிய நந்தியைப் பிரதிஷ்டை செய்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாத மேடையில் பிரசாதம் பெற்றுக்கொள்ளும் மக்கள் அப்படியே நடந்து முகப்பு வாசல் வழியாக வெளியேறிக் கொண்டிருந்ததால் மக்கள் கூட்டம் குறையத் தொடங்கியது. நந்தி மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் கால்களைத் தொங்கவிட்டபடி களைப்பு நீங்க ஆறுதலாக அமர்ந்திருந்த அந்த வயது முதிர்ந்த அர்ச்சகரை பரந்த மேடைப் பகுதியில் நான் நின்றபடியே நிமிர்ந்து பார்த்துக் கேட்டேன். “சுவாமி! நந்தி பூஜை முடிந்ததும் மூல மூர்த்திக்கு பூசை நடைபெறவில்லையே. ஏன்?” கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால், அண்மைக் காலமாக மூலலிங்க பூசையினை மாலை 4 மணிக்கே முடித்துக்கொள்கிறோம். அதன் பின்னர் குறித்த நேரத்தில் நந்திபூசையை ஆரம்பிக்கிறோம்” என்றார். இந்த பதில் எனக்கு ஆச்சரியமாகவும், ஓரளவு அதிர்ச்சியாகவும் இருந்தது. நந்திபூசை முடிந்ததும் மூலவருக்கு சோடோபசாரத்துடன் கூடிய விசேட பூசை நடைபெறுவதும், பிரதோச காலத்தில் மட்டுமே சிவனின் ஐந்து முகங்களுக்குமான தீபாராதனை நடைபெறுவதையும் பல இடங்களில் பார்த்திருக்கிறேன்.

ஈசானிய மூலையில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய மகாமண்டபத்துடனான தனிக் கோவிலில் நடராஜ மூர்த்தி அருள்பாலிக்கிறார். அந்த நடராஜ சபை மண்டபத்திலிருந்து சுவாமி- அம்பாள் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெறுகிறது. ஏற்கனவே அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருந்த உருவத்தில் சிறிய சுவாமி- அம்பாள் உற்சவ மூர்த்தங்கள் மிகச் சிறியதொரு இடப வாகனத்தில் சரியாக 7.30க்குப் புறப்படுகிறது. பிரதோஷ வேளையில் லெட்சக்கணக்கானோர் கூடியிருந்த அந்த இடத்தில், ஒரு நூற்றுக்கும் குறைவான பக்தர்கள் முன்னும்பின்னுமாகத் தொடர்ந்துவர, ஒற்றைத் தீவட்டி ஒளியில் சுவாமி வீதிவலம் வருகிறது. சுவாமிக்குப் பின்னே நமச்சிவாயப் பதிகத்தை இசைத்தபடி அடியார் கூட்டம் பின்தொடர்கிறது. குறுக்கும் நெடுக்குமாக வரிசைகளில் நின்ற மக்கள் விலகி வழிவிட, எட்டுத் திசைகளிலும் தீப ஆராதனை நடைபெற்று, இராசராசேச்சரத்தின் பெருவீதியினை 15 நிமிடங்களில் வேக நடையுடன் கடந்து மீண்டும் நடராஜர் சபை வந்து சேருகிறது.

மக்கள்கூட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டதால், நேர் பாதையினூடாக மகாமண்டபம் கடந்து சென்று மூலவரைத் தரிசித்தோம். விசேட அலங்காரத்தில் தஞ்சைப் பெருவுடையார் இராசராசேச்சரமுடையார்- பிரகதீஸ்வர சுவாமியின் திவ்விய தரிசனம் மனதுக்கு முழுமையான நிறைவைத் தந்தது. கரங்கூப்பி, கண்களை மூடி, “சிவசிவ” என மனத்திற் தியானித்தபின் நிரம்பிய மனத்தோடு மகாமண்டபம் கடந்து வெளியே வருகிறோம். அப்பொழுதும் கூட பிரசாத மேடையில் பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்தனர். அந்த வரிசையில் இணைந்து நாமும் வாழையிலையில் பிரசாதம் பெற்று முகப்பு வாயில் தாண்டி வெளியே வருகிறோம். அதிகளவு வெல்லப் பொங்கல், சிறிதளவு பஞ்சாமிர்தம், சிறிதளவு இறுக்கமான பாயாசம் என்பன வாழையிலையில் இருந்தது. ஆவல் அதிகமாக வெல்லப் பொங்கலில் சிறிதளவு எடுத்து வாயிற் போட்டால்.......... ஆஹா என்ன ருசி............ என்ன ருசி........... அமிர்தம் என்பது இதுதானோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதானிக்கப்பட்ட சில முக்கிய அம்சங்கள்

1. மூலவருக்கான பூசை 4 மணிக்கே நடைபெற்று முடிவது.

2. நந்தியின் அபிஷேகம் முடிந்ததும் (தீப ஆராதனை நடைபெற முன்னரே) பலராலும் காப்பரிசி கொடுக்கப்படுதலும்- அதனை அனைவரும் பெற்று உண்ணுவதும்.

3. மிகக் குறைந்த ஒளியில்- தனியொரு தீவட்டியுடன் சுவாமி அம்பாள் வீதிவலம் வருவது.

4. அட்ட திக்குகளில் நிவேதனம் எதுவுமின்றி, வெறுமனே தீபம் மட்டும் காண்பிப்பது.

5. வீதி உலா முடிந்த பின்னர் கும்பம் வைத்துப் பாதநீர் ஊற்றி, மேளம் சுற்றிவருவது இல்லாதிருப்பது.

6. தினமும் பல்லாயிரம் பேரும், சாதாரண பிரதோச காலத்தில் 30,000பேர் முதல் 40,000பேரும், சனிப் பிரதோச காலத்தில் 80,000முதல் ஒரு லெட்சம்பேர் வரை கூடும் இத் திருத்தலத்தில் ஒழுங்கான - நேர்த்தியான கழிப்பறை வசதியில்லாதிருப்பது (ஆகக் கொடுமையான விடயம்: முதலாவதிற்கு 3 ரூபாவும், இரண்டாவது 5ரூபாவும் வசூலிப்பது)

**பி.கு:** 1) கோயிற் சுற்றுலா, ஸ்தல தரிசனத்திற்காக தமிழகம் செல்லும் அன்பர்கள் தஞ்சைப் பெரிய கோவிலின் சனிப்பிரதோஷ அபிஷேகத்தினை ஒருமுறை யேனும் பார்த்துப் பயன்பெற வேண்டும்.

2) கோயிற் சுற்றுலா, யாத்திரைகள் ஒழுங்குசெய்வோர், ஒரு சனிப்பிரதோஷ நன்னாளில் தஞ்சைப் பெரிய கோவிலின் அபிஷேகம் காணுமாறு சுற்றுலா ஒழுங்குகளை மேற்கொண்டால் பலரும் பிறந்ததன் பிறவிப் பயனை அடைவர்.

## துயர் பகிர்கின்றோம்



ஆச்சிரமத்தின் செயற்பாடுகளுக்கு ஊன்றுகோலாக விளங்கியதோடு அச்செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டுவரும் திரு கணேசமூர்த்தி அவர்களின் பாசமிகு துணைவி திருமதி சுஜந்தி கணேசமூர்த்தி 17.05.2013 திடீரென மறைந்ததையிட்டு ஆச்சிரமமும் பேரவையினரும் ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரது ஆத்மா சந்நிதி வேலவனின் பாதக்கமலங்களைச் சென்று இரண்டறக் கலக்க வேண்டி நிற்பதோடு அன்னாரது குடும்பத்துடன் எமது துயரைப்பகிர்ந்து நிற்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

07.06.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"பண்ணிசை"

வழங்குபவர் :- திரு வல்லிபுரம் பரமேஸ்வரன் அவர்கள்

[இளைப்பாறிய அதிபர்]

(பக்கவாத்திய சகிதம்)

---

14.06.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

வழங்குபவர் :- கலாவித்தகர் திருமதி சபிதா கதிரமலை அவர்கள்

[யா/ உரும்பராய் இந்துக்கல்லூரி]

(பக்கவாத்திய சகிதம்)

---

21.06.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

28.06.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு க. நவரத்தினம் அவர்கள்

[இளை. ஆசிரியர், நெல்லியடி]

186ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org